# உதயன்




www.onlineuthayan.com

32பக்கங்கள் சுடர் 28 கதிர் 037 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 18 புதன்கிழமை (02/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# பிரதம நீதியரசரை பதவி நீக்க முயற்சி அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## ஐ.நா. சிறப்பு பிரதிநிதி வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 2

''பிரதம நீதியரசரை பதவி நீக்க எடுத்து வரும் நடவடிக்கைகளை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான விசாரணைகளில் நியாயமான ஒரு விசாரணைக்கான அடிப்படை தன்மைகள் எவையும் காணப்படவில்லை. ஒரு நியாயமான விசாரணைக்குரிய அம்சங்கள் மதிக்கப்படாத நிலையே காணப்பட்டது.

இலங்கையில் நீதிபதிகளும், நீதித்துறை அதிகாரிகளும் கடுமையான அச்சுறுத்தல் மற்றும் தாக்குதலுக்கு ஆளாகின்ற சம்பவங்கள், நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு ஊறு ஏற்படுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடும்.



இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரத்துக்கான ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி கேப்ரியேலா கனுால்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் இலங்கையில் நிர்வாகத்துறையும், நாடாளுமன்றமும் பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்குவதற்கு முயற்சிகளைமேற்கொண்டு வருகின்றன. ஆனால் அத்தகைய நடவடிக்கை குறித்து இலங்கை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும். பிரதம நீதியரசர் மீதான இத்தகைய நடவடிக்கை இலங்கையில் நீதித்துறை மீது தொடர்ச்

பார்க்க பக்கம் 4

# அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இல்லை

## அரசியல் நெருக்கடிகளே காரணம்

கொழும்பு, ஜன.2

அமைச்சரவை மாற்றம் இவ்வருட முற்பகுதியில் இடம்பெறும் என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்பட்ட போதிலும், அது இப்போதைக்கு இல்லை என்று அறியவருகிறது. தற்போதைக்கு அமைச்சரவையில் எந்தவிதமான மாற்றங்களையும் மேற்கொள்ளாதிருக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

அரசியல் களத்தில் அரசு, பல நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்ற நிலையில், அமைச்சரவை மாற்றங்களை மேற்கொண்டால் அது ஆளுந்தரப்பு பங்காளிக் கட்சிகளிடையே கசப்பான மனவுணர்வுகளைத் தோற்றுவிக்கும். அத்துடன், இந்த இறுக்கமான சூழ்நிலையில் இது அரசுக்கு பெரும் சவாலான நிலைமைகளைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ள முடிவுக்கு வந்துள்ளார்என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விவகாரத்தால் நிறைவேற்று,

பார்க்க பக்கம் 4

# 2013 இல் சிறந்த சுற்றுலாத் தலமாக இலங்கை

கொழும்பு, ஜன.2

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த சுற்றுலாத்தலமாக இலங்கை காணப்படுவதாகப் பிரிட்டன் ஏர்வேஸ் நிறுவனம் தெரிவுசெய்துள்ளது.

இலங்கையில் இயற்கை அழகுகள் மிகுந்த இடங்கள்,

பார்க்க பக்கம் 4

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.02

இலங்கையில் உள்ள பாடசாலைகள் யாவும் 2013ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக் கற்றல் செயற்பாடுகளுக்காக இன்று ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணத்தில், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள் திருத்தப்படும் நிலையங்களாக செயற்படுவதால் அவை எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

(ந-4)

# '13' ஐ ஒழித்துக் கட்டுக

## வருடத்தின் முதல் கோரிக்கை இது என்கிறது தேசிய ஒன்றியம்

கொழும்பு, ஜன.2

2013ஆம் ஆண்டுக்குள் அரசு அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு முடிவு கட்ட வேண்டும். இவ்வருடத்தில் அரசிடம் நாம் விடுக்கும் முதலாவது கோரிக்கை இது தான் என்று தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்துடன், '13'ஐ ஒழித்துக் கட்டுவதற்கான எமது போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்போவதாகவும் அவ்வமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

2013ஆம் ஆண்டில் தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்பின் பிரகாரம் நிலையானதொரு தீர்வு காணப்படும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் ராஜித்த சேனாரட்ண தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவ்வொன்றியத்தின் உறுப்பினரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய அரசால் பலவந்தமாக எமது நாட்டு அரசமைப்புக்குள் புகுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை உடனடியாக நீக்கவேண்டும் என அரசுக்கு நாம் கடந்த வருடம் பல தடவைகள் அழுத்தங்களைப் பிரயோகித்தோம். இதற்கமைய அரசு இதுவிடயம் தொடர்பில் பரிசீலித்து வருகின்றது என நாம் நம்புகின்றோம்.

எனவே, அந்த அடிப்படையில் 2013 ஆம் ஆண்டுக்குள் குறித்த திருத்தத்தை அரசமைப்பிலிருந்து அரசு நீக்கவேண்டும். மலர்ந்திருக்கும் புத்தாண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் நாம் விடுக்கும் கோரிக்கை இதுதான். அத்துடன், '13'ஐ

பார்க்க பக்கம் 4

# மருத்துவர் சிவசங்கர் தொடர்ந்தும் தடுப்பில்

யாழ்ப்பாணம், ஜன. 02

கைது செய்யப்பட்டுள்ள மருத்துவர் இ.சிவசங்கர் நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை. அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட இருந்தார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மாங்குளம் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரிடம் மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டியிருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். ''மருத்துவர் சிவசங்கர் தொடர்ந்தும் பொலிஸ் நிலையத்திலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளார்'' என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்க யாழ். கிளையின் தலைவர் மருத்துவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

மருத்துவர்கள் சிலர் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று மருத்துவர் சிவசங்கரைப் பார்வையிட்டனர். செவ்வாய்க்கிழமையன்று (நேற்று) சிவசங்கர் நீதிமன்றில் நிறுத்தப்

பார்க்க பக்கம் 4

# பல்கலைக்கழகம் வழமைக்கு திரும்புவது மேலும் தாமதம்

## மாணவர் விடுவிக்கப்படாமையால் முடிவெடுப்பதில் சிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.02

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கற்றல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் விஞ்ஞான பீட மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் அடுத்த வாரம் சந்தித்துப் பேச உள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சபை நேற்றுக் கூடியது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்படாதிருக்கும் வரையில் கற்றல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை என்று கூட்டத்தில் ஆணித்தரமாக எடுத்துக் கூறப்பட்டது என்று விரிவுரையாளர்கள் கூறினர். எனினும் முடிவு எதனையும் எட்டுவதற்கு முன்னர் மாணவர்களுடன் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்

பார்க்க பக்கம் 4

# உயர்கல்வி அமைச்சருடன் பல்கலைக்குழு நாளை சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.02

யாழ். பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பது குறித்து பல்கலை நிர்வாகிகள் அடங்கிய குழுவினர் நாளை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை சந்திக்கவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் அனைத்து பீடங்களின் பீடாதிபதிகளும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் இன்று கொழும்புக்கு செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி கார்த்திகை விளக்கீடு அன்று பல்கலையில் தீபம் ஏற்றிய சம்பவத்தையடுத்து மாணவர் விடுதிகளுக்குள்

பார்க்க பக்கம் 4

# பயங்கரவாதிகளுக்கு 'ஹலால்' நிதியா? உடன் வந்து விசாரணைகளை நடத்துக

## புலனாய்வுப் பிரிவுகளை அழைக்கிறது உலமா சபை

கொழும்பு, ஜன.2

ஹலால் சான்றிதழ் நிதி பாவனை தொடர்பில் பொதுபல சேனா முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாகத் தமது அலுவலகத்துக்கு வந்து விசாரணையை நடத்தி உண்மையைக் கண்டறியுமாறு உலமா சபை தேசிய புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கு எழுத்து [illegible] விடுக்கத் தீர்மானித்துள்ளது.

விசாரணையின் பின்னர் உண்மை நிலைமையை அரச மேலிடத்தின் ஊடாக சிங்கள மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் உலமா சபை முன்வைக்கத் தீர்மானித்துள்ளது.

அத்தோடு, இப்பிரச்சினையைப் பூதாகரமாக்கும் பொதுபல சேனா அமைப்பைச் சந்தித்து அவர்களுக்கு உண்மையை ஆதாரங்களுடன் விளக்குவதற்கான ஏற்பாட்டிலும் உலமா சபையின் ஹலால் சான்றிதழ் பிரிவு ஈடுபட்டுள்ளது.

தமது கணக்கறிக்கைகள் மிகவும் தெளிவாகவும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் உள்ளன என்று தெரிவித்திருக்கும் உலமா சபை, மக்கள் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக எவர் வேண்டுமானாலும் அந்த அறிக்கைகளை ஊடகங்களில் பிரசுரிக்க முடியும்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் அவலங்களுடன் பண்டாரவன்னி கிராம மக்கள்

*முல்லைத்தீவு,ஜன.2*

***வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ள பண்டாரவன்னிக் கிராம மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.***

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இந்தப் பண்டாரவன்னிக் கிராமம் அமைந்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இங்கு வாழ்ந்து வந்த மக்கள் கடந்த 30 ஆம் திகதி தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

ஆனால் அவர்களது உடைமைகள் யாவும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் இவர்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இவர்களின் குடிசைகளின் நிலப்பகுதி ஈரத்தில் ஊறிய நிலையில் காணப்படுவதால் அங்கு இருக்க முடியாத நிலையில் இவர்கள் காணப்படுகின்றனர்.

மேலும் மாற்று உடைகள், சமையல் செய்வதற்குத் தேவையான பாத்திரங்கள் எவையும் இல்லாததால் இவர்களின் நிலை மோசமாக மாறியுள்ளது.

சுமார் 65 குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

இவர்களைப் போன்றே வசந்தபுரம் கிராம மக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை முத்து ஐயன்கட்டிலுள்ள ஜீவநகர், 18 ஏக்கர், 19 ஏக்கர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது உடைமைகள் யாவற்றையும் இழந்ததோடு இவர்களில் சிலரின் வீடுகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இவர்கள் கூலிவேலை செய்தே தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். தற்போது அதுவுமின்றி அன்றாட உணவுக்கே அல்லற்படுவதைக் காண முடிகின்றது.

இதேவேளை கிராமங்களைச் சூழ்ந்து வெள்ளம் தேங்கியுள்ள நிலையில் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், அமைப்புகள், இளைஞர்கள், பொலிஸார், இராணுவத்தினர் எனப் பலரும் கொட்டிய மழை மற்றும் வெள்ளத்தைக் கவனத்தில் கொள்ளாது படகுகள் மூலமாக மக்களை மீட்டெடுத்ததுடன், சமைத்த உணவுகளையும் தேவையான உதவிகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## வீட்டுத் தோட்டச் செய்கையால் சுகதேகிகளாக கிளிநொச்சி மக்கள்

### கிளிநொச்சி அரச அதிபர் பெருமிதம்

அக்கராயன், ஜன.2

வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள் இயற்கையை ஒட்டியதாக உற்பத்திகளை மேற்கொள்வதால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் சுகதேகிகளாக வாழும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தினால் கடந்த 26 ஆம் திகதி நடத்தப்பட்ட சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

இங்கு எள்ளினால் உருவாக்கப்பட்ட மோதகம், கௌபி தானியத்தில் தயாரிக்கப்பட்ட வடை, பழரசம் என்பன எமக்கு வழங்கப்பட்டன. இவை மிகுந்த சுவையுடையனவாக இருந்தன. இவை எமது மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் உற்பத்தி என்பதால் எனக்கு மகிழ்வைத் தருகின்றது.

விவசாயிகளின் மேம்பாட்டுக்கு நாமும் பல உதவிகளை வழங்கி வருகின்றோம். விவசாயத் திணைக்களத்தினர் மாணவர்கள், அரச அலுவலர்கள் மத்தியிலும் போட்டிகளை நடத்துவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வீட்டுத் தோட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. மேலும் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்கும் முகமாக பழமரக்கன்றுகளும், விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்

வவுனியா,ஜன.2

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட நால்வர் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மருதநகர் பகுதியில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கக் கிளையை உடைத்து பொருள்களைத் திருட முற்பட்ட ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் 14 வயதுச் சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வவுனியா நகரப் பகுதியில் 18 கிலோ பன்றி இறைச்சியை ஓட்டோ ஒன்றில் கொண்டு சென்ற நபரொருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியாப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இடியன் துவக்கு ஒன்றை வைத்திருந்த வவுனியா கட்டையன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் மோகன் என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (க-86)



*பூநகரி வேரவில் பகுதியில் மின்கம்பங்களை நடும் பொருட்டு மரங்கள் தறித்து வீழ்த்தப்படும் அதேவேளை அக்கராயனிலிருந்து ஜெயபுரத்துக்கான மின்னிணைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெறுகின்றன. (க-405)*

## மன்னார், கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிப்புற்ற சிறார்கள், முதியோருக்கு உதவுங்கள்

### பிரதேசசபை உறுப்பினர் வேண்டுகோள்

மன்னார்,ஜன.2

மன்னாரிலும், கிளிநொச்சியிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும், முதியவர்களுக்கும் உதவுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் வலி.மேற்குப் பிரதேசசபை உறுப்பினரான த.நடனேந்திரன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 15 வருட கால வரலாற்றில் மன்னார்ப் பிரதேசம் வரலாறு காணாத அழிவுகளைச் சந்தித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட மக்களும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த மக்களின் வாழ்வு தற்போது சீர்குலைந்த நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் சிறுவர்கள், வயோதிபர்கள், குழந்தைகள் எனப் பலரும் துன்பமான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அனைத்து அன்பு உள்ளங்களும் முன்வர வேண்டும். உதவிகளை வழங்க விரும்புவோர் மன்னார் பிரதேச சபைச் செயலாளர் ஊடாக வழங்க முடியும்.

காலம் தாழ்த்திய உதவி பயன்தராது என்பதால் சிறுவர்களுக்கும் முதியோருக்கும் தாமதமின்றி உதவிகளை வழங்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

## குஞ்சுக்குளம் கிராமத்திலிருந்து திரும்பிச் சென்றன நிவாரணப் பொருள்கள்

### பாகுபாடான விநியோகமே காரணம்

*மன்னார்,ஜன.2*

*மன்னார் குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் மிகவும் குறைந்த அளவில் இருந்ததால் அவை மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக குஞ்சுக்குளம் பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.*

*மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் மழை மற்றும் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராம மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த நிலையில் மன்னார் மாவட்டச் செயலகத்தால் இந்தக் கிராமத்துக்கு படகுகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட உலர் உணவுப்பொருள்கள் முழுமையாக வந்தடையாததன் காரணத்தால் அவற்றை பகிர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அவற்றை திருப்பி அனுப்பி வைத்துள்ளதாக குஞ்சுக்குளம் பங்குத்தந்தை லக்டன் டி சில்வா தெரிவித்தார்.*

*முசலி பிரதேசத்துக்கு 35 படகுகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட உலர் உணவுப்பொருள்களில் குஞ்சுக்குளம் கிராமத்துக்குரியனவும் இருந்தன. ஆனால் மன்னார் மாவட்ட செயலகத்தால் எமக்கு தெரிவிக்கப்பட்ட தொகைகளையும் விட மிகவும் குறைவான உலர் உணவுப் பொருள்களே எம்மை வந்தடைந்தன. இதற்கு குஞ்சுக்குளம் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.*

*அவற்றைத் திருப்பி அனுப்பி மன்னார் மாவட்டச் செயலகத்தில் கையளிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.*

*இந்த நிலையில் அவை தற்போது மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை மாவட்டச் செயலாளரிடம் திருப்பிக் கையளிக்கப்படவுள்ளன.*

*அதிகளவான நிவாரணப்பொருள்கள் முசலிப் பகுதிக்கே கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், அரச அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதாகவும் தெரிவித்த குஞ்சுக்குளம் பங்குத்தந்தை இவை குறித்து உடனடியாக இடர் முகாமைத்துவ அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.*

*(க 12)*

## ஓய்வுபெற்ற பணியாளர்கள், அங்கத்தவர்களுக்கு தங்கப்பதக்கம்

### ஒட்டுசுட்டான் பனை தென்னைவள சங்கம் முன்மாதிரி

முல்லைத்தீவு,ஜன.2

ஒட்டுசுட்டான் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஓய்வுபெற்ற எட்டு அங்கத்தவர்களும், இரண்டு பணியாளர்களும் தங்கப் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.


இந்த நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை கற்சிலைமடுவில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் செ. மதியழகன் தலைமையில் இடம்பெற்றது.

ஓய்வு பெற்றவர்கள் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றிவைக்கப்பட்டது. அதன் பின்னர் இறைவணக்கத்தைத் தொடர்ந்து இடர்களின் போது உயிர் நீத்த அங்கத்தவர்கள், பணியாளர்களை நினைவு கூர்ந்து இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அக வணக்கத்தைத் தொடர்ந்து சங்கத்தின் பொது முகாமையாளர் வி.உதயச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கருத்துரைகளை முன்னாள் சங்கத் தலைவர் [illegible] செல்வராணி, மகளிர் குழுத் தலைவி திருமதி லக்கிராணி [illegible] ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை சங்கங்களின் இணையப் பொது முகாமையாளர் சி.வேத வனம் நிகழ்த்தினார்.

ஓய்வு பெற்றவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



(க-500)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.2

*யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை பிரதேச செயலர்கள் வடமாகாண சபைக்கும், வடமாகாண சபையில் பணியாற்றும் 3 பேர் பிரதேச செயலர்களாகவும் வருடாந்த இடமாற்றத்தில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த போதும் குறித்த இடமாற்றங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.*

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இருந்து குறித்த 'பக்ஸ்' கிடைத்துள்ளது என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

வருடாந்த இடமாற்றத்தின் பிரகாரம், யாழ்ப்பாண பிரதேச செயலராக கடமையாற்றி வரும் ரி.சுகுணரதி வடமாகாண சபைக்கும், வடமாகாண காணி ஆணையாளராகக் கடமையாற்றி வரும் பி.தயானந்தா நல்லூர் பிரதேச செயலராகவும், சாவகச்சேரி பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி அ.சாந்தசீலன் வடமாகாண சபைக்கும், வடமாகாண சபையில் ஆளுநரின் உதவிச் செயலராக கடமையாற்றும் பி.வாகீசன் சாவகச்சேரி பிரதேச செயலராகவும்,

வேலணைப் பிரதேச செயலராகக் கடமையாற்றும் திருமதி எஸ்.மஞ்சுளா வடமாகாண சபைக்கும், வடமாகாண சபையில் கடமையாற்றி வரும் கே.சிவகரன் வேலணைப் பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட இருந்தனர்.

இந்த இடமாற்றங்கள் நேற்று முதல் நடைமுறைப் படுத்தப்படுவதாக இருந்தது.

இருப்பினும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் குறித்த இடமாற்றங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)



அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புத்தாண்டை முன்னிட்டு விசேட அபிஷேகம் நேற்று இடம்பெற்றது. பூசை முடிந்து அம்பாள் உள் வீதியுலா வருகிறாள்.

(ம-253)

## தவறி வீழ்ந்ததில் குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,ஜன.2

புதுவருட தேவைக்காக தேங்காய் பிடுங்க மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்ததில் முள்ளந்தண்டு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று வரணி வடக்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த யோசப் யேசுராசா (வயது 45) என்பவர் மரத்தால் வீழ்ந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ம-9)

## சாவகச்சேரி நகரசபைக்கு அபிவிருத்தி அலுவலர்

தென்மராட்சி,ஜன.2

சாவகச்சேரி நகரசபைக்கென சனசமூக அபிவிருத்தி அலுவலர் நியமிக்கப்பட்டு நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் கடமையாற்றிய த.கிருபாகரன் சாவகச்சேரி நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் சனசமூக அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றிய திருமதி செல்வராணி ஜெகதீஸன் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேசசபை ஆகியவற்றில் வாரத்தில் ஒரு நாள் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## இலவச கணினி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

பளை,ஜன.2

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையால் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணினிப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பளை முல்லையடியில் உள்ள பேரவை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு பேரவை செயலாளர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார்.

பேரவையால் இதுவரை ஐந்து கட்டங்களாக நடத்தப்பட்ட கணினிப் பயிற்சி வகுப்பில் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் இளைஞர் யுவதிகளும் பங்குபற்றி சான்றிதழ்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை விழா திங்களன்று

யாழ்ப்பாணம்,ஜன.2

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 88 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அறக்கொடை விழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதனும் கௌரவ விருந்தினராக அமெரிக்காவைச் சேர்ந்த ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகளும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ச. ஸ்ரீபவானந்தராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் முத்துக்குமாரசாமிசர்மா உமாசங்கர், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை ஆலயத் திருப்பணி மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண்கள் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுக்கு அறக்கொடை வழங்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் திறமையுடைய வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்கான கல்வி நிதி சிவத்தமிழ் செல்வி கல்வி நிதியத்தால் வழங்கப்படும்.

அத்துடன் சிரேஷ்ட வைத்திய கலாநிதி திருமதி ஜெ. கணேசமூர்த்தி, கலாபூஷணம் கணபதிப்பிள்ளை, முன்னாள் பரீட்சை செயலாளர் சி.கந்தசாமி, தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் முன்னாள் உபதலைவர் ந.செல்வநாயகம், இளைப்பாறிய ஆசிரியர் மாதாஜி சிவமயச்செல்வி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அம்மையார், ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் இணைச் செயலாளர் நா.தவநாதன் ஆகியோருக்கு சிவத்தமிழ்ச் செல்வி விருது இம்முறை வழங்கப்படவுள்ளன. (ம-14-86)

## மழையால் சேதமான வீதிகளை தற்காலிகமாகத் திருத்த முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாகச் சேதமடைந்த வீதிகளை தற்காலிகமாகப் புனரமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மழையால் பெரும்பாலான வீதிகள் சேதமடைந்துள்ளதுடன் வீதிகளின் நடுவே பெரிய குழிகளும் காணப்படுகின்றன.

'காப்பெற்' போடப்பட்ட வீதிகளைத் தவிர ஏனைய வீதிகளில் பெரும்பாலானவை இந்த நிலைமையிலேயே காணப்படுகின்றன.

இவை உடனடியாகத் தார்க்கலவை மூலமே சீர்செய்யப்படவுள்ளன.

பெரும்பாலான வீதிகளின் திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் மழை மற்றும் புத்தாண்டு விடுமுறைகள் காரணமாகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்த வாரம் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும். அத்துடன் மழையால் சேதமடைந்த வீதிகளின் பகுதிகளும் திருத்தப்படும் என்று மேலும் கூறப்பட்டது. (ம-17)

# அமைதியாக இடம்பெற்றன புதுவருடக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.2

புதுவருடக் கொண்டாட்டங்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் அமைதியாக இடம்பெற்றன. இளைஞர்கள் பட்டாசுகள் வெடிக்க வைத்து புதுவருடத்தை கொண்டாடிய போதும், யாழ்.நகர் வழமையைப் போன்றே இயங்கியது.

ஆங்கிலப் புத்தாண்டை வரவேற்கும் முகமாக கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவு விசேட திருப்பலி ஆராதனைகள் இடம்பெற்றன. யாழ்.மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்ற பிரதான திருப்பலியில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள் நள்ளிரவு முதல் பட்டாசுகளைக் கொளுத்தி ஆரவாரமாக புதிய ஆண்டை வரவேற்றனர். இருப்பினும் நேற்றைய தினம் புத்தாண்டு கொண்டாட்டங்கள் பெரிதும் களைகட்டவில்லை.

யாழ்.நகரில் வர்த்தக நிலையங்கள் திறந்திருந்ததுடன் மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வழமையை விட யாழ்.நகரில் மக்கள் கூட்டம் குறைவாகவே காணப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச அரச அலுவலகங்களில் புதுவருட நிகழ்வுகள் மங்கலகரமாக இடம்பெற்றன.

அலுவலக வாயிலில் பூரண கும்பம் வைக்கப்பட்டு தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து திணைக்களத் தலைவரின் முன்னால் இந்த வருடம் பொது மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவோம் என சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் கடமைகளை ஆரம்பித்தனர்.

அலுவலகங்களில் வருகை தரும் மக்களுக்கு இனிப்பு மற்றும் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. (ம-5-9)

## சுன்னாகம் சங்க பணியாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.2

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சங்கத்தின் ஊழியர் தொழிற்சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த தொழிற்சங்க போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கும் வரைக்கும் இந்தப் போராட்டம் தொடரும் என்றும் பணியாளர்கள் தெரிவித்தனர்.

**வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.**

இந்த வேலை நிறுத்த போராட்டம் தொடர்பாக பணியாளர்களால் நேற்று சகல விற்பனை நிலையங்களிலும் இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (ம-17-86)

# கைவிடப்பட்ட நிலையில் 75 வீதமான முதியவர்கள்

**கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம்,ஜன.2

தற்போது 75 வீதமான முதியவர்கள் பிள்ளைகளின் பராமரிப்பு இன்றிக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர் என்று கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது முதியோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களின் பராமரிப்பு தொடர்பான ஆய்வு ஒன்றைக் கைதடி முதியோர் இல்லம் மேற்கொண்டது.

இந்த ஆய்வுகளின்படி [illegible] பெற்றோரைப் பராமரிப்பதைத் தவிர்த்து வருகின்றனர். இது அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இந்த ஆய்வின்படி ஆண் முதியவர்களே பராமரிப்பு இன்றி பெரும்பாலும் கை[illegible] தெரிய வந்துள்ளது.

எமது இல்லத்தில் 2012 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை 186 முதியவர்கள் தங்கவைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் 109 பேர் ஆண் முதியவர்களும் 77 பெண் முதியவர்களும் அடங்குவர்.

குடாநாட்டில் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பு இன்றிக் காணப்படும் முதியவர்களைச் சமூகத்துடன் இணைக்கும் முயற்சிகளிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்று கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்

## இலங்கை அரசு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.2

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அமரர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பாலசிங்கம் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டார் என இலங்கை அரசு குற்றஞ் சுமத்தியுள்ளது.

அடேல் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் எனவும், அவர் பெண் புலிகளுக்கான தலைமைப் பொறுப்பாளராகக் கடமையாற்றியுள்ளார் என்றும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

10 வயது சிறுமிகளுக்குப் பயிற்சிகளை அடேல் பாலசிங்கம் வழங்கியுள்ளார். சிறுவர் போராளிகளின் கழுத்தில் அடேல் பாலசிங்கம் சயனைட் வில்லைகளை

**10 வயது சிறுமி களுக்குப் பயிற்சி களை அடேல் பாலசிங்கம் வழங்கியுள்ளார். சிறுவர் போராளி களின் கழுத்தில் அடேல் பாலசிங்கம் சயனைட் வில்லைகளை மாட்டிவிட்டு பயிற்சியளித்துள்ளார்.**

மாட்டிவிட்டு பயிற்சியளித்துள்ளார்.

படைத்தரப்பினரிடம் சிக்கினால் சயனைட் வில்லைகளை அருந்தி உயிரை மாய்த்துக்கொள்ளுமாறு அவரால் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

மேல் நாட்டுப் பெண் மற்றும் தாதி ஒருவர் இவ்வாறு கொடூரமான செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.



ஆயிரக்கணக்கான இளம் சிறுமிகள் உயிரிழக்கக் காரணமான போர்ப் பயிற்சிகளை வழங்கிய அடல் பாலசிங்கம் பிரிட்டனின் சர்ரே பிரதேசத்தில் வாழ்ந்துவருகின்றார்.

மனிதாபிமானத்திற்கு எதிரான யுத்தக் குற்றச்செயலில் ஈடுபட்ட பெண் ஒருவர் மிகவும் சுதந்திரமாக வாழ்ந்துவருகின்றார். அடல் பாலசிங்கத்திற்கு எதிராகப் பிரிட்டன் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்துள்ள பிரிட்டனில் புலிகளின் சர்வதேச தலைமைச் செயலகம் அமைந்துள்ளது.

தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் உறுப்பினர்கள் எவ்வாறு பகிரங்க ஆர்ப்பாட்டம் நடத்தமுடியும்? அரசியல் தலைவர்களுக்கு எதிராக எவ்வாறு போராட்டம் நடத்த முடியும் ? பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதி திரட்டிவருகின்றனர் .

2002ஆம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகளின்போது அடேல் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தார் என்றும் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மற்றவர்களில் தங்கிவாழும் நிலையில் வடக்கு, கிழக்கில் 80 வீத குடும்பங்கள்

## தேவை நாடும் மகளிர் அமைப்பு தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 80 வீதமான குடும்பங்கள் தமது அடிப்படைத் தேவைகளுக்காக மற்றவர்களில் தங்கி வாழும் நிலையில் உள்ளனர் என்று தேவை நாடும் மகளிர் அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர்க்காலச் சூழலால் பாதிப்படைந்துள்ள குடும்பங்களில் பல ஏதோ ஒரு வகையில் தேவைகள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டுள்ள நிலையிலேயே உள்ளன.

குறிப்பாக கணவனை இழந்தோ, பிரிந்தோ, கைவிடப்பட்ட நிலையிலோ வாழும் பெண்கள் அதிகளவானோர் உள்ளனர்.

கட்டாயத் திருமணம், குடும்பப் பொருளாதார நிலைமை, கல்வி அறிவின்மை போன்ற காரணங்களால் பெண்கள் அதிகமாக குடும்பத்தைத் தலைமை தாங்க வேண்டிய பொறுப்புடையவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு இரு மாகாணங்களிலும் 80 வீதமான குடும்பங்கள் தமது அடிப்படைத் தேவைகளுக்காக இன்னொருவரில் தங்கி வாழும் நிலையிலேயே உள்ளன.

குறிப்பாக பாதுகாப்பு, உணவு, உடை, வெளியிடங்களுக்குச் செல்லல் என்று தனியாக தமது தேவைகளை நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர். - எனவும் தெரிவித்துள்ளது. (ம-14)

# தேவாலயத்தை அகற்றக்கோரி குப்பிளானில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.2

குப்பிளானில் உள்ள கிறிஸ்தவ மதப்பிரிவைச் சேர்ந்த வழிபாட்டு இடம் ஒன்றை அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

''குறித்த வழிபாட்டுத் தலம் பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள எவரும் குறித்த மதப் பிரிவை பின்பற்றுவதில்லை . முரண்பாட்டை தோற்றுவிப்பதற்காகவே இது அமைக்கப்பட்டுள்ளது.'' என்று தெரிவித்தே அதை அகற்றுமாறு ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இதேவேளை குறித்த வழிபாட்டுத் தலம் மீது நேற்று கல் வீச்சும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வருகிறது. (ங-86)

# மாவட்ட செயலகங்களில் சுற்றிவளைப்புப் பிரிவுகள்

கொழும்பு,ஜன.2

பிரதேச செயலர் பணிமனைகள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் அரச பணிகள் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளைப் பரிசீலிப்பது தொடர்பாக திடீர் சுற்றிவளைப்புப் படைகளைப் போன்று செயற்படும் பரிசீலனைப் பிரிவு ஒன்று அனைத்து மாவட்ட செயலகங்களிலும் நிறுவப்படவுள்ளது.

2013 ஆம் ஆண்டில் 25 மாவட்டச் செயலகங்களிலும் நிறுவப்படும் இந்த பரிசீலனைக் குழுக்களில் பயிற்சி பெற்று வரும் பட்டதாரிகளை ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

சில பிரதேச செயலர் பணிமனைகளில் மற்றும் கிராம உத்தியோகத்தர்களால் முறையாக கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதில்லை என்பது குறித்து அமைச்சின் விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்து வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-22)

# தமிழக மீனவர் மீது மீண்டும் இலங்கை கடற்படை தாக்குதல்

சென்னை, ஜன.2

நாகப்பட்டிணம் மாவட்டத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மீண்டும் தாக்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோடியக்கரைக்கு தென்கிழக்கே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 3 மீனவர்கள் காயமடைந்தனர். மேலும் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த 50 ஆயிரம் ரூபா மதிப்புள்ள நண்டுகளை இலங்கைக் கடற்படையினர் அள்ளிச் சென்றுவிட்டனர்.

நாகப்பட்டிணம், புதுப்பேட்டையைச் சேர்ந்த 7 மீனவர்கள் இரண்டு படகுகளில் நேற்று காலை மீன்பிடிக்கச் சென்றபோது மேற்படி தாக்குதல் நிகழ்ந்துள்ளதாக மேற்படி ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (வ)

## '13' ஐ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நீக்குவதற்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் நாம் நாடளாவிய ரீதியில் முன்னெடுப்போம் என்பதை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## உயர்கல்வி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அத்துமீறி படையினர் நுழைந்திருந்தனர். இதனைக் கண்டித்து மறுநாள் 28 ஆம் திகதி மாணவர்கள் கண்டன போராட்டம் நடத்தினர். இதன்போது பொலிஸாரால் மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதன் பின்னர் வேறு காரணங்களை வைத்து மாணவர்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் நால்வர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டநிலையில் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை புறக்கணித்து வருகின்றனர். இந்த நிலையில் உயர்கல்வி அமைச்சை சந்தித்து பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பில் மேற்படி குழுவினர் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

## மருத்துவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போகிறார்கள் என்று பொலிஸார் கூறியிருந்தனர்.

கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை கொக்காவில் இராணுவ முகாமுக்குச் சென்றிருந்த சமயம் மருத்துவர் சிவசங்கர் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அத்துமீறி இராணுவ முகாமுக்குள் நுழைந்தமை மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகளை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன என்று படைத்தரப்புக் கூறுகின்றது.

அவரை விடுதலைசெய்யுமாறு கோரி பொலிஸ் மா அதிபரிடம் தாம் கோரிக்கை விடுத்திருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கிறது. (ஐ-4)

## பிரதம...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சியாக நடைபெற்று வரும் தாக்குதலில் உச்சகட்டம் என்றே எண்ணுகிறேன்.

கடந்த சில மாதங்களில் சட்டத்தரணிகள் மீது தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் அதிகரிப்பு நாளுக்கு நாள் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துகொண்டே செல்கின்றன.

இலங்கை அரசியல் யாப்பின் 107 ஆவது சட்டப் பிரிவு மற்றும் நாடாளுமன்ற நிலைக் குழுவின் உத்தரவு ஆகிய இரண்டையும் இணைத்து பார்க்கும் போது, அவை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு புறம்பானவையாக காணப்படுகின்றன. இந்த விடயம் 2003 ஆம் ஆண்டே மனித உரிமைகள் குழுவால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் அவற்றை நிவர்த்திக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இலங்கையில் நீதிபதிகளின் சுயாதீனத் தன்மையை பாதுகாக்கவும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளை தவிர்க்கவும், நாட்டின் அரசியல் சாசனத்தில் மாற்றம் தேவை.

நாட்டில் ஒவ்வொரு துறையும் தனி அதிகாரத்துடன் செயல்படும் வகையிலும், சர்வதேச மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும், நீதிபதிகள் மீதான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும் போது அது சுயாதீனமான ஒரு ஆணையத்தால் நேர்மையாக நடத்தப்பட்டு, அது மதிக்கப்பட வேண்டும்.

நீதித்துறை எந்த விதமான வெளி அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், தலையீடுகள் இல்லாத வகையில் செயற்பட இலங்கை அரசே வழி ஏற்படுத்த வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங)

## 2013 இல் சிறக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வரலாற்றுத் தலங்கள் மற்றும் விருந்தோம்பலுக்கு ஏற்ற விதமான இடங்கள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே இலங்கைக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை சுற்றுலாத்துறையானது 2016 ஆண்டிற்குள் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டதாகவும் அவர்கள் கூறினர்.

பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டு வருவது தொடர்பில் முகாமைத்துவ பீட சபையும் நேற்றுக் கூடிக் கலந்துரையாடியது. எனினும் முடிவு எதுவும் நேற்றையதினம் எட்டப்படவில்லை. நேற்று முன்தினம் கூடிய கலைப்பீட சபை, கற்றல் செயற்பாடுகள் குறித்து தைப்பொங்கலுக்குப் பின்னர் ஆராய்வது என்று முடிவெடுத்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவித்தால் மாத்திரமே பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளில் தாம் ஈடுபடுவோம் என்று அறிவித்துவிட்டு மாணவர்கள் கால வரையற்ற நிலையில் கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், ஒன்றியச் செயலாளர் ப.தர்சானந், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ்.செல்வமன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜனமேஜெயந். (ஐ-4)

## அமைச்சரவை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நீதி, சட்டவாக்கம் ஆகிய மூன்று துறைகளுக்குமிடையில் முரண்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இதனால் பல்வேறுபட்ட தரப்புகளிலிருந்தும், ஆளுந்தரப்புக்கு பல நெருக்கடிகள் கொடுக் கப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் பிரதம நீதியரசரின் குற்றவியல் பிரேரணை விவகாரத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள சர்ச்சையுடன் கூடிய குழப்பகரமான நிலைமைக்கு தீர்வொன்றைக் கண்டதன்பின்னரே அமைச்சரவை மாற்றம் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வருட முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல்களும் வரவிருப்பதால், அமைச்சரவை மாற்றத்தை உடனடியாகச் செய்வது அனுகூலமற்றதென அரசு கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பயங்கரவாதி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என்று வெளிப்படையான அறிவித்தல் ஒன்றையும் உலமா சபை விடுத்துள்ளது.

ஹலால் சான்றிதழ்கள் மூலம் உலமா சபைக்கு வருடந்தோறும் 90 கோடி ரூபா கிடைக்கின்றது என்றும் அந்தநிதி வெளிநாடுகளில் உள்ள முஸ்லிம் பயங்கரவாத அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறதா என்றும் அரசு உடன் விசாரணை நடத்தவேண்டும் என்றும் பொது பலசேனா நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஹலால் சான்றிதழ் தொடர்பாகவும், அதன் மூலம் பெறப்படும் நிதி தொடர்பாகவும் மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களை நீக்குவதற்காக உலமா சபை கடந்த வாரம் வீடியோ மூலமான விளக்கமொன்றை வழங்கியது.

இதனைத் தொடர்ந்து மேலும் தெளிவாக்கலை வழங்கி ஹலால் சான்றிதழ் தொடர்பான சிங்கள மக்களின் தப்பெண்ணத்தை அடியோடு வேறருக்கும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சு, தேசிய புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவை பரந்துபட்ட விசாரணையை மேற்கொள்வதற்கான கதவை உலமா சபை திறந்துள்ளது.

இதில் முக்கியமாக விசாரணைகளை மேற்கொள்ளும் பிரிவினரின் ஊடாகவும், அரச மேல்மட்டத்தின் ஊடாகவும் ஆதாரத்துடன் சிங்கள மக்களுக்கு உண்மைநிலையைத் தெரிவிக்கும் முயற்சியில் உலமா சபை இறங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அன்று உதிக்காத ஞானமும் இன்று பிறக்கும் ஜாலமும்

புதுடில்லியில் ஓடும் பஸ் ஒன்றுக்குள் வைத்து ஆறுபேர் கொண்ட கும்பலினால் கற்பழிக்கப்பட்ட மருத்துவக்கல்லூரி மாணவியின் மரணம் இந்தியாவில் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில், அதன் தாக்கத்தை நேற்றுமுன்தினம் கொழும்பிலும் காணக்கூடியதாக இருந்தது. கொழும்பு மாநகரசபையில் ஆளும் கட்சியான ஐ.தே.கவின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் முடிவில் புதுடில்லிச் சம்பவத்தைக் கண்டிக்கும் மனு ஒன்று இந்தியத் தூதுவரிடம் கையளிப்பதற்காக எடுத்துச்செல்லப்பட்டது.

புதுடில்லிச் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றே. இந்தச் சம்பவத்துக்கு எதிராக இந்தியா முழுவதும் பெண்கள் அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், ஊடகங்கள் வழங்கிய முக்கியத்துவம் காரணமாகவே பாதிக்கப்பட்ட பெண்ணை பத்து நாள்கள் கடந்த நிலையில் சிங்கப்பூர் மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய நெருக்கடி இந்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

ஆண் துணையுடன் இருந்த ஒரு பெண்ணை ஓடும் பஸ்ஸுக்குள் வைத்து கடுமையாகத் தாக்கி கற்பழித்த பின்பு வெளியே தூக்கி வீசுகிறார்கள் என்றால் இதுபோன்ற மிகவும் மோசமான பயங்கரம் இந்தியாவின் சமீபகால வரலாற்றில் இடம்பெற்றிருக்க முடியாது. இச்சம்பவத்துக்கு எதிராக இந்தியா முழுவதும் வன்முறைகள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதாலேயே குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்க இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது எனலாம்.

இத்தகைய நிலையிலேயே கொழும்பில் ஐ.தே.க. மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் படு பாதகச் செயலைக் கண்டிக்கும் கடப்பாடு அனைவருக்கும் உண்டு. ஆனால் இங்கே ஒரு கேள்வி எழுகிறது. இந்த நாட்டுப் பெண்களுக்கு இதனைக் கண்டிக்க அருகதை உண்டா? இல்லை என்கிறது மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி.

ஐ.தே.க. மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி கலந்துகொள்ளவில்லை என்று அக்கட்சியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கரா தெரிவிக்கிறார். உண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் அருகதை தென்னிலங்கைப் பெண்களுக்கு இல்லை என்பது ஆணித்தரமாக எடுத்துரைக்கப்பட வேண்டிய ஒன்று.

1996இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜானக பெரேரா யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த சமயம் இடம்பெற்ற கும்பல் கற்பழிப்புகளை எந்த ஒரு தன்மானத் தமிழனும் மறந்துவிட முடியாது. செம்மணியில் கிருஷாந்தி, உரும்பிராயில் றஜனி, புங்குடுதீவில் சாரதாம்பாள் என மிகவும் பயங்கரமான முறையில் கும்பல் கற்பழிப்புகளுக்கு பெண்கள் உள்ளாகிப் படுகொலை செய்யப்பட்டனர். அந்த வேளைகளில் இத்தகைய அராஜகச் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க தென்னிலங்கையைச் சேர்ந்த எந்தவொரு பெண்கள் அமைப்பும் முன்வந்ததுமில்லை; எதிர்ப்பை வெளிப்படுத்தியதுமில்லை.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் முதலாவது பாடம் எழுதி விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த கிருஷாந்தி குமாரசுவாமி (வயது - 18) செம்மணி இராணுவக் காவல் நிலையத்தில் வைத்து பிடிக்கப்பட்டு ஆறு படையினரால் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரைத் தேடி வந்த அவரின் தாயார், சகோதரன், அயலவரும் படுகொலை செய்யப்பட்டு அனைவரும் ஒரே குழியில் போட்டு புதைக்கப்பட்டனர்.

அதே ஆண்டு உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த றஜனி வேலாயுதபிள்ளை என்ற 22 வயதுப் பெண் கோண்டாவில் இராணுவ காவல் நிலையத்தில் பிடிக்கப்பட்டு வீடு ஒன்றுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுக் கும்பல் கற்பழிப்புக்குள்ளானார். அடுத்தநாள் காலை அவரது சடலம் நிர்வாண நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

1999இல் புங்குடுதீவைச் சேர்ந்த 29 வயது சாரதாம்பாள் கடற்படையினர் என நம்பப்படும் கறுப்பு உடை தரித்த நால்வரால் இழுத்துச் செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார். அவரது உள்ளாடையைக் கழற்றி வாய்க்குள் திணித்து விட்டு இந்தக் கொடூரத்தை அரங்கேற்றி இருந்தனர் காமுகர்கள். மூன்று மாதங்கள் கடந்த பின்னரே சந்திரிகா அந்தச் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டார். அது அனைத்துலகத்தை ஏமாற்றும் கண்துடைப்பு. இறுதிப் போரின்போதும் இத்தகைய சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றன.

அதற்காகப் புதுடில்லிச் சம்பவத்தை நாம் குறைத்து மதிப்பிடுவதாக அர்த்தமல்ல. கடந்த காலங்களில் இலங்கையிலும், மிகக் குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களிலும் மோசமான கும்பல் கற்பழிப்புகளும், கொலைகளும் இடம்பெற்றும் அவ்வேளைய அரசுகளால் அவை, கண்டுகொள்ளப்படவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறோம்.

ஒருவகையில் தமிழர் பகுதிகளில் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்பட்ட துயரம், அண்மையில் புதுடில்லிப் பெண்ணுக்கு ஏற்பட்டதை விட பல மடங்கு அதிகம். கிருஷாந்தி குமாரசுவாமிக்கு ஏற்பட்ட கொடூரம் ஒன்றே போதும் இதனைப் புரிந்துகொள்ள.

இன்று தென்னிலங்கையில் பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் தமிழ்ப் பெண்களுக்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பயங்கரங்கள், தற்பொழுது இடம்பெற்றுவரும் துயரங்கள், ஆகியவற்றைக் கணக்கில் எடுக்காத தன்மையில் செயற்படும் போக்கையே தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இது ஒருவகையில் அன்று உதிக்காத ஞானமாகவும், இன்று பிறந்துள்ள ஜாலமாகவுமே கொள்ளத்தக்கது...!

# ஒப்பந்தத்தில் வன்னி சென்ற ஆசிரியர் உடனடியாக மீளத் திரும்ப முடியும்

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். மாவட்டம், வவுனியா தெற்கு வலயங்களிலிருந்து இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வன்னிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று ஒப்பந்தகாலம் நிறைவடைந்த ஆசிரியர்கள் அனைவரும், தாம் முன்னர் பணியாற்றிய வலயங்களுக்கு உடனடியாக மீளத் திரும்ப முடியும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தெரிவித்தார்.

குறித்த இரண்டு பகுதிகளில் இருந்தும், 2011 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறையாகும் வகையில் இரண்டு வருட ஒப்பந்தத்தில் வன்னிப் பாடசாலைக்குச் சென்ற ஆசிரியர்கள் 2013 ஜனவரி முதலாம் திகதியுடன் ஒப்பந்தகாலம் நிறைவடைந்ததும், தாம் முன்னர் பணிபுரிந்த வலயப் பாடசாலைக்கு மீளத்திரும்ப முடியும் என்றும் அவர்களுக்கான ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால், ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் முன்னர் பணிபுரிந்த வலயப் பாடசாலைக்குச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கான தீர்வை பெற்றுத் தருமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதுபற்றி வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வராசாவிடம் கேட்கப்பட்டபோது; அந்த ஆசிரியர்கள் அனைவரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தாம் முன்னர் பணிபுரிந்த வலயத்துக்குச் சென்று பதிவை மேற்கொள்ள முடியும். நேற்று முன்தினம் நடத்திய விசேட கலந்துரையாடலில் இதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது.

இந்த ஆசிரியர்கள் மீளத்திரும்பும் பட்சத்தில் பதில் ஆசிரியர்கள் இன்னும் நியமிக்கப்படாததால் வன்னிப் பாடசாலை மாணவர்களுக்கு உரிய ஆசிரியர்களை உடனடியாக வழங்கமுடியாத நிலை ஏற்படும். இதனால் மாணவர்களது கல்வி குறித்தும் தொழிற்சங்கங்கள் கவனமெடுத்தல் வேண்டும். தனியே ஆசிரியர் நலனை மாத்திரம் கருத்தில் கொள்ளக்கூடாது.- என்று தெரிவித்தார். (ம-4)

# நிறுவனங்களின் நிதி நிர்வாக பிரச்சினைக்கு தலைமைப் பதவி வகிப்போரே பொறுப்பானவர்

## புதிய சட்டம் ஒன்று வெகுவிரைவில்

கொழும்பு,ஜன.2

அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் மற்றும் ஏனைய அரசு சார்பான சபைகளில் பணிப்பாளர் பதவிகளை வகிப்போர் இந்த நிறுவனங்களின் நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளும் அனைத்து தீர்மானங்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூற வேண்டும்.

இதற்கான புதிய சட்டம் ஒன்றை வெகு விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் தொடர்பான செயற்குழுவின் பரிந்துரைகளையும் கவனத்தில் எடுத்து இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் மூலம் அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கேள்வி கோரல்களை நடைமுறைப்படுத்தல், மாற்று ஆக்கச் செயற்பாடுகள், ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல், நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்கள் என்ற செயற்பாடுகள் தொடர்பாக நிலவும் சட்டவிதிகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு அமைவாகச் செயற்படாமை காரணமாக மக்கள் பணத்தில் இயங்கும் பெரும்பாலான அரச நிறுவனங்கள் நட்டமடையும் நிலைப்பாட்டுக்கு உள்ளாகியுள்ளன.

ஒரு சில நிறுவனங்கள் தமது தவறான நிதிக் கையாள்கைகள் பற்றி கணக்காய்வாளரால் முன்வைக்கப்படும் கணக்காய்வு வினாக்களுக்கும் கூட பதிலளிக்காத நிலைப்பாடு உள்ளது.

சில அரச நிறுவனங்கள் மற்றும் சபைகள் பல ஆண்டுகள் கடக்கும் வரையில் தமது கணக்கு அறிக்கைகளை நாடாளுமன்றத்திடம் முன்வைப்பதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டவிதிகளுக்கு அமைய, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், வங்கிகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் தாம் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூற வேண்டியுள்ளதாக சட்டம் ஒன்றால் பொறுப்பளிக்கப்பட்டிருக்கவில்லை.

இதன் காரணமாக சட்டத்துக்கு முரணான பெரும்பாலான செயற்பாடுகளுக்கு வழிசமைக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் அத்தகைய பதவிகளை வகிப்போரால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு தனிப்படவே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது.

இதற்கான சட்டமொன்று விதிக்கப்படும் என்று கூறியுள்ள கலாநிதி ஜயசுந்தர, இந்தச் சட்டத்தைத் தற்போது தனியார் துறை நிறுவனங்கள் நடைமுறைப் படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (ம-22)

# நிலையான அபிவிருத்தியை அடைவதில் தென்னாசியா எதிர்நோக்கும் சவால்கள்

## 'சப்னா' அனுசரணையுடன் யாழ். செயலகத்தில்

'சப்னா' என்றழைக்கப்படும் தென்னாசிய எதிர்கால தோற்றப்பாடு வலையமைப்பு நிறுவனம், மூளாய் பாலர் கல்வி மற்றும் பாலின அபிவிருத்தி அமைப்புடன் இணைந்து நாளை மறுதினம், வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணிவரை நடைபெறவிருக்கும் இந்தக் கலந்துரையாடலில் வடமாகாணத்தில் இருந்து சுமார் 150 பேராளர்கள் கலந்துகொள்வார்கள்.

தென்னாசியாவில் ஜனநாயகச் சூழலில் செயற்பட்டு வரும் சமூக அபிவிருத்தி தொடர்பான இயக்கங்களில் இருந்து கிடைக்கும் படிப்பினைகள் பற்றியதான இந்தக் கலந்துரையாடல் நிகழ்வை ஒழுங்கு [illegible] அரசாங்க அதிபரும் வட மாகாண பிரதி பிரதம செயலாளருமான ரி.இராசநாயகம், மூளாய் பாலர் கல்வி மற்றும் பால்இன அபிவிருத்திக்கான நிலையத்தின் தலைவர் பொன்மலர் ராஜேஸ்வரன், ஊற்று நிறுவனத்தின் தலைவரும் யாழ்ப்பாணம் அரச சாரா நிறுவனங்களின் முன்னாள் தலைவருமான பி.விக்னேஸ்வரன் ஆகியவர்கள் 'சப்னா' நிறுவனத்தின் சார்பில் தீவிர பங்களிப்பைச் செய்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் மூன்றில் ஒரு பங்கினர் இருபத்தெட்டு வயதுக்கும் குறைவான இளைஞர்களாகவும் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாகவும் ஏனையவர்கள் இன்றைய உலக அபிவிருத்தி சூழலில் ஆசிய நாடுகள் எதிர்கொள்ளும் ஏழ்மை தொடர்பான சவால்களுக்கு அர்ப்பணிப்புடன் தீர்வுகளை முன்வைக்கக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கடைசிப் பிரிவினர் சிவில் சமூகங்களில் இருந்து குறிப்பாக வங்கிகள், ஏழ்மை - கல்வி- ஆராய்ச்சி நிறுவனங்கள், கோட்டக்கல்விச் செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பது விரும்பத்தக்கது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரி.இராசநாயகம் மற்றும் ஆளுநரின் பிரதம செயலாளர் விஜயலக்ஷ்மி ரமேஷ் ஆகியவர்கள் கூட்டாக நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்கள்.

'சப்னா'வின் தலைவர் தேசமான்ய டாக்டர் பொன்னா விக்னராஜா பங்காளித்துவ அபிவிருத்தி தொடர்பாக ஒலி, ஒளி நிகழ்ச்சி ஒன்றை வழங்குவார்.

குறித்த விடயம் தொடர்பாக தமது பட்டறிவுகளை திருமதி பி.ராஜேஸ்வரன் மற்றும் பி.விக்னேஸ்வரன் ஆகியவர்கள் பங்குபற்றுநர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றும் கந்தையா நீலகண்டன் மற்றும் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் முடிவுரை நிகழ்த்துவார்கள். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய முத்தமிழ் விழாவில், தொழிலதிபர் ஆ.இராஜேந்திரன் - இ.கோகிலவாணி தம்பதியர் மங்கலவிளக்கேற்றுவதையும், "முத்தமிழின் தலைமைக்கு உரிய தமிழ் எது?" என்ற பட்டிமன்றத்தில் கலந்து கொண்ட ஆ.லோகேஸ்வரன், ல.சதீஷ், நடுவர் தமிழருவி த.சிவகுமாரன், அப்துல் சமட், எஸ்.எஸ். வாசன், திருமதி த.நிறைமதி, சி.வரதராஜன் ஆகியோரையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ஒ)

## தவறிய பணம், நகைகள் திரும்பக் கிடைத்தன

### பட்டதாரி பயிலுநரின் முன்மாதிரி

வவுனியா, ஜன. 2

ஓட்டோவில் பயணம் செய்தபோது தவறவிட்ட ஒரு தொகைப் பணத்தையும், பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களையும் கண்டெடுத்து உரியவர்களிடம் ஒப்படைத்த அரச ஊழியரை வேப்பங்குளம் பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்தவாரம் இடம்பெற்றது.

மருத்துவத் தாதியாகக் கடமையாற்றும் இளம் குடும்பப் பெண் ஒருவர், கைக்குழந்தையுடன் இரவு வேளை ரயில் நிலையத்துக்கு ஓட்டோவில் செல்லும்போது தனது கைப்பையைத் தவற விட்டுள்ளார். இதுதொடர்பாக தவறவிட்ட பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

வேப்பங்குளம் வீதி வழியாக வந்த வவுனியா பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுநராக பணிபுரியும் ஒருவர் கைப்பையைக் கண்டெடுத்து உடனடியாக அதனை வேப்பங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

இது குறித்து முறைப்பாட்டுக்காரருக்கு தெரியப்படுத்தப்பட்டு அவர்கள் தமது பொருளை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொண்டனர். பொதியைக் கண்டெடுத்தவரும் பாராட்டப்பட்டார். (ஐ-400)

# முல்லைத்தீவில் வெள்ளத்தால் 24 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, ஜன. 2

தொடர்ந்து பெய்த அடைமழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 24 ஆயிரத்து 609 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 79 ஆயிரத்து 469 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், கரைதுறைப்பற்று மற்றும் வெலிஓயா ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பகுதியும், வெலிஓயாப் பகுதியும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 707 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 655 பேரும், துணுக்காயில் ஆயிரத்து 355 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 517 பேரும், வெலி ஓயாப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 881 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 65 பேரும் -

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவில் 5 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 16,894 பேரும், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் 12 ஆயிரத்து 222 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 825 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் தங்கள் சொந்த இடங்களில் சென்று மீளக் குடியமர்ந்துள்ளபோதும் சுமார் 131 குடும்பங்களைச் சேர்ந்த 461 பேர் தற்போது 6 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-400)

## தமிழ் தெரிந்த வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஜன. 2

ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு தமிழ் தெரிந்த வைத்தியரை நியமிக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

தமிழ் தெரியாத சிங்கள மொழி பேசும் வைத்தியரே ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் கடமையாற்றுகிறார். அவரிடம் தமது நோய்கள் குறித்து விவரமாகத் தெரிவிக்க முடியாதுள்ளது. அவருக்கும் எமது நோய்களை விளங்கிக்கொள்ளும் அளவுக்கு மொழி தடையாக இருக்கிறது. இதனால் நோயாளி கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே இந்த வைத்தியசாலைக்கு தமிழ் தெரிந்த ஒரு வைத்தியரை நியமிக்க வேண்டும் என அந்தப் பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (ஐ-500)

## கண்டாவளைக் கோட்டத்தில் 5 பாடசாலைகள் அபிவிருத்தி

கிளிநொச்சி, ஜன. 2

கிளிநொச்சி, கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 5 பாடசாலைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட கல்மடு நகர் அ.த.க. பாடசாலையில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர்த் தாங்கி அமைத்தல், கிளிநொச்சி பாடசாலையில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டுப் பூங்கா அமைத்தல், தம்பிராசபுரம் அ.த.க. பாடசாலையில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான சுற்றுமதில் அமைத்தல், முரசுமோட்டை ஆரம்பப் பாடசாலையில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான சுற்றுமதில் அமைத்தல் ஆகிய ஐந்து வகையான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-6)

**ஐந்து வகையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

# கடந்த வருடத்தில் வவுனியாவில் 78 சிறுவர்கள் துஷ்பிரயோகம்

வவுனியா, ஜன. 2

வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மாத்திரம் 78 சிறார்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலை வவுனியா சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையே இவை.

இவற்றில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 28 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. உடலியல் ரீதியான துஷ்பிரயோகம் தொடர்பில் 26 முறைப்பாடுகளும் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்யுமளவுக்கு 19 பேர் முயற்சித்துள்ளனர் எனவும் பெற்றோர்கள் உட்பட ஏனையவர்களால் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் 5 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதிகளவிலான துஷ்பிரயோகங்கள் சிறுவர்களது நெருங்கிய உறவினர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டு துஷ்பிரயோகம் தொடர்பில் முறைப்பாடு செய்தமை அதிகரித்துக் காணப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 1929 என்ற சிறுவர் உதவி சேவைக்கு அறிவிக்கும் அதே நேரம் தமது அலுவலகத்துக்கு 0242224444, 0245676760 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கோரியுள்ளதுடன் துஷ்பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கைது செய்து சட்டநடவடிக்கை எடுக்கவும் எதிர்காலத்தில் இது போன்ற துஷ்பிரயோக சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும் இவ்வாறு முறைப்பாடு செய்வது பெரிதும் உதவும் என்றும் செல்வகுமார் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

**பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டு துஷ்பிரயோகம் தொடர்பில் முறைப்பாடு செய்தமை அதிகரித்துக் காணப்படுகிறது.**

## மழை வெள்ளத்தால் நெற்செய்கை பாதிப்பு

ஒட்டுசுட்டான், ஜன. 2

வன்னிப்பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்த மழை, வெள்ளம் காரணமாகக் காலபோக நெற்செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நெற்பயிரை மூடி ஒரு வார காலமாக வெள்ளம் பாய்ந்துள்ளது.

பயிர்கள் கதிர், குடலைப் பருவத்தில் இருந்த சமயம் வெள்ளம் மூடியதால், பால் பிடிப்பு, கதிராக்கம் தடைப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளம் வடிந்தாலும் பயிர்கள் நிலத்தில் சாய்ந்துள்ளன.

இதனால் அவை சிறந்த விளைச்சலைத் தரமுடியாத அளவுக்கு மாறியுள்ளன. இதன் காரணமாகத் தமக்கு இந்தமுறை சிறந்த விளைச்சல் கிடைக்காது போகலாம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முக்கியமான பருவத்தில் மழைவெள்ளம் ஏற்பட்டதால் இது அனைத்துப் பகுதி விவசாயிகளின் பொதுவான பாதிப்பாக மாறியுள்ளது.

எனவே தமக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

குளங்கள் சில உடைப்பெடுத்துள்ள நிலையில் அதன் கீழான சிறுபோக நெற்செய்கையும் பாதிக்கப்படும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ-500)

## வீடுகள் அற்ற மக்கள் வெள்ளத்தால் அவதி

கிளிநொச்சி, ஜன. 2

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி கடந்த சில நாள்களாக பெய்த கடும் மழைகாரணமாக கடும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் தற்போது 818 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதில் நிரந்தர வீடுகள், திருத்தி அமைக்கப்பட்ட வீடுகள் என 203 வரையான குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் கிடைத்துள்ளன.

ஏனைய 615 குடும்பங்கள் வீட்டு வசதிகள் இன்றி தற்காலிக வீடுகளிலும் தறப்பாள் கொட்டகைகளிலும் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து தங்கியுள்ளன.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதுடன் குறித்த குடும்பங்கள் வீடுகளில் வாழ முடியாமல் பல்வேறு துன்பங்களையும் எதிர்கொண்டு வருவதை அவதானிக்கமுடிகின்றது.

பாரதிபுரம் கிழக்கு, பாரதிபுரம் மேற்கு, பாரதிபுரம் மத்தி போன்ற பகுதிகளின் வீதிகளும் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. (ஐ-6)

## சிறந்த கிராம அலுவலர்

ஒட்டுசுட்டான், ஜன. 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிராம அலுவலராக தங்கரத்தினம் தனபால்ராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் நடத்தப்பட்ட போட்டியில் இவர் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், முல்லைத்தீவு மாவட்டத்திலும் சிறந்த கிராம அலுவலராகத் தெரிவாகியுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற முகாமைத்துவப் போட்டியிலும் பிரதேச மட்டத்தில் இவர் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 27 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தப்பட்ட நிவாரணத்தை சம்பூர் மக்களுக்கு வழங்குங்கள்

## கடற்றொழிலுக்கு செல்லமுடியாத நிலை என்கிறார் நகரசபை உறுப்பினர் நந்தகுமார்

திருகோணமலை, ஜன.2

திருகோணமலையில் அண்மையில் பெய்த அடை மழையால் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சம்பூர் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த மக்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற பல மாதங்களாக இவர்களுக்கு வழங்காது நிறுத்தப்பட்ட உலர் உணவு நிவாரணத்தை வழங்க வேண்டும். இவ்வாறு திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கை ஒன்றி லேயே இவ்வாறு தெரிவித் தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

பட்டித்திடல், மணற் சேனை, கிளிவெட்டி நலன் புரி நிலையங்களில் தங்கி யிருக்கும் மக்களே இவ்வாறு பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மழையால் ஏற்பட்ட வெள்ள இடரால் சம்பூர் மக்கள் கடற்றொழிலுக்கு செல்ல முடியாதுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட புழுக்களால் வயோதிபர் களும், குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மாரும் இன் னலை அனுபவித்து வருகின்றனர்.

எனவே தற்போது ஏற்பட்ட இடர் நிலையை கருத்தில் கொண்டு மக்களுக்கு உலர் உணவு நிவாரணத்தை வழங்க கிழக்கு முதலமைச் சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-40)

## சீருடைக் கொடுப்பனவை அதிகரிக்கக் கோரிக்கை

அம்பாறை,ஜன.02

அலுவலகப் பணியாளர்களுக்கான சீருடைக் கொடுப்பனவை 4000 ரூபாவாக அதிகரிக்க வேண் டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், ஜனா திபதிக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலி யுறுத்தியுள்ளது. சங்கத்தின் சார்பில், சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் இந்த மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தமனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

அலுவலகப் பணியாளர்களுக்கு தற்சமயம் சீருடைக் கொடுப்பனவாக சில திணைக் களங்களில் 2200 ரூபாவும்,மேலும்சில திணைக் களங்களில் 1100 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது சீருடைத் துணி மற்றும் தையல் கூலி போன்றவற்றின் விலை, அதிகரித்துள்ளது.

எனவே திணைக்களங்களில் கடமை புரியும் அலுவலகப் பணியாளர்களுக்கு குறைந்த தொகைக் கொடுப்பனவு வழங் கப்படுவதால் அவர் கள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின் றனர்.

அதேவேளை இவர்களுக் குரிய சீருடையை எவ் வாறு, எந்த அடிப் படையில் வழங் குவது என்ற நிர்வா கப் பிரச்சினையும் ஏற்படுகிறது.

எனவே அலுவ லகப் பணியாளர் களின் நலன் கருதி சீருடைக்கான கொடுப்பனவை 4000 ரூபாவாக அதி கரித்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

மனுவின் பிரதி கள் பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர், திறை சேரியின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-30)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பராசக்தி நாகதீபன்



சங்கானை இலகடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பராசக்தி நாகதீபன் நேற்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரன் (உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி- யாழ்ப்பாணம்), சத்தியநேசன் (பிரான்ஸ்), திருக்குமார் (பிரான்ஸ்), சீமந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தினி (ஆசிரியை- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சாந்தினி (பிரான்ஸ்), குமுதினி (பிரான்ஸ்), மகேந்திரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஷிகன், கீர்த்திகா, சாகித்தியா, லக்ஷிகா, அனுசியா, லக்ஷ்மன், மீரா, வீஷ்மன், நிவேகா, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்
நா.நாகேஸ்வரன் (உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

இலகடி, சங்கானை.

### இராசையா நவரட்ணம்



கொக்குவிலைப்பிறப்பிடமாகவும், வட்டு மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நவரட்ணம் நேற்று (01.01. 2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சோதிமதியின் அன்புக் கணவரும், சுதாகரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01. 2013)புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
சுதாகர்(மகன்)

### சங்கரப்பிள்ளை தங்கேஸ்வரன்

(கார் வயரிங், கனகு கராஜ், பலாலி வீதி.)



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கலட்டி சீனியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை தங்கேஸ்வரன் (கார் வயரிங்) நேற்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை -கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜீவமாலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தனேஸ்வரன் மற்றும் தங்கமலர், புஸ்பமாலா, அதிசயமலர் (கனடா), சரஸ்வதி (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பமாலா, சிறிஸ்காந்தன், இரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), சிறிவரதன், சிறிபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.01.2013) புதன்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது மைத்துனர் வரதனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/23, 1 ஆம், ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0777 570 103

தகவல்:
கை.சிறிவரதன்
(எலற்றீசியன், பரஞ்ஜோதி
தொலைத்தொடர்பகம் கஸ்தூரியார் வீதி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நீற்றா யஸ்மின் சேவியர் (மலர்)



680, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகக் கொண்ட திருமதி நீற்றா யஸ்மின் சேவியர் நேற்று (01.01.2013) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் பிலிப் பிரான்சிஸ் சேவியரின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

680, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
R.S.சேவியர் (மகன்)

### சபாபதி அருமைரத்தினம் (அருமை)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி அருமைரத்தினம் நேற்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அரியமலரின் அன்புக் கணவரும், நிசாந்தன் (நாராயணா காட்வெயார் ஊழியர்), நீரையா, நிசாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், சண்முகநாதன், சுரேஸ் (சுவிஸ்), சுயீவா ஆகியோரின் மாமனும், தபிசன், சாருஜன், அபிசன், ஆரபி, அட்சயா, சூர்யா, ஜோதிகா ஆகியோரின் பேரனும், நாகராஜா, புனிதவதி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2013) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காமாட்சி அம்மன் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, (சந்தையடி) நீர்வேலி.

தகவல்:
நிசாந்தன் (மகன்)
0779589740, 0776109463

## மரண அறிவித்தல்

### துரைச்சாமி சந்திரபாலன்



சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், 1ஆம் குறுக்கு வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி சந்திரபாலன் நேற்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி-நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், சதாசிவம்-நவலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வடிவாம்பிகையின் பாசமிகு கணவரும், நிர்மலராஜா, இளவேனி, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.01.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

உடுவில் சேச்லேன் (மகளிர் கல்லூரிக்கு அருகில்) 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777118493

## 31 ஆம் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 04.02.1939

மறைவு 03.12.2012



அமரர் **செல்லையா கணேசன்**

பாசமழை பொழிந்து பாரினில் எமை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு சென்றீர்கள்?
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் ஆத்ம சாந்திக்காய்

இன்று (02.01.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அமரர் செல்லையா கணேசன் அவர்களது சபிண்டீகரண கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வா வீதி,
அராலி வடக்கு.

குடும்பத்தினர்.
(வரதன்)

## கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்

### நீரிழிவு நோயாளர் கவனத்திற்கு

மேற்படி எமது வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமானது அதன் மருத்துவ நடவடிக்கைகளை 01.01.2013 தொடக்கம் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களாக மட்டுப்படுத்தியுள்ளது என்பதனை எமது நோயாளரின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர் சபை.

## மரண அறிவித்தல்

# சூரியகுமார் சதுர்ஷா (சது)

(மாணவி- யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி)



பழைய தபால் கந்தோர் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சது என்று அன்பாக அழைக்கப்படும் சூரியகுமார் சதுர்ஷா (சது) 31.12.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சூரியகுமார்-சந்திரரோகினி (குமார்-ரதி) தம்பதியரின் அன்பு மகளும், நிதுர்ஷனா, ஹேமபிரியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் அன்னலெட்சுமி, இராசேந்திரம் (மாத்தை)- இராசமணி தம்பதியரின் பாசமிகு பேர்த்தியும், க.கிருஷ்ணகுமார் (நோர்வே), காலஞ்சென்ற கிறிஸ்டியன் றொபேட் மற்றும் சந்திரலதா (பாபுலதா), ஜெயரட்ணம்- சந்திரயோகா (வசந்தன்-யோகா), பாலகிருஷ்ணன்- சந்திரலின்ரா (விஜி), இராசேந்திரம்-சுமிதா ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், சிறி- பவானி, மதி-பாமினி, காலஞ்சென்ற பகீஸ்வரன் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழைய தபால்கந்தோர் வீதி,
சங்கானை.
0774385832, 0773282796.**

தகவல்:
குடும்பத்தினர்.

(27441)(10.7.6)

## புதுவை மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு

# இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடி உரிமை கோரி

சென்னை, ஜன.2



புதுவை மீனவர்கள் நலன் கருதி, இலங்கை கடற் பரப்பில் குறிப்பிட்ட காலம் மீன் பிடித்துக்கொள்ள உரிமையை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும் என்று கோரி காரைக்கால் மாவட்ட மீனவர்கள் நேற்று வேலை நிறுத் தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி போராட்டம் காரைக்காலில் நேற்று தொடக்கம் ஆரம்பமாகியது. இதன் மூலம் காரைக்கால் துறை முகத்திலிருந்து சுமார் 400 விசைப்படகுகள் தொழி லில் ஈடுபடாது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காரைக்கால் மாவட்ட அனைத்து மீனவ கிராமப் பஞ்சாயத்தார்கள் கூட்டத்தில் குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து மாவட்ட காங்கிரஸ் கட்சியின் மீனவர ணித் தலைவர் ரவி என்கிற நடராஜன் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமிக்குப் பின்னர் தமிழக கடல் பகுதியில் மீன் வளம் குன்றிவிட்டது. இலங்கைக் கடல் பரப்பில் ஆண்டில் குறிப்பிட்ட மாதம் மீன் அதிகமாகக் கிடைக்கிறது.

மீனவர்களுக்கு தொழில் மந்தம் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் குறிப்பிட்ட காலம் மீன்பிடித் துக்கொள்ள உரிமையை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும்-என்றார். (வ)

## சக்கர வண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

வரணி அரசினர் வைத் தியசாலைக்கு ரூபா 15000 பெறுமதியான இரண்டு சில்லுச் சக்கர வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளது.

வரணியைச் சேர்ந்த அமரர் வே.தியாகராசா ஞாபகார்த்தமாக அவரது உறவினரால் வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கடந்த வியாழக்கிழமை சக்கரவண்டி கையளிக்கப்பட்டது.

(3-122)

## ஆங்கில கற்கைநெறி மீள்பதிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்ஜன2

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் ஆங்கிலக் கற்கைநெறிக்கான மீள் பதிவுகள் இன்று முதல் வெள்ளிக்கிழமைவரை 3 தினங்கள் இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

இந்தக் கற்கை நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்து இறுதிப்பரீட்சைக்குத் தோற்றியவர்களும் தங்களுடைய மீள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியை அண்மித்த சகல வசதிகளுடனும் 6 டொல்பின் வான் விடக் கூடிய வாகனத் தரிப்பிடமும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
(அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டும்)

தொடர்பு: 0778688102.

(27422)(6.7.4)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சின்னத்துரை



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்துரை நேற்று முன்தினம் (31.12. 2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், பொன்னுவின் பெறாமகளும், முருகேசு- நாகமுத்து தம்பதியரின் மருமகளும், சின்னத்துரையின் அன்பு மனைவியும், சூரியகுமாரி (பிரான்ஸ்), சிவகுமார் (கனடா), வசந்தரோகினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், கதிர்காமநாதன்(பிரான்ஸ்), சேந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், லூசில், சிவன், டமிதா, கோபனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்னம்மா, சோதிலிங்கம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, பூலோகரஞ்சினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(01.01.213) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நீற்றாம்மா மரியாம்பிள்ளை



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீற்றாம்மா மரியாம்பிள்ளை நேற்று முன்தினம்(31.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.01.2013) வியாழக்கிழமை பி.ப. 3மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37, ஓடைக்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்
றெஜினா சின்னக்கிளி
0750421986
சூரி சின்னப்பிள்ளை
0771629078

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கனகராசா



உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், கோனாவளைலேன் கொக்குவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகராசா நேற்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், சுமதியின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும், அரிச்சந்திரனின் மாமனும், திவாகர், திலீபன், திவ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், பாக்கியம், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், தம்பிராசா, பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும், சிவஞானம், நாகரத்தினம், சிவமணி, சிவபாக்கியம், சிவலிங்கம், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சிவசுப்பிர மணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2013) வியாழக்கிழமை பி.ப.3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செயயப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோனாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜன. 02

எரிபொருள் ஏற்றிச் செல்லும் பவுசரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனுக்கு கால் முறிந்தது. அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து கோப்பாய் சந்தியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த ஞானசேகரம் பிரதீபராஜ் (வயது -22) என்பவரே படுகாய மடைந்தவராவார்.

மானிப்பாயிலிருந்து கைதடி நோக்கிச் சென்ற பவுசரும் யாழ்ப்பாணத்திலிருந்து நீர்வேலி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகின.

கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தியா சாலைக்கு மாற்றப்பட்டார். (ம-4)

## புதிய யாழ். வரவேற்பு வளைவு



வீதி அகலிப்புக்காக உடைக்கப்பட்ட யாழ்.வளைவை மீண்டும் செம்மணியில் அதே இடத்தில் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகித் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. முன்னர் இருந்ததைப் போன்றே இப்போது அமைக்கப்பட்டு வரும் புதிய வளைவும் இருக்கும் எனவும் அதன் அகலம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வளைவின் கட்டுமானப் பணிகள் இந்த மாத இறுதிக்குள் நிறைவடையும் என்று நல்லூர் பிரதேச சபை தெரிவித்தது. (த-17)

# சிறுவர் நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

சுன்னாகம், ஜன.2

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தால் உருவாக்கப்பட்டு வரும் சிறுவர்களுக்கான நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. லண்டனில் வாழ்கின்ற அளவெட்டியைச் சேர்ந்த பொ.கனகேஸ்வரன் ஆரம்பித்து வைத்த இந்தச் சிறுவர் நூலகத் திட்டத்திற்காக பலர் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். தற்பொழுது ஓய்வு பெற்ற தபாலதிபர் கணபதிப் பிள்ளையும் ஒரு தொகுதி நூல்களைச் சிறுவர் நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேலும் சிறுவர் நூலகத்துக்கான நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் அளவெட்டி அபிவிருத்தி மன்றத்துடன் தொடர்பு கொண்டு நூல்களை அன்பளிப்புச் செய்ய முடியும் என அளவெட்டி அபிவிருத்தி மன்றச் செயலாளர் கை.சரவணன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறுவர் நூலகமானது அளவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறார்களின் வாசிப்பு ஆற்றலையும் அறிவு விருத்தியையும் மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்ந்து வாழும் அளவெட்டியைச் சேர்ந்த முருகேசு சத்தியதாசனின் நிதியுதவியில் அளவெட்டி தெற்குப் பிரதேசத்தில் முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள் ளது.

அளவெட்டி தெற்குப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வாணி முன்பள்ளிக் கட்டடத்தை அளவெட்டி அபிவிருத்தி மன்றத் தலைவரும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தருமான வே. சிவராசா திறந்து வைக்க கட்டடத்தின் நினைவுக் கல்லை அளவெட்டி மகாஜன சபைத் தலைவர் வை.சுப்பிரமணியம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

சமாதான நீதிவான் வை.சின்னப்பு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அள வெட்டிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தயாபரன், முன்பள்ளி ஆசிரியை சரஸ்வதி, வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான க.மயூரதன், ப.உதயகுமார் ஆகியோர் க்லந்து கொண்டனர். (ம-38)

# நாளாந்த விபத்துகளால் காயமடைவோர் அதிகரிப்பு

## பொலிஸாரது நடவடிக்கை இறுக்கமாக்கப்படுமா எனக் கேட்கின்றனர் ஆர்வலர்கள்

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் இடம்பெறும் விபத்துக்களால் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் மட்டும் தினமும் ஐந்துக்கு மேற்பட்டோர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர்.

சிறுகாயங்களுக்கு உள்ளாகி சுமார் 20 இற்கும் மேற்பட்டோர் சேர்க்கப்படுகின்றனர் என்று வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளாகி சிகிச்சைக்காக வைத்திய சாலைகளில் சேர்க்கப்படுபவர்களில் ஒரு தொகையினர் மதுபோதையிலேயே காணப்படுகின்றனர் என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

போக்குவரத்து விதிமுறைகள் உரிய முறை யில் பின்பற்றப்படுமாக இருந்தால், அல்லது அவை பின்பற்றப்படுவதைப் போக்குவரத்துப் பொலிஸார் உரிய முறையில் உறுதிப்படுத்துவார்களாக இருந்தால் அதிக விபத்துகள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியும்.

வாகனச் சாரதிகள் உரிய அனுமதிப்பத்திரம், ஆவணங்களுடன் பயணித்தாலும் விபத்து ஏற்படும் அளவுக்கு கவனயீனமாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

தவிர, சகல ஆவணங்களையும் வைத்திருந்தாலும் மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்றமையும் தெரிய வருகின்றது. எனவே இந்த விடயம் பற்றி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகின்றமை மட்டுமன்றி, தாமாகவே விபத்துக்குள்ளானதையும் காயப்பட்டவர்கள் தெரிவிப்பதில் இருந்து தெரியவருகின்றது.

''காப்பெற்'' வீதிகளில் அதி வேகமாகப் பயணிக்கின்றமை, நாய் குறுக்கே போவதால் விபத்து என்று அவர்கள் காரணம் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் ஏனைய வாகனங்களுடன் மோதி ஏற்பட்ட விபத்து பற்றியோ அல்லது ஏனைய வாகனங்கள் மோதியதால் தாம் காயமடைந்தமை பற்றிய உண்மைகளை வெளியிடாமலும் இருக்கின்றனர். பொலிஸ் விசாரணை களில் பதில்கூற வேண்டும் என்பதற்காகவே அதனை மறைப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

குடாநாட்டில் பல பாகங்களிலும் இடம்பெறும் விபத்துகளால் பல்வேறு வைத்தியசாலைகளிலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

அவர்களில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட வேண்டியவர்கள் மாத்திரமே யாழ். போதன வைத்தியசா லைக்கு மாற்றப்படுகின்றனர்.

எனவே இங்கு அண்மைக் காலமாக அதிகரித்துள்ள விபத்துகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. (ம-4)



நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள பூங்காவில் இருந்த சவுக்கு மரங்கள் அனைத்தும் கிளைகள் வெட்டப்பட்டு மொட்டையாக்கப்பட்டுள்ளன.

எவரது பராமரிப்பும் இன்றிக் காணப்படும் இந்தப் பூங்காவில் இருந்த விளையாட்டு உபகரணங்களது இரும்புகள் கூட திருட்டுப் போயுள்ளன. (ம-17)

# பல்கலை. சூழலில் இருந்த பொலிஸார் அகன்றனர்

யாழ்ப்பாணம்,ஜன. 2

யாழ். பல்கலைக்கழக சூழலில் நிலை கொண்டிருந்த பொலிஸார் நேற்று முன்தினம் அங்கிருந்து அகன்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக பிரதான வாயில் விஞ்ஞான, மருத்துவபீட வாயில், மாணவர் விடுதி என்பவற்றின் முன்பாகப் பொலிஸார் தற்காலிக கூடுகள் அமைத்து தங்கியிருந்தனர்.

கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அந்த இடங்களில் நிலை கொண்ட பொலிஸார் சில நாள்களின் பின்னர் கூடுகள் அமைத்து நிரந்தரமாகத் தங்கியிருந்தனர். இந்த நிலையிலேயே நேற்று முன் தினம் அந்த இடங்களில் இருந்து விலகியுள்ளனர்.

பொலிஸார் அவ்வாறு நிலை கொண்டிருந்தமை யாழ். பல்கலைக்கழகத்துக் குச் செல்லும் மாணவ, மாணவியர் அச்ச நிலைக்கு ஆளாகியிருந்தனர். இது பலராலும் விமர்சனத்துக்குள்ளாகியிருந்தது. இந்த நிலையில் மாணவர்கள் பல்கலைக் கழகத்தினுள் செல்வதும் குறைவாகக் காணப்பட்டது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாணவர்கள் நடத்திய அமைதிப் போராட்டத்தின் போது பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் மாணவர்களைத் தாக்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து பொலிஸார் பல்கலைக்கழக சூழலில் தொடர்ச்சியாகத் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# இணையத்தின் கீழ் உள்ள 'வைகுறோ' வால் 350 பயனாளிகளுக்கு கடன் உதவி

**வழங்கப்பட்ட நுண் கடனில் மீன்பிடித் துறை சார்ந்தவர்களுக்கு வலை, வள்ளம் என்பவற்றை வாங்கு வதற்காக 32 பேருக்கு 10 இலட்சம் ரூபா கடன் உதவி கிடைத்துள்ளது.**

யாழ்ப்பாணம், ஜன.2

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் கீழுள்ள 'வைகுறோ' நிறுவனத்தால் கடந்த வருடம் 11 மாத காலப் பகுதியில் 350 பேருக்கு சுழற்சி முறை நுண் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

வலி. தெற்கு, வலி.தென் மேற்கு, வலி. மேற்கு, வலி வடக்கு, வலி. கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உடுவில், சங்குவேலி, மல்வம், இணுவில், புன்னாலைக்கட்டுவன், கந்தரோடை, சாவல்கட்டு, கூழாவடி, ஆனைக்கோட்டை, [illegible], பணிப்புலம், பாண வெட்டி, வறுத்தோலை, அளவெட்டி, மணற்புலம், சீந்திப்பந்தல், மல்லாகம், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 350 குடும்பங்களுக்கு சுழற்சி முறை நுண் கடனை இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

வழங்கப்பட்ட நுண் கடனில் மீன்பிடித் துறை சார்ந்தவர்களுக்கு வலை, வள்ளம் என்பவற்றை வாங்கு வதற்காக 32 பேருக்கு 10 இலட்சம் ரூபா கடன் உதவியும் கோழி வளர்ப்பு துறை சார்ந்தவர்கள் 53 பேருக்கு 20 இலட்சம் ரூபா கடன் உதவியும், மாடு வளர்ப்பு துறை சார்ந்தவர்களுக்கு நல்லினப் பசுக்கள் கொள்வனவு செய்வதற்கு 48 பேருக்கு 40 இலட்சம் ரூபா கடன் உதவியும், வியாபாரத் துறை சார்ந்த 125 பேருக்கு 70 இலட்சம் ரூபா கடன் உதவியும், விவசாயத் துறை சார்ந்த 30 பேருக்கு 5 இலட்சம் ரூபா கடனுதவியும், சிறுகைத் தொழில் துறை சார்ந்த 33 பேருக்கு வெல்டிங் பொருள் கொள்வனவு, உணவுப் பொருள்கள் தயாரித்தல் போன்றவற்றுக்கு 5 இலட்சம் ரூபா கடனுதவியும், தையல் துறை சார்ந்த 29 பேருக்கு 5 இலட்சத்து 90 ஆயிரத்து 500 ரூபா கடனுதவியையும் வழங்கியுள்ளது.

அத்துடன் கடனுதவிகளை வழங்கிய பயனாளிகளுக்குத் தேவையான வலுவூட்டல் வியாபாரத் திட்டத்தை யதார்த்த முறையில் அமைப்பதற்கு தேவையான ஆலோசனைகளையும் இந்த நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் வேட்டையாடப்படும் வெளிநாட்டுப் பறவையினங்கள்

## அவை இறைச்சிக்காக ஹோட்டல்களுக்கு விற்பனை

இராமநாதபுரம் மாவட்டத்தில், சரணாலயங்களில், தஞ்சம் புகுந்துள்ள, வெளிநாட்டுப் பறவைகள், வேட்டையாடப்பட்டு அவற்றின் இறைச்சி விடுதிகளுக்கு விற்கப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

வருடம்தோறும் ஒக் ரோபர் முதல் டிசெம்பர் வரை ஆஸ்திரேலியா, ஐரோப்பா, இந்தோனேஷியா உள்ளிட்ட, பல நாடுகளில் இருந்து பல் வேறு வகையான பறவைகள் இராமநாதபுரத்திற்கு வந்து செல்கின்றன. தற்போது, சரணாலயங்களில் குறைந்தளவே பறவைகள் காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். பறவைகளை பாதுகாக்கும் வகையில் தீபாவளி பண்டிகையின் போது சித் திரங்குடி, தேர்த்தாங்கல் உள் ளிட்ட சில கிராமங்களில் பட் டாசு வெடிப்பதில்லை. இந்த நிலையில், சிலர் பறவைகளை வேட்டையாடி விற்பனை செய்து வருகின்றனர். பிடிபட்ட பறவைகள் உள்ளூர் மட்டுமின்றி மதுரை, புதுக்கோட்டை, திருச்சி பகுதியில் உள்ள விடுதிகளுக்கும் விநி யோகம் செய்யப்படுகின்றன.

கடந்த வாரம் ரஷ்ய பறவையான நீல சிறகு கொண்ட வாத்துக்களை வேட்டையாடிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம், வனத்துறை நடத்திய விசாரணையில் பறவை இறைச்சி, ஹோட்டல்களுக்கு மொத்தமாக விநியோகம் செய்யப்படுவதாகத் தெரிவித்ததாக வனத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



புத்தாண்டை யொட்டி, செகந்திராபாத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை, தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு சந்தித்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி சார்பில் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.

## மீனவர்கள் விவகாரம்; தமிழக அரசின் ஒத்துழைப்பு தேவை

### நாராயணசாமி கருத்து



இலங்கை கடற்படையினரால் தாக்கப்படும் பிரச்சினையில் தீர்வு காணப்பட வேண்டும் என்றால் தமிழக அரசின் ஒத்துழைப்புத் தேவை என்று நாராயணசாமி தெரிவித்தார்.

புதுச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்,


இந்திய - இலங்கை கடல் எல்லையில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவது குறித்த விவகாரத்தில் இலங்கை அரசு இந்தி யாவுடன் பேச்சு நடத்தத் தயாராகவே உள்ளது.

ஆனால், தமிழக அரசு இந்த விவகாரத்தில் முழு ஒத்துழைப்பு அளிக்க வில்லை. இலங்கை அரசு டன் பேச்சு நடத்துவது குறித்து மத்திய அரசு தமிழக அரசுக்கு இரண்டு முறை கடிதம் எழுதியும், உரிய பதில் இல்லை. மீனவர் பிரச்சினைகக்கு தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு தமிழக அரசே காரணம் - என்றார்.

# பாலியல் குற்றச் சட்டங்களை கடுமையாக்குவதற்கு ஆலோசனை

## கட்சிகளைக் கோரியுள்ளார் உள்துறை அமைச்சர்

தற்போதைய சூழ்நிலையில் பாலியல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனையை வழங்க வேண்டும் என்பதுதான் பலருடைய கருத்து.



டில்லி, ஜன.2

பாலியல் குற்றங்களுக்கான தண்டனை வழங் கும் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்பது குறித்து அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளைக் கோரியுள்ளார் மத்திய உள் துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டே.

இது குறித்து அரசியல் கட்சிகள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அனைத் துக் கட்சிகளுக்கும் சுஷீல் குமார் ஷிண்டே எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தாவது:-

டில்லியில் 23 வயது மருத்துவ மாணவி பாலியல் வன் புணர்வுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதை அடுத்து பாலியல் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து ஆராய நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையில் டிசெம்பர் 23 ஆம் திகதி குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதி லெய்லா சேத், முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியம் ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

அந்தக்குழு தனி நபர், அரசு சாரா நிறுவனங்கள், சமூக அமைப்புகள், மகளிர் அமைப் புகள் உள்ளிட்ட பல தரப்பினரிடமும் கருத்துகளைக் கேட்டு வருகிறது. அந்த வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களுடைய கருத்துகளை ஜனவரி முதல் வாரத்துக்குள் தெரிவிக்கலாம்.

தற்போதைய சூழ்நிலையில் பாலியல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனையை வழங்க வேண்டும் என்பதுதான் பலருடைய கருத்து. அதற்கேற்றாற் போல் நடைமுறையில் உள்ள சட் டங்களில் திருத்தம் கொண்டு வர ஜே. எஸ். வர்மா குழு ஜனவரி மாத இறுதியில் அரசுக்கு பரிந்துரைக்கும். - என்றுள்ளது. (வ)

## பாலியல் குற்றத்துக்கு தூக்கு ஜெயலலிதா பலத்த ஆதரவு

பாலியல் குற்றத்துக்கு தூக்குத் தண்டனை மற்றும் வேதியியல் முறை ஆண்மை நீக்கம் ஆகியவற்றுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாலியல் வன்முறைகள் தொடர்பாக மாநிலத்தில் பெண்களிடம் அச்ச உணர்வு ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வன்புணர்வு வழக்குகள் பெண் உதவி ஆய்வாளர் மூலம் விசாரணை நடத்தப்படும். பாலியல் வன் முறைகளைத் தடுக்கும் விதமாக குண்டர் சட்டம் திருத்தப்படும். பாலியல் வன்புணர்வுக்கு உட்படும் பெண்களின் மருத் துவ செலவுகளை அரசே ஏற்கும். வன்புணர்வு குற்றத் துக்கு தூக்குத் தண்டனை மற்றும் வேதியியல் முறை ஆண்மை நீக்கம் இவ்வாறான அனைத்து பரிந்துரைகளுக்கும் அவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

## ரயில் மோதி இறந்தன யானைகள்

சென்னை, ஜன.2

இந்தியாவில் பயணிகள் ரயில் ஒன்று மோதியதில் 5 யானைகள் இறந்துள்ளன. இந்தியாவின் ஒரிசா மாநி லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த யானைகள் ராம்பஹ காட்டுப்பகுதியிலிருந்து ரயில்வே தண்ட வாளங்களை கடந்து கொண்டிருந்த வேளையிலேயே ரயில் மோதி இறந்துள்ளதாக ரயில்வே திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அந்தப்பகுதியில் யானை கள் நடமாடுவதால் ரயில்களின் வேகத்தை குறைத்துச் செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளபோதிலும், அது அலட்சியம் செய்யப் பட்டுள்ளதாக வன அமைச்சுத் திணைக்களம் தெரி வித்துள்ளது. கடந்த 5 வருடங்களில் ஒரிசா மாநிலத்தில் சுமார் 300 யானைகள் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## தமிழக அரசின் ஆலோசகராக முன்னாள் தலைமைச் செயலர்



சென்னை, ஜன.2

தமிழக அரசின் ஆலோசகராக முன்னாள் தலைமைச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி நியமிக்கப்பட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு பேட்ச் ஐ.ஏ.எஸ். அதிகாரி தேவேந்திரநாத் சாரங்கி ராமநாதபுரம், தென் ஆர்க்காடு மாவட்டங்களின் ஆட்சியாளராகப் பொறுப்பு வகித்தவர். பின்னர் அரசின் பல் வேறு துறைகளில் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளில் பணியாற்றியவர். பல்வேறு முக்கிய துறைகளின் செயலாளராக பணியாற்றிய அவர் கடைசியாக தலைமைச் செயலாளராக பதவி வகித்தார். டிசெம்பர் 31 ஆம் திகதி அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். புதிய தலைமைச் செயலாளராக ஷீலா பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். நேற்று முன்தினம் அவர் பொறுப் பேற்றார்.

சாரங்கி விடை பெற்றார். இந்த நிலையில், ஓர் ஆண்டுக்குத் தற்காலிக அடிப்படையில், சாரங்கியை அரசின் ஆலோசகராக தமிழக அரசு நியமித்துள்ளது.

அதையடுத்து முதல்வர் ஜெயலலிதாவைச் சாரங்கி சந்தித்து ஆசி பெற்றார். அவருக்கு நியமன ஆணையை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார். (வ)


## தங்கச்சட்டை அணிந்து புத்தாண்டு கொண்டாடிய புனே தொழிலதிபர்

மும்பை, ஜன.2

மகாராஷ்டிராவில் முன்னணி நகரங்களில் ஒன்றான புனே நகரின் தொழி லதிபர் 1.27 கோடி ரூபா மதிப்புள்ள தங்கச் சட் டையை அணிந்து, புத்தாண்டை கொண்டாட உள்ளார்.

இதற்காக அவர் 3.25 கிலோ எடையில், புதிய தங்கச்சட்டையை உருவாக்கியுள்ளார். புனே அருகே உள்ள பிம்ப்ரி என்ற இடத்தைச் சேர்ந்தவர் தத்தா புகே. இவர் அங்கீகரிக்கப்பட்ட சீட்டுப்பிடிக்கும் நிறுவனம் ஒன்றை நடத்திவருகின்றார். இவரின் மனைவி சீமா, புனே நகரமாநகராட்சி ஆணையாளர். தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்.

ஏற்கனவே 5 கிலோ எடையில் கழுத்து, கை மற்றும் இடுப்பில், தங்க நகைகளை அணிந்து வலம் வரும்



தத்தா 2013 ஆம் ஆண்டை புதுமையாக கொண்டாட விரும்பினார். இதுவரை யாருமே செய்யாத வகையில் தங்கச் சட்டை அணிந்து புத்தாண்டை கொண்டாட விரும்பிய அவர் அதற்காக 3.25 கிலோ தங்கத்தைக் கொடுத்தார். 15 நகைத்தொழிலாளர்கள், 15 தினங்கள் உழைத்து, தங்கச் சட்டையை உருவாக்கியுள்ளனர்.

அதில், பொத்தான்கள், 'ஸ்வரோவ்ஸ்கி' செயற்கை வைரங்களால் உருவாக்கப்பட்டுள்ளன. வெறும் தங்கச் சட்டையாக இருந்தால் பார்க்க நன்றாக இருக்காது என்பதால், அந்த சட்டையில் ஆங்காங்கே தங்க மலர்களையும் வைத்துள்ளனர். அந்தச் சட்டையின், தற்போதைய விலை, 1.27 கோடி இந்திய ரூபா. இதை, தேஜ் பால்ரங்கா என்ற பொற் நகைத்தொழிலாளர்கள் வடிவமைத்துள்ளனர்.

புத்தாண்டை முன்னிட்டு தங்கச் சட்டை அணியஉள்ள தத்தா, இதற்கு முன்பே தங்கத்தால் பல பொருள் களை அனுபவித்து வருகிறார். [illegible] தங்கத்தால்ஜொலிக்கிறார்.

### தீவிரவாதிகள் கொலை; ஜம்முவில் ஊரடங்கு உத்தரவு நீட்டிப்பு

ஜம்மு- காஷ்மீரில் இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து தெற்கு மாவட்டங்களில் நான்காவது நாளாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரின் பட்காம் மாவட்டத்தில் லஷ்கரே தொய்பா அமைப்பைச் சேர்ந்த இரு தீவிரவாதிகள் காணும் இடத்தில் சுடுவதற்கான அனுமதியில் சுட்டுக்கொல்லப்பட்டன.

இதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதையடுத்து ஹுரியத் மாநாட்டு கட்சி உள்ளிட்ட அமைப்புகள் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இதனால் காஷ்மீரின் புல்வாமா, காஷ் மீர் உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த நான்கு நாள்களாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவில் நிலநடுக்கம்

நியூயோர்க், ஜன.2

தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள பெருவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.2 ஆகப் பதிவாகியுள்ளது.

கஸ்கா நகரத்தின் வடகிழக்கே 129 கி.மீ. தொலைவில், 41.5 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பெரு நாடு பசுபிக் கண்டத்தில், 'நெருப்பு வளையம்' என அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் உலகில் ஏற்படும் மொத்த நில நடுக்கங்களில், 85 சதவீத நிலநடுக்கங்கள் பெருவில்தான் ஏற்படுகின்றன.



புத்தாண்டை வரவேற்கும் மியன்மார் மக்கள்.

## முதன்முறையாக மியன்மாரில் புதுவருடக் கொண்டாட்டங்கள்

யங்கூன், ஜன.2

மியன்மாரில் இந்த ஆண்டு முதன் முறையாக புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

மியன்மாரில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ ஆட்சி நடக்கிறது.

இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஆங் சாங் சூகி தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றில் உறுப்பினராக உள்ளார்.

தற்போது அங்கு ஓரளவு ஜனநாயக நடைமுறைகள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன.

அதனையடுத்து மியன்மார்மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விலக்கிக் கொண்டுள்ளன.

மியன்மாரின் பழைய தலைநகரான யாங்கூனில், புத்தாண்டு தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. புத்தாண்டு கொண்டாட இராணுவ அரசு முன்னர் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## லிங்கனுடன் என்னை ஒப்பிட்டுப்பார்த்ததில்லை

### சொல்கிறார் பராக் ஒபாமா

நியூயோர்க், ஜன.2

முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுடன் என்னை ஒருபோதும் ஒப்பிட்டுப் பார்த்ததில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தொலைக்காட்சி ஒன்றில் ஒபாமா பங்கேற்றிருந்தார். அப்போது அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ''நீங்கள் லிங்கன் இருந்தது போன்ற சூழலில் இருப்பதாக உணர்கிறீர்களா?' என்று ஒபாமாவிடம் கேட்கப்பட்டது. அப்போது அவர்,

''ஆபிரகாம் லிங்கனுடன் என்னை ஒருபோதும் ஒப்பிட்டுக் கொண்டதில்லை. தற்போதுள்ள பிரச்சினைகளின் வீரியமும், லிங்கன் காலத்திலிருந்த உள்நாட்டுப் போர் மற்றும் அடிமைத்தனம் தொடர்பான பிரச்சினைகளின் வீரியமும் வெவ்வேறானவை. ஜனநாயகம் கொஞ்சம் குளறுபடியானதுதான். பன்முகத் தன்மை கொண்ட பெரிய நாடு நம்முடையது. இருப்பினும் நாம் சரியானவற்றையே செய்து வருகிறோம்.

கடந்த நான்காண்டுகளாக நான் எவ்வாறு ஆட்சி செய்ய முயன்றேன் என்பதை பொதுவாக நீங்கள் கவனித்திருக்கக் கூடும். எந்தவொரு சித்தாந்தத்தின் அடிப்படையிலும் நான் செல்லவில்லை. நான் யதார்த்தவாதி. எனது செயல்பாடுகள் பயனளிப்பதையே விரும்புகிறேன். மற்றொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், அடுத்த முறை தேர்தலில் போட்டியிடவோ, பிரசாரம் செய்யவோ போவதில்லை. நான் பதவியேற்கும் போது இருந்ததை விட, வலுவான, ஸ்திரமான, பாதுகாப்பான, செழிப்பான அமெரிக்காவை விட்டுச் செல்வேன். வின்ஸ்டன் சேர்ச்சில் சொன்னதைப் போல, சரியான முடிவை எடுப்பதற்கு முன் அனைத்து வாய்ப்புகளையும் முயன்று பார்ப்போம். எல்லாவற்றையும் செய்து முடித்த பிறகும் சரியானவற்றையே மேற்கொள்வோம். அதுதான் உண்மையான ஆட்சிமுறை'. அரசியல் என்பது எப்போதும் சிக்கல் நிறைந்தது என்பதை அமெரிக்கர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்'' என்று தெரிவித்தார்.

# தடைகள் தளர்வு

### கட்டுமானப் பொருள்களின் இறக்குமதிக்கு காஸாவுக்கு அனுமதி அளித்தது இஸ்ரேல்

ஜெருசலேம், ஜன.2

கட்டுமான பொருட்களை இறக்குமதி செய்ய பலஸ்தீனத்தின் காஸா பகுதிக்கு இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பலஸ்தீனத்தின் காஸா பகுதி இஸ்ரேல் நாட்டுக்குள் இருக்கிறது. 2006ஆம் ஆண்டு காஸா பகுதியில் நடந்த தேர்தலில் பாடா அமைப்பை தோற்கடித்து, ஹமாஸ் அமைப்பு வெற்றி பெற்றது.

அதையடுத்து ஹமாஸ் அமைப்பினர் கட்டுமான பொருள்களை இறக்குமதி செய்யக் கூடாது என்று இஸ்ரேல் தடை விதித்திருந்தது.

கட்டுமான பொருள்களைப் பயன்படுத்தி ஹமாஸ் அமைப்பினர் வெடிபொருள்களைத் தயாரிக்கின்றனர் என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையிலேயே தற்போது கட்டுமான பொருள்களை இறக்குமதி செய்ய இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது.

## புரண்டது சுற்றுலா பஸ் கனடாவில் 9 பேர் சாவு



றொறன்ரோ, ஜன.2

கனடாவில் சுற்றுலா பஸ் தடம்புரண்டதில் 9 பேர் உயிரிழந்தனர். இருபது பேர் படுகாயமுற்றனர்.

கனடாவில் தற்போது பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. வீதிகள் எங்கும் பனிபடர்ந்து இருந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பஸ் பாதையில் இருந்து சறுக்கி பன்னிரண்டு மீற்றர் ஆழமான பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. இதனால் மீட்புப் பணிகள் தாமதமடைந்தன. மீட்புப் படையினர் கயிறு கட்டி பள்ளத்தில் இறங்கி காயமுற்றவர்களை மீட்டனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## ஹிலாரியின் உடல் நிலையில் முன்னேற்றம்

நியூயோர்க், ஜன.2

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஹிலாரி கிளின்டனின் உடல் நிலையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனின் மூளை மற்றும் மண்டையோட்டுப் பகுதிக்கு இடையில் குருதி உறைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் அதிலிருந்து ஹிலாரி கிளின்டன் சிறந்த முறையில் தேறிவருவதாக அவருக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

65 வயதான ஹிலாரி கிளின்டன் மயக்கமுற்ற நிலையில் நேற்றுமுன்தினம் நியூயோர்க்கிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குத் திமோரில் இருந்து வெளியேறியது ஐ.நா. படை

டிலி, ஜன.2

கிழக்குத் திமோரில் இருந்து ஐ.நா. அமைதிப் படை முழுமையாக வெளியேறியது.

கிழக்கு திமோரில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இருந்து ஐ.நா. அமைதிப் படை படிப்படியாக திரும்பப் பெறப்பட்டது.

இறுதியாக 2012ஆம் ஆண்டின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் ஆயிரத்து 500 ஐ.நா. படையினர் திமோரில் இருந்து விடை பெற்றனர்.

''திமோர் மக்களும், அதன் தலைவர்களும் இனிவரும் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளனர். நாட்டின்



பாதுகாப்பை உள்நாட்டுப் பொலிஸார் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். அதையடுத்து ஐ.நா. அமைதிப்படை திருப்பி அழைக்கப்பட்டுள்ளது.'' என்று திமோருக்கான ஐ.நா. ஒருங்கிணைந்த திட்ட தலைவர் பின் ரெஸ்கே நீல்சன் தெரிவித்தார்.

தென்கிழக்காசியக் கடலின் தென் பகுதியில் திமோர் தீவு அமைந்துள்ளது. கிழக்கு திமோர் தனி நாடாகவும், மேற்கு திமோர் இந்தோனேஷியாவின் ஒரு மாகாணமாகவும் அமைந்துள்ளன. 24 ஆண்டுகளாக இந்தோனேஷியாவின் ஆதிக்கத்தில் இருந்த கிழக்குத் திமோர், ஐ.நாவின் தலையீட்டால் பொது வாக்கெடுப்பு மூலம் 1999ஆம் ஆண்டு தனி நாடாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வேஸின் உடல் நிலை மேலும் மோசமாகியது

### வெனிசூலாவில் புதுவருட கொண்டாட்டங்கள் இல்லை

ஹவானா, ஜன.2

புற்று நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வெனிசூலா ஜனாதிபதி சர்வேஸின் உடல்நிலை மேலும் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 11 ஆம் திகதி முதல் நான்கு முறை சத்திரசிகிச்சைக்கு உட்பட்டுள்ளார் சர்வேஸ். எனினும் அவரது உடல் நிலை மேலும் மோசமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது

சர்வேஸ் சுவாசம் சம்பந்தமான பிரச்சினையை எதிர் நோக்கின்றார் என்று மருத்துவமனை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

**சர்வேஸ் சுவாசம் சம்பந்தமான பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.**



1999 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி பதவி வகிக்கும் சர்வேஸ், எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி மேலும் ஆறு வருடங்களுக்கான பதவிப் பிரமாணத்தை மேற்கொள்ளவுள்ளார். சர்வேஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து வெனிசூலாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து புதுவருட கொண்டாட்டங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலம்பியாவில் நிலச்சரிவு 5 பேர் சாவு; பலர் காயம்



பொகோட்டா, ஜன.2

கொலம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். 7 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் மண்சரிவில் சிக்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பியாவில் தொடர்ந்து நிலச்சரிவு ஏற்பட்டு வருகிறது. சமீபத்தில் நேவியா நகர் அருகே நிலச்சரிவு ஏற்பட்டது. பாறைகள் வீதியில் சரிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. புல்டோசர்கள் மூலம் மண்ணை அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது மறுபுறம் வாகனங்கள் சென்றுகொண்டிருந்தன. அப்போது மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டு வீதியில் சென்ற வாகனங்களின் மேல் மண் வீழ்ந்துள்ளது.

இராட்சத எந்திரங்கள் மற்றும் மோப்ப நாய் உதவியுடன் மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பணியில் 300 பேர் ஈடுபட்டுள்ளனர்.



சீனாவில் ஜனவரி 5ஆம் திகதி தொடங்கவுள்ள சர்வதேச பனிக்கட்டித் திருவிழாவுக்காக பனிக்கட்டிகளை திரட்டும் பணி தீவிரமாக நடை பெற்று வருகிறது. சீனாவின் ஷோன் குவா நதியிலிருந்து இதுவரை 2 இலட்சத்து 70 ஆயிரம் கனமீற்றர் அளவுக்கு பனிக்கட்டிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உள்ளூர் வாசிகள் பெருமளவு பணம் சம்பாதிக்கிறார்கள்.

## சிரிய வன்முறைகள் குறித்து கவலை தெரிவிக்கிறது ஐ.நா.

லண்டன், ஜன.2

சிரியாவில் தற்போதைய நிலையே நீடித்தால், புதிய ஆண்டில் சுமார் 1 இலட்சம் மக்கள் உயிரிழக்க நேரிடும் என்று சிரிய விவகாரங்களை கவனித்து வரும் ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதி லக்தர் பிரஹிமி கவலை தெரிவித்துள்ளார்.

சிரிய உள்ளநாட்டுப் போரில் இதுவரை 45 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். சிரிய இராணுவத்தினருக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. நாளாந்தம் பொது மக்களின் உயிரிழப்புகள் அதிகரித்துச் செல்லுகின்றன.

இந்த நிலையிலேயே சிரிய விவகாரங்களைக் கவனித்து வரும் ஐ.நா. பிரதிநதி லக்தர் பிரஹிமி கவலை தெரிவித்துள்ளார்.

''தற்போது சிரியாவில் நிலவி வரும் பதற்ற நிலை மேலும் நீடித்தால், யுகோஸ்லோவேக்கியாவில் உருவானதைப் போல் சிரியாவில் தனி மாநிலங்கள் அமையும் வாய்ப்பு ஏற்படாமல் போகும். சோமாலியாவின் நிலையை சிரிய மக்கள் எதிர்கொள்ள நேரிடும். ஆயுத பலம்மிக்கவர்களால் அப்பாவி மக்கள் அடக்கி ஆளப்படுவார்கள். அடுத்த ஆண்டில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வன்முறையால் உயிரிழக்கும் அபாயம் சிரியாவில் உள்ளது.'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நோபல் பரிசு பெற்ற ஆராய்ச்சியாளர் சாவு

ரோம், ஜன.2

இரத்தத்தில் உள்ள அணுக்கள் குறித்து ஆராய்ச்சி செய்து புற்றுநோய்க்கான காரணிகளைக் கண்டறிய பெரும் பங்காற்றிய 103 வயதான இத்தாலி நாட்டு அறிவியல் அறிஞர் ரீட்டா லெவி மோன்டால்சினி காலமானார்.

இத்தாலி நாட்டில் உள்ள வடக்கு துரின் பகுதியில் 1909ஆம் ஆண்டு வசதியான யூதக் குடும்பத்தில் பிறந்தவர் ரீட்டா லெவி மோன்டால்சினி.

கல்லூரிக் கல்வியை முடித்து மருத்துவப்பட்டம் பெற்ற அவர், மேற்கொண்டு மருத்துவ ஆராய்ச்சி கல்வியை தொடரவிடாமல் 1936 ஆம் ஆண்டு இத்தாலியில் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையையும் மீறி இரத்தத்தில் உள்ள அணுக்களைப் பற்றி அவர் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

இவரின் தீவிர ஆராய்ச்சியின் பயனாக புற்றுநோய்க்கு காரணமான பல அணுக்களைப் பற்றிப் பின்னர் வந்த ஆராய்ச்சியாளர்களால் அறிந்து கொள்ள முடிந்தது. இத்தாலியின் உயர்ந்த ஆராய்ச்சியாளராகவும், மதிப்புக்குரிய நபராகவும் விளங்கிய அவர் அமெரிக்காவின் ஸ்டான்லி கோஹன் என்பவருடன் இணைந்து நடத்திய ஆராய்ச்சிக்காக இருவருக்கும் 1986ஆம் ஆண்டு உலகின் உயரிய விருதான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

100 வயதைக் கடந்த நிலையிலும் தொடர்ந்து ஆராய்ச்சி ஒன்றிலேயே தனது கவனத்தை செலுத்தி வந்த ரீட்டா லெவி மோன்டால்சினி நேற்றுமுன்தினம் காலமானார். உணவுக்குப் பிறகு உறங்கச் சென்ற அவரது உயிர் தூக்கத்திலேயே அமைதியாக பிரிந்தது என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

## 17 இலட்சம் கருக்கள் மண்ணில் புதைப்பு

லண்டன், ஜன.2

குழந்தை இல்லாதவர்கள் செயற்கை கருவூட்டல் முறையில் குழந்தை பெற்றுக் கொள்ளும் சிகிச்சை முறை உள்ளது. பிரிட்டனிலேயே சோதனை குழாய் மூலம் குழந்தை பெறுவது அதிகமாக உள்ளது. எனவே அங்கு செயற்கை கரு உருவாக்குவது அதிகரித்துள்ளது.

1991ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் 35 இலட்சம் மனித கருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனித கருக்களின் ஆயுட்காலம் முடிவடைந்து வருவதால், அவைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதன்படி தற்போது 17 இலட்சம் செயற்கை மனித கருக்கள் வீணாகியதால் மண்ணில் புதைக்கப்பட்டன.

# மரண அறிவித்தல்

## திருமதி இந்திராணி சிவகுருநாதன் (பூப்பிள்ளை)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி சிவகுருநாதன் 28.12.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுருநாதனின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், முத்துலிங்கம், சிந்தாமணி, பூரணகாந்தி, உலகேஸ்வரி, மனோன்மணி, கமலாம்பிகை, சோதிலிங்கம், காலஞ்சென்ற விஜயதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுமார் (France), செல்வகுமார் (Canada), செல்வநாதன் (France), விமலநாதன் (France) ஆகியோரின் பாசத்துக்குரிய தாயும், பவித்தா (France), கௌசிதா (Canada), லர்மினி (France), பிரியந்தினி (France) ஆகியோரின் அன்பு மாமியும், சிந்துகா, சாருகா, சஜீவன், சாஜிதன், சாத்விகா, சங்கீத், சங்கவி, ஒலிவியா, நோறா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான திருச்சிற்றம்பலம், மனோன்மணி, இராமு, சிவசம்பு, சிவலிங்கம், நடராஜா மற்றும் ஸ்ரீமதி, கனகசபாபதி, இன்பராணி, விஜயகுமாரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பத்மாவதி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2013) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/1, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
021 2375 124

தகவல்:
ச. சிவகுருநாதன்
(கணவர்)

(27498) (15.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையின் விளைவே சாதனை

(11)

சிந்திக்கும்போது இதே விடயம் என்ன மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்று பார்க்கலாம். கதையை இரசித்துப் படித்தீர்கள். அந்தக் கதை உங்களுக்குப் பிடித்திருக்கிறது. அந்தக் கதையில் உங்களைக் கவர்ந்த அம்சம் எது என்று நீங்கள் சிந்திக்கும்போது, கதையின் ஜீவனைப் புரிந்து கொள்ளுகிறீர்கள். அந்தக் கதை சொல்லப்பட்டுள்ள முறையைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள். அது எழுதப்பட்டுள்ள நடையைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள். அந்தக் கதை வெற்றி பெற்றதற்கான காரணம் என்ன என்பதை உங்கள் சிந்தனை உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறது.

ஒரு கதை வெற்றி பெறுவதற்கான அம்சங்கள் உங்களுக்கு விளங்கி விடுகின்றது. இந்த அம்சங்களை நீங்களும் முயற்சித்தால் ஒரு நல்ல கதையை உருவாக்க முடியும் என்கிற நம்பிக்கையை அந்தச் சிந்தனை உங்களுக்கு ஏற்படுத்திவிடுகிறது.

சிந்தனையால் ஏற்படுகின்ற பலன்கள்: சாதனைக்குத் தூண்டுவது சிந்தனை. வெற்றிப் படிக்கட்டுகளை அமைத்துக் கொடுப்பது சிந்தனை, தோல்விகள் ஏற்பட்டாலும், அந்தத் தோல்விகளுக்கான காரணத்தை சிந்தனைதான் உங்களுக்கு உணர்த்த முடியும். வாழ்க்கையில் வருவதையெல்லாம் சிந்திக்காமல் நாம் அப்படியே ஏற்றுக் கொள்கின்ற போது, பிரச்சினைகள் சுமைகளாகிவிடுகின்றன. அந்த நிலையில் சாதனைகள் நிகழ வழியில்லாமல் போய் விடுகின்றது.

நாம் செய்கின்ற காரியங்களுக்கு வழி காட்டுவது இரண்டு. ஒன்று ஆசை, மற்றொன்று சிந்தனை. ஆசை வழிகாட்டுகின்ற போது கண்மூடித்தனமாக செயற்படுகிறோம். ஆசைக்கு அனைத்தும் நிஜமாகிவிடுவதில்லை. ஆசைக்கு தோற்றமும், கற்பனையுமே காரணமாகி விடுகின்றன. சிந்தனை அங்கே பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றது. செயல்கள் நிகழலாம். ஆனால், சிந்தனையின் விளைவாக நிகழ்ந்த செயல்களாக அது இருக்காது.

சிந்தனை வழிகாட்டுகின்ற போது சாதக பாதகங்களை யோசிக்கிறோம். செயல்களைத் திட்டமிடுகிறோம். தோல்விகள் நேர்ந்தால் காரணங்களை ஆராய்கிறோம். நம்மை நாமே திருத்திக் கொள்வதற்கு சிந்தனை துணை புரிகின்றது.

தவறான முடிவுகளை எடுக்காமல் ஒருவன் செயற்படுவது சாத்தியமில்லை. எவ்வளவுதான் சிந்தித்து செயற்பட்டாலும், சில சந்தர்ப்பங்களில் தவறான முடிவுகள் தவிர்க்க முடியாதவை ஆகிவிடுகின்றன. நம் சிந்தனை செயற்படுகின்றபோதும், நமக்கு வெளியில் இருந்து பல தாக்கங்களுக்கு நாம் உள்ளாகிறோம். அப்போது நாம் நினைத்ததற்கு மாறான விளைவுகள் தோன்றுகின்றன. தவிர, நமக்குக் கிடைக்கின்ற தகவல்களை மட்டுமே வைத்து நாம் முடிவுகளை மேற்கொள்ளுகிறோம். போதுமான தகவல்கள் தவறானவையாக இருந்தாலோ நம்முடைய முடிவுகள் தவறாகி விட வாய்ப்புண்டு.

ஆகவே, சிந்தனை வழிகாட்டுகின்ற போது கவலைகளே நிகழாது என்று அர்த்தமில்லை. ஆனால், கவலைகளுக்கான காரணங்களை எளிதில் கண்டுபிடித்து விட முடியும். அவற்றைப் போக்கிக் கொண்டு விடவும் முடியும். சிந்தனை வழிகாட்டுகின்றபோது இந்த சௌகரியம் நமக்கு உண்டு.

சிந்திக்காதவர்களால் எதையும் சாதிக்க முடியாது. நம்முடைய ஒரு நாளின் நடவடிக்கைகள் பற்றி நாம் சிந்திக்கின்ற போது, அந்த நாளில் ஏற்பட்ட தவறுகள் மறுபடியும் நிகழாமல் மறுநாள் பார்த்துக் கொள்ளுவது சாத்தியமாகிறது.

காந்தியடிகளே கூட இமாலயத் தவறுகள் செய்து விட்டதாக ஒப்புக் கொண்டு இருக்கிறார். எல்லா சாதனையாளர்களும் தவறுகள் செய்து பின்னர் திருத்திக் கொண்டவர்களே!

ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கக் கூடும். செவிலியர் தொழிலை உன்னதமான நிலைக்கு உயர்த்தியவர் அவர். பணக்கார குடும்பத்தில் பிறந்தவராக இருந்தும், நோயாளிகள் படுகின்ற துயரத்தைத் தன்னால் முடிந்த வரையில் நீக்க வேண்டும் என்பதற்காகவே பல எதிர்ப்புகளையும் மீறி, கிரிமியா போர்க்களத்துக்குச் சென்று அங்கு காயம்பட்ட போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

வசதியான வாழ்க்கை அமைந்திருந்தும், மற்றவர்கள் படும் துயரத்தைப் பற்றி சிந்தித்தபோது, அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்கிற தியாக உள்ளம் அவரிடம் தோன்றியது. அவர் செய்த சேவை பல்வேறு துயரங்களுக்கும் ஆளாகும் நோயாளிகளுக்கு மிகுந்த ஆறுதலை அளித்து, உற்சாகத்தை ஏற்படுத்தியது. இரவு நேரங்களில் மருத்துவ முகாம்களில் கைவிளக்கு ஏந்தி அவர் நடந்து செல்கின்றபோது, அவருடைய நிழலை நோயாளிகள் முத்தமிடும் அளவுக்கு அன்பையும் பாசத்தையும் பெற்றவராக ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல் விளங்கினார்.

இரக்க உணர்வு என்பது கூட மற்றவர்களின் துயரங்களைப் பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்கும் போதுதான் ஏற்படுகின்றது.

நம்முடைய நாட்டிலே அன்னை தெரேசா செய்து வந்த சேவைகள் அவருக்கு உலக அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. நோபல் பரிசு அவருக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. ஐரோப்பிய நாடு ஒன்றில் வசித்து வந்த அவர், கல்கத்தாவில் உள்ள ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் சேவை செய்வதற்கு பெண் மணிகள் தேவை என்று கத்தோலிக்க மத அமைப்பு ஒன்று கொடுத்த விளம்பரச் செய்தியைப் பார்த்து அந்தச் சேவைக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு வந்து ஏழை மக்களின் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

ஒரு விளம்பரத்தைப் பார்த்து அவருக்கு ஏற்பட்ட சிந்தனை மக்கள் சேவையில் அவரை ஈடுபட வைத்தது.

பி.சி.கணேசன் (தொடரும்)

# பல்வேறு உள நெருக்கீட்டுக்கு சமகாலத்தில் ஆளாகும் சிறார்கள்

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் தெரிவிப்பு

சங்கானை, ஜன.2

சமகாலத்தில் சிறார்கள் பல்வேறுபட்ட உள நெருக்கீடுகளுக்கு ஆளாகின்றனர். தேவையற்ற பொருத்தமற்ற அதீத கட்டுப்பாடுகளும் தவறான தண்டனை முறைகளும் கல்வித் திணிப்புகளும் இன்றைய சிறார்களைக் கடும் உள நெருக்கீடுகளுக்கு ஆளாக்குகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் இணைப்பாளர் பா.தனபாலன்.

வலி.மேற்கு முன்பள்ளிகளின் ஆசிரியர் சங்கத்தால் வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் அண்மையில் ஒன்றுகூடல் மற்றும் சிறார்களின் கலை நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறு வயதில் இருந்தே அறவொழுக்க விருத்திக்கான அத்திபாரங்களாக கலைகளும், சிறுவர் இலக்கியங்களும் புகட்டப்பட வேண்டும். சமூகமயமாக்கலின், சிறப்பார்ந்த பரிமாணங்களுள் ஒன்றாக அமைவது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் நடத்தைகளைச் சிறார்களிடையே ஏற்படுத்தலாகும்.

வளர்ந்தோர் மேற்கொள்ளும் மீள வலியுறுத்தல்களும், பின்னூட்டல்களும் சிறார்களின் அறவொழுக்கம் சார்ந்த நடத்தை உருவாக்கத்திலே கூடிய செல்வாக்கை ஏற்படுத்துகின்றன.

பெரியோர், சிறார்களுக்கு முன்னுதாரணமாக நடக்க வேண்டும். அத்துடன் சிறுவர் இலக்கியங்களும், கலைகளும் சிறார்களின் அறவொழுக்க, சமூகமயமாக்கல் செயன் முறையில் பெரும் பங்காற்றுகின்றன.

இவற்றை நாம் முழுமையாகப் பயன்படுத்தாத நிலையிலேயே உள்ளோம். போதுமான சிறுவர் இலக்கியங்களோ, கலை அம்சங்களோ காணப்படாத நிலையும் காணப்படுகின்றது.

சிறுவர்களுக்கு உரிய இலக்கியங்களில் கவிதை, பாடல், புனைகதை, நாடகம் போன்றவை வரலாறு, விஞ்ஞானம், சூழலைப் புரிந்து கொள்ளல், பண்டிகைகள், விழாக்கள் என்ற வகையில் உருவாக்கப்பட வேண்டும். இவற்றின் மூலமே சிறார்களிடத்து சமூகப்பற்று, சமூக மகிழ்ச்சி, சமூகப் பங்கேற்பு, சமூக நீதி, சமூகத் தொடர்புகள், சமூகத் திறன்கள் போன்றவை விருத்தியாகும். இது அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நல்ல நடத்தையுடையவர்களாக்கும்.

சிறார்களின் உள, உடல் வளர்ச்சிக்கேற்ற சிறுவர் இலக்கியங்களை நுகரவிடுதல், ஆடல், பாடல், நாடகம், பொம்மலாட்டம் போன்ற கலைகளில் ஈடுபடுத்தல் மூலம் முழு நிறை ஆளுமையுடைய எதிர்காலப் பிரஜைகளாக வளர்த்தெடுக்க முடியும்.

இதற்குப் பொருத்தமான சூழ்நிலைகள் எமது சமூக அமைப்பில் போதுமானதாக இல்லை.

கல்வித் துறையினர், எமது மாகாணக் கல்வி அமைச்சு, பல்கலைக் கழகம் என்பவை சிறுவர் இலக்கியங்கள், சிறுவர் கலைகள், சிறுவர்களுக்கான அரங்கு என்பனவாறான புதிய செயற்றிட்டங்களை விரைவாக உருவாக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது.

தொலைக்காட்சியில் வன்ம நிகழ்ச்சிகளைப் பெற்றோருடன் இருந்து பார்த்து, நெறிபிறழ்வான எதிர்காலத்துக்கு நாமே வழி தேடியவர்களாவோம். எனவே, இந்தத் துறை சார்ந்த விழிப்புணர்வுகளைச் சகல மட்டங்களிலும் நாம் ஏற்படுத்த வேண்டும். - என்று கூறினார். (ம-29)



கரவெட்டி மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் தினம் பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், அவருடைய பாரியார் திருமதி நற்குணலிங்கம் மனோகரி மற்றும் ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோர் பாண்ட் வாத்தியக் குழுவின் தலைவரால் கைலாகு கொடுத்து வரவேற்கப்படுகின்றனர். (ம-253)

# காரைநகர் இளைஞர் சம்மேளனம் முதல்நிலைக்கு மாற்றம் பெறும்

## இளைஞர் சேவை மன்ற அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.2

காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்ப்பாணத்தின் முதன் நிலை சம்மேளனமாக மாற்றம் பெறும்.

காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்திய பிரதேசத்தின் இளம் தலைவர்களுக்கான இருநாள் தலைமைத்துவ பயிற்சியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ்களை வழங்கி உரையாற்றும் போதே யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீமேனன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

காரைநகரில் துடிப்பான திறன் மிக்க இளைஞர், யுவதிகள் காணப்படுகின்றனர். அவர்களுடன் இணைந்து செயற்படும் காரை அபிவிருத்திச் சபை போன்ற கொடை ஆர்வம் கொண்ட அமைப்புக்களும் இந்தப் பிரதேசத்தில் காணப்படுவதால் இளைஞர் கழக செயற்பாடுகள் விரைவில் விருத்தியடையும்.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இந்த நாட்டுக்கு பயன்தரக்கூடிய தலைவர்களை உருவாக்க முடியும் - என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வின் இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீமேனனும் கலந்து கொண்டனர். (ம)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



நல்லூர் மக்கள் சன சமூக நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினர் திருநாவுக்கரசு ஸ்ரீஸ்கந்தராசா யாழ். மாவட்ட நீதிபதி ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளராக தொடர்ந்து 20 வருடங்களாக சேவையாற்றி வரும் இவர் இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரும் ஆவார். (ம)

## அதிபர் நியமனம்

வட்டுக்கோட்டை துணவி அ.மி.த.க. பாடசாலை அதிபர் த.மாதவன் மானிப்பாய் மெமோறியல் நவோதய ஆங்கிலப் பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த இவர், நாட்டின் பலபாகங்களிலும் தொடர்ச்சியாக இருபத்தேழு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி வருகிறார். இவர் கல்வி அமைச்சின் வெளிநாட்டுப் புலமைப் பரிசிலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போர்க்குற்றம்- நழுவுகிறதா இந்தியா?

இலங்கையில் தொடர்ப்பட்ட நீண்ட காலப் போரின் இறுதி மாதங்களில் போரில் சிக்குண்ட தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை போதியளவு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு கடந்த மாதம் ஐ.நா. இது தொடர்பான உள்ளக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

2008இன் பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படைகளுக்கும் இடையிலான உள்நாட்டு போர் தீவிரமடைந்தபோது இலங்கையின் வடக்கில் நிலை கொண்டிருந்த ஐ.நா. பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறினர். இந்த நேரத்தில் அங்கு தொடர்ந்தும் பணியில் ஈடுபடுமாறு தமிழ்ப் பொது மக்கள் ஐ.நா. அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்த போதும், தனது பணியாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக ஐ.நா. சுட்டிக்காட்டியது.


இதன் பின்னர் தனது பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையின் வடக்கில் பணியாற்றிய ஐ.நா. அமைப்புக்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. இலங்கையில் போர் இடம்பெற்ற போதும் அதற்குப் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகத்தின் பதில் என்ன என ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில், போரின் போது இலங்கை அரசினால் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டதுடன், இறுதிக் கட்டப் போரின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும்' எனவும் அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது.

இறுதிக் கட்டப் போரின் போது 40,000 க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா. அறிவித்தது. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை உள்ளடங்கலாக இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளைச் சாட்சியப்படுத்தி 'இலங்கையின் கொலைக்களங்கள்' என்ற காணொலி ஒன்று வெளியிடப்பட்டது. இது ஐ.நாவால் வெளியிடப்பட்ட தமிழ் மக்களின் இழப்பு விபரத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்ட போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசு உரிய பதிலளிக்கத் தவறியமை மற்றும் இது தொடர்பான அனைத்துலக விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்காமை தொடர்பில் அனைத்துலக சமூகமானது இலங்கை அரசு மீது கடும் அழுத்தங்களையும் விமர்சனங்களையும் முன்வைத்திருந்தது. இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனது விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இதேபோன்று இலங்கை அரசு தன் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்காவிட்டால் அடுத்த ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் கார்ப்பர் அறிவித்திருந்தார். கனேடியப் பிரதமர் இலங்கையைப் புறக்கணிப்பது தொடர்பில் எடுத்த முடிவை பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் பின்பற்ற வேண்டும் என பிரித்தானியாவில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.



இந்த விடயத்தில் இலங்கை அரசின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் இலங்கையின் அயல் நாடான, இந்தியா இலங்கையைக் காப்பாற்றிக் கொள்வதில் தனது ஆதரவை வழங்கவில்லை. இலங்கையில் இடம்பெற்ற போர் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களுக்கும் இந்தியா தனது ஆதரவை வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளில் வாழும் தமிழ் சமூகங்களின் மத்தியில் இன மற்றும் வரலாற்று ரீதியான தொடர்பு காணப்படும் அதேவேளையில், தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கும் தனது அயல்நாடான இலங்கையின் நலனில் அக்கறை செலுத்துவதற்கும் இவ்விரு நாடுகளின் தமிழ் சமூகங்களுக்கு இடையிலான தொடர்புகள் பெரும் முக்கிய காரணியாகக் காணப்படுகிறது. இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்களின் தரகராக 1987இல் இந்தியா செயற்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையின் விளைவாக இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். 1991 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னாள் இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்தியை படுகொலை செய்ததைத் தொடர்ந்து இந்திய- இலங்கை உடன்படிக்கை முறிவடைந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து இலங்கையில் இடம்பெற்ற [illegible] தொடர்பில் இந்தியா [illegible] விலக்கிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும், 2006இல் இலங்கை அரசுக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்க ஆரம்பித்ததாகவும் ஐந்து மிக் 17 உலங்குவானூர்திகள் உள்ளடங்கலாக பல்வேறு இராணுவ உதவிகளை இந்தியா வழங்கியதாகவும் விடுதலைப் புலிகளின் போர் நடவடிக்கைகளை அழிப்பதில் இந்த உலங்குவானூர்திகள் முக்கிய பங்காற்றியிருந்ததாகவும் 'இலங்கை போரிலிருந்து சமாதானம் வரை' என்ற நூலின் ஆசிரியரும் ஊடகவியலாளருமான நிற்றின் கொக்கேல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீதான சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் நிலையில் இலங்கையுடன் இந்தியா நல்லுறவைப் பேணவேண்டிய தேவை காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இலங்கை தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய தேவை இந்திய அரசுக்கு உண்டு. அண்மைய ஆண்டுகளில், அம்பாந்தோட்டை புதிய துறைமுக கட்டுமானத் திட்டம் உள்ளடங்கலாக சீனாவானது இலங்கைத் தீவில் பல்வேறு முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையானது தனது உள்நாட்டு விவகாரங்களில் அனைத்துலக சமூகம் தலையீடு செய்யக் கூடாது என்ற கோரிக்கை விடுத்தபோது அதனை சீனா பலமாக ஆதரித்திருந்தது. சீனாவானது இலங்கையின் இராணுவப் படைகளை நவீனமயப்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதில் பெரும் பங்களிப்பு வழங்கி வருவதாக நம்பப்படுகிறது.

இந்திய மத்திய அரசாங்கம், 'தமிழ் மக்களின் உரிமைகளை' இலங்கை அரசு மதிக்கவேண்டும் எனவும், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் தொடர்ச்சியாக இலங்கை அரசு மீது [illegible] அதேவேளையில், [illegible] தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட போர் தந்திரோபாய நடவடிக்கைக்கு இந்திய அரசு தனது முழு ஆதரவையும் வழங்கியிருந்தது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கூட்டப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா தலைமையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்திருந்தமையானது நம்புவதற்கு கடினமான ஒன்றாகக் காணப்படுகிறது. காங்கிரஸ் கட்சியின் தலைமையில் தற்போது ஆட்சியிலுள்ள இந்திய மத்திய அரசு அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட இத்தத் தீர்மானத்தை ஆதரித்ததற்கு இதனுடன் மத்தியில் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ்நாட்டு கட்சிகளின் அழுத்தமே காரணமாகும்.

இதற்கும் மேலாக, "மனித உரிமைகள் தொடர்பான உயர் ஆணையகம் அல்லது ஐ.நா. சிறப்பு பிரிவுகள் இலங்கை அரசுடன் அதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளுக்கு மீளிணக்கப்பாடு மற்றும் அமைதி முயற்சிகளை அடைந்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டியுள்ளது" என இந்திய வெளியுறவு அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு குறிப்பிடப்பட்டமையானது இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் இந்தியா வழங்கிய ஆதரவு மீதான நம்பிக்கையை சற்றுக் குறைத்துள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மற்றும் போர்க் காலக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும் என 2011இல் ஐ.நா. அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் இலங்கை பொறுப்பளிப்பதற்கான அழுத்தங்களைவழங்குமாறு இந்திய அரசை சர்வதேசம் வலியுறுத்த வேண்டும்.

நன்றி: புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நன்மைக்காக எவருடனும் ஒத்துழைக்கத் தயார்

## மாகாண சபை உறுப்பினர் சொல்கிறார்



அம்பாறை,ஜன.2

அரசியல் அதிகாரத்தை வைத்துக்கொண்டு அழகு பார்க்காமல் மக்களின் நன்மைக்காக எவருடனும் ஒத்துழைத்துச் செயற்பட தயாராகவுள்ளேன் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் தெரிவித்தார்.

நிந்தவூர் பாத்திமா கிரீச் முன்பள்ளி பாடசாலையின் 39ஆவது வருடாந்த விழா நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேச பாடசாலைகளுக்கு திறமையான அதிபர்களை அரசியல் பாரபட்சம் பாராது முன்னுரிமை வழங்கி நியமிப்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

இதுவே பிரதேச கல்வியின் முன்னேற்றத்துக்கு ஒளி விளக்காக அமையும்.- என்றார். (ச)

# கூட்டங்களுக்கு சமுகம் தரும் உறுப்பினருக்கு கொடுப்பனவு

## கிழக்கு மாகாண சபை தீர்மானம்

திருகோணமலை,ஜன.2

கிழக்கு மாகாண சபையின் கூட்டங்களுக்கு சமுகமளிக்கும் உறுப்பினர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான அங்கீகாரத்தை கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை வழங்கியுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அமைச்சரவை கூட்டத்தில் முன்வைத்தார்.

அதனையடுத்தே குறித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

அதற்கமைய மாகாண சபையின் கூட்டங்களுக்கு சமுகமளிக்கும் திருகோணமலை மாவட்ட உறுப்பினர்களுக்கு விசேட கொடுப்பனவாக 5ஆயிரம் ரூபா, மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்களுக்கு 7 ஆயிரம் ரூபா, அம்பாறை மாவட்ட உறுப்பினர்களுக்கு 9,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபையின் வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தை ஐந்து நாள்கள் தொடர்ந்து நடத்துவது என்றும் கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ச)

# கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக நிசாம்

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக எம்.ரீ.நிசாம் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக தற்போது கடமையாற்றும் நிசாமே மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய நிசாம், மாகாண ஆசிரிய இடமாற்றத்தால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இந்தநிலையிலேயே மீண்டும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக எம். ரீ.நிசாம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மட்டு. கொள்ளைச் சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்

மட்டக்களப்பு,ஜன.2

மட்டக்களப்பு, லயன்ஸ் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வர்த்தகர் வீட்டில் கொள்ளையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் 4 பேர் 14 நாள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளை அடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் அவர்கள் நிறுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, லயன்ஸ் குறுக்கு வீதியில் உள்ள வர்த்தகரான குணரெட்ணம் ஹரிதரன் (வயது-34) என்பவரின் வீட்டில் அவரை வாளால் வெட்டிவிட்டு நகை, பணம் கொள்ளையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை இரண்டாவது தடவையாக தேசிய ரீதியில் விருது ஒன்றை அண்மையில் பெற்றுள்ளது. தேசிய உற்பத்தித் திறன் விருதை பெற்றுத் திரும்பிய மாவட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ரீ.எம்.மாஹிருக்கு வைத்தியசாலையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. (30)

# மேய்ச்சல் காணிகளில் விவசாயம் செய்வோரைத் தடுத்து நிறுத்துக

## கிழக்கு முதல்வரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜன.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் அத்துமீறி விவசாயம் செய்வதை தடை செய்ய வேண்டும். அதற்குரிய அடையாளம் காணப்பட்ட காணிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் முதலமைச்சருக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, செங்கலடி, கிரான், வவுணதீவு, பட்டிப்பளை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளில் கால்நடைகளுக்கு என மேய்ச்சல் தரைகள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில் அத்துமீறி விவசாயச் செய்கையில் ஈடுபட்டவர்களினால் பல கால்நடைகளுக்கு தீங்கு விளைவிக்கப்பட்டுள்ளது. அதனால், பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையை இழப்பது மட்டுமன்றி கால்நடைகளையும் இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

எனவே, கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி விவசாயம் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# அலிக்கம்பைக் கிராமத்துக்கு ரூ.34 மில்.செலவில் மின்சாரம்



அம்பாறை,ஜன.2

ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அலிக்கம்பை கிராமத்துக்கு 34 மில்லியன் ரூபா செலவில் மின்சாரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உணவுப் போசாக்குத் துறை சிரேஷ்ட அமைச்சர் பி.தயாரட்ண மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன ஆகியோர் கலந்துகொண்டு மின் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி தைப்பொங்கல் தினத்துக்கு முன்பாக அலிக்கம்பைக் கிராமத்திலுள்ள அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன தெரிவித்தார்.

# திருமலை நகரசபையின் 'பட்ஜெட்' நிறைவேறியது

திருகோணமலை,ஜன.2

திருகோணமலை நகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சபையின் தலைவர் க.செல்வராஜாவால் சமர்ப்பிக்கப்பட்டது.

இன, மத,பேதமின்றி நகர மக்களின் நலனையும் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சபையால் திரட்டப்பட்ட நிதி பொது நிர்வாகமும் ஊழியர் சேவையும், சௌக்கிய சேவைகள் , பௌதிக திட்ட வடிவமைப்பு நீர் வழங்கல் சேவை, பொதுப் பயன்பாட்டுச் சேவை, நலன்புரி சேவை என்ற பிரிவுகளுக்குள் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# கல்முனை வலயத்துக்கு பணிப்பாளராக ஹாசீம்

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக அக்கரைப்பற்றை சேர்ந்த யூ.எல்.எம். ஹாசீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஹாசீம் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நடை முறைக்கு வரும்வகையில் கல்முனை வலயக் கல்வி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக முன்னர் கடமையாற்றிய எம்.தௌபீக் ஓய்வுபெற்றுள்ளார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளராகக் கடமையாற்றிய ஹாசீம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மக்கள் பாவனைக்கு உதவாத உருளைக்கிழங்கு சிக்கியது



கண்டி,ஜன.2

மக்கள் பாவனைக்கு உதவாத உருளைக்கிழங்கு தொகுதியை ஹற்றன் நகரசபை பொது சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஹற்றன் நகரின் மத்தியில் கழிவு தள்ளு வண்டியில் கொண்டு செல்லப்பட்ட பொருளின் மீது சந்தேகம் கொண்டு சோதித்த பொழுது அவை பழுதடைந்த உருளைக்கிழங்குகள் என்று தெரியவந்துள்ளது.

அந்த உருளைக் கிழங்குகள் கழுவி மீள் விற்பனைக்கு தயார் செய்யும் நோக்கத்துடனேயே கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

அதனையடுத்து உடனடியாக உருளைக்கிழங்குகளை மண்ணெண்ணெய் ஊற்றி பொது சுகாதார பரிசோதகர்கள் அழித்துள்ளனர். (ச)

# டிக்கோயா நகர சபையின் பதிவுச்சான்று இல்லாத ஓட்டோக்கள் மீது நடவடிக்கை

கண்டி,ஜன.2

ஹற்றன், டிக்கோயா நகர சபையின் பதிவுச் சான்றிதழ் இன்றி நகர எல்லைக்குள் போக்குவரத்தில் ஈடுபடும் ஓட்டோக்களைப் பரிசோதனை செய்து அவற்றை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்று நகரசபைத் தலைவர் அ. நந்தகுமாரன் உத்தரவிட்டுள்ளார். நகரசபைத் தலைவரின் உத்தரவையடுத்து, சபையின் வருமானப் பரிசோதகர் மற்றும் வருமானப் பிரிவு நிர்வாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் நகரின் பிரதான நுழைவு மற்றும் வெளிச் செல்லும் இடங்களிலிருந்து பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# தொழுகைக்குச் சென்ற மாணவனின் சைக்கிள் திருட்டு

பதுளை,ஜன.2

பதுளை நகரின் பிரதான வீதியொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் பட்டப் பகலில் திருடப்பட்டுள்ளது.

பதுளை, லோவர் வீதியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் தனது சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு பள்ளிவாசலுக்குச் சென்றுள்ளார்.

தொழுகை முடிந்து திரும்பிவந்து பார்க்கையில் தனது சைக்கிள் காணாமல் போயிருப்பது கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மன நிறைவுடன் சில காரியங்களை செய்து முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். முன்கோபம் விலகும். அரச பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**இடபம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரியும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**மிதுனம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தாயின் உடல் நிலை சீராக இருக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** பதற்றம் இருக்கும். தள்ளிப் போன விடயங்கள் உடனே முடியும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். நட்பு வட்டம் விரிவடையும். விலகி நின்றவர்கள் வலிய வந்து பேசுவார்கள். தொழில், உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**சிங்கம்:** திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடியும். குடும்பத்தினரிடம் கோபத்தை காட்டாதீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**கன்னி:** சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**நாளை**

மார்கழி -19 வியாழக்கிழமை 03.01.2013
திதி: ஷஷ்டி மு.இ. 07.39 வரை
நட்சத்திரம்: பூரம் மு.ப 11.34 வரை
சுபநேரம்: 08.01- 09.31 வரை
ராகுகாலம்: 02.01- 03.31 வரை

**துலாம்:** மனதில் பட்டதை பளிச் சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதிற்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மை உண்டு. முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**தனுசு:** எதிலும் நிதானித்துச் செயற்படுங்கள். கோபம் விலகும். பழைய பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். உறவினர்கள் உதவுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**மகரம்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். பேச்சில் கோபத்தை வெளிக்காட்ட வேண்டாம். வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கும்பம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். உடல் நிலை சீராக அமையும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**மீனம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 7 | | | 8 | 3 | |
| | | | 6 | | | | 5 | 1 |
| 7 | | | 8 | 1 | 4 | | 9 | |
| 8 | | | | | | | 1 | |
| | 6 | 3 | | | | 5 | 2 | |
| | 7 | | 2 | | | | | 6 |
| | 5 | | 4 | 7 | 3 | | | 9 |
| 3 | 2 | | | | 8 | | | |
| | 9 | 7 | | | 1 | | 8 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 7 | 4 |
| 6 | 9 | 5 | 4 | 2 | 7 | 3 | 1 | 8 |
| 4 | 8 | 7 | 3 | 5 | 1 | 2 | 6 | 9 |
| 2 | 1 | 6 | 7 | 3 | 9 | 4 | 8 | 5 |
| 7 | 5 | 9 | 1 | 8 | 4 | 6 | 3 | 2 |
| 3 | 4 | 8 | 5 | 6 | 2 | 7 | 9 | 1 |
| 8 | 3 | 2 | 9 | 7 | 5 | 1 | 4 | 6 |
| 5 | 7 | 4 | 8 | 1 | 6 | 9 | 2 | 3 |
| 6 | 6 | 1 | 2 | 4 | 3 | 8 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்...

## அமரர்

## சுப்பிரமணியம் சந்திரசேகரம்

(வர்த்தகர் - மேற்கு மார்க்கட் யாழ்ப்பாணம்.)

உறவுக்காக நினைவுக்காக

***25-12-1948 13-01-2012***



ஓராண்டு ஆனாலும்- எங்கள்
ஈரவிழி காயவில்லை அப்பா!
ஓயாது தேடுகின்றோம்- ஆனாலும்
காணவில்லை உங்கள் முகம்!
ஆலமரமாய் நீங்கள் இருந்தீர்கள்-அதில்
விழுதாக நாங்கள் இருந்தோம்!
ஆலமரம் சாய்ந்ததுவோ- இன்றும்
ஆறவில்லை எங்கள் நெஞ்சம்!
பலயுகம் கழிந்தாலும்- என்றும்
மறவோம் உங்கள் நினைவுகளை அப்பாவே!

*G.P.S.* வீதி,
[illegible],
யாழ்ப்பாணம்.

**நீங்காத உங்கள் நினைவுகளுடன்**
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(27390) (6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட விஷவாயு கசிவால் உயிரிழந்த இருவரது குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நஷ்டஈடுகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கான நஷ்டஈடுகளை எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கையளித்தார்.

# 20 நகரங்கள் அபிவிருத்தி

## முப்படை, பொலிஸ் உதவியுடன் பணிகள்

கொழும்பு,ஜன.2

இந்த ஆண்டில் 20 நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம், எஹலியகொட, தியத்தலாவ, இமதூவ, ஊறுபொக்க, கண்டி, நுவரெலியா, நாரம்மல, ஹெட்டிபொல, பண்டுவஸ்நுவர, அநுராதபுரம், மாத்தறை, தங்கொட்டுவ, பண்டாரவளை, வீரகெட்டிய, ரம்புக்கன, நுகேகொடை, மீகஹகியுல, புளத்சிங்கள, ஹோமாகம, மொறட்டுவ ஆகிய 20 நகரங்கள் இந்த ஆண்டில் அபிவிருத்தி செய்யப்படும்.

பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்த நகர அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சும் தீர்மானித்துள்ளது என்று அவர் கூறினார். (ச)

# அரசியல் மயமாகி வருகிறது இலங்கையின் நீதித்துறை

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

கொழும்பு,ஜன.2

இலங்கையின் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது களையப்பட்டு நீதித்துறை சுயாதீனப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி கெப்ரில்லா நோல் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை நடைமுறைகள், சட்டத்தரணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கவை.

சுயாதீன தகவல்களின் படி இலங்கையில் கடந்த காலங்களில் சட்டத்துறையினர் மீது அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் அதிகரித் துள்ளன. அத்துடன் அவர்களின் பணிகளில் அரசியல்வாதிகள் தலையிடும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணையை மேற்கொண்டு வந்த நாடாளுமன்ற தெரிவுக்குழு, கடந்த 8 ஆம் திகதி அவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களில் ஐந்து குற்றச்சாட்டுகளை விசாரித்து அவற்றில் மூன்று குற்றச் சாட்டுக்களில் குற்றவாளி யாகக் கண்டது.

எனினும் அந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளில் நம்பிக்கைத்தன்மை பேணப்படவில்லை. எனவே பிரதம நீதியரசர் ஒருவர் மீது விசாரணை நடத்துவதற்கு ஒரு சுயாதீனமான குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதனை இலங்கை அரசு எதிர்காலத்தில் கடைப்பிடித்து, நீதித்துறை எவரின் தலையீடின்றிச் செயற்படுவதற்கு வழிவகுக்க வேண்டும்.-என்றார். (ச)

## வெளிநாட்டு நிறுவனங்கள் கடன்களைச் செலுத்தாமல் நாட்டிலிருந்து வெளியேற்றம்

### தொழில் அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.2

இலங்கை முதலீட்டு சபையின் அனுமதியுடன் வர்த்தக முயற்சிகளை ஆரம்பித்த வெளிநாட்டு நிறுவனங்கள், அரச வங்கிகளில் பெற்ற கடன்களை திருப் பிச் செலுத்தாமல் நாட்டில் இருந்து வெளியேறிவிட்டன.

இவ்வாறு தொழில் அமைச்சர் காமினி லொக்குகே குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் .ஜெயவர்த்தன காலத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள், அரச வங்கிகளில் கடன்களை பெறும் நடைமுறையில் கட்டுப்பாடுகள் இருந்தன. எனினும் பின்னர் அவை தளர்த்தப்பட்டன.

அதன் காரணமாக வெளிநாட்டு நிறுவனங்கள் அளவுக்கு அதிகமான கடன்களை பெற்றுள்ளன.

இந்த நிலையில் பல நிறுவனங்கள் பணியாளர்களுக்கு சம்பளங்கள் மற்றும் வரிகள் என்பவற்றை செலுத்தாமலேயே நாட்டில் இருந்து வெளியேறியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ஆசிய நிறுவனங்கள் ஆகும்.-என்றார். (ச)

## மக்களை கைவிடப் போவதில்லை

### சரத் பொன்சேகா கூறுகிறார்



கொழும்பு,ஜன.2

மக்களை கைவிடப் போவதில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

குருநாகல் பிரதேசத் தில் காலநிலை சீர்கேட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்காலத்தில் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மக்களுக்காக குரல் கொடுப்பேன். எந்தக் காலத்திலும் மக்களை மறக்கப் போவதில்லை-என்றார் அவர். (ச)

## சீனா, இந்தியப் பொருள்களினால் உள்நாட்டு உற்பத்தியாளர் பாதிப்பு

கொழும்பு,ஜன.2

சீனா மற்றும் இந்தியப் பொருள்களினால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மிகவும் மலிவான விலையில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடமிருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதனால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆடைகள், காலணிகள், இசைக் கருவிகள் போன்றன சீனா, இந்தியா போன்ற நாடுகளில் மிகவும் மலிவான விலையில் கிடைக்கின்றன. இதனால் பலர் இந்தப் பொருள்களை இறக்குமதி செய்து உள்நாட்டு சந்தையில் விநியோகம் செய்து வருகின்றனர்.

அதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிய அளவில் முதலீடுகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்று உற்பத்தியாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ச)

## பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயம்

### விசாரணை மேற்கொள்ள குழு

கொழும்பு,ஜன.2

இலங்கை சதொச களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கமைய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மூவர் அடங்கிய இந்தக் குழு. இன்று புதன்கிழமை முதல் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் குழு நாடு முழுவதிலுமுள்ள சதொச விற்பனை நிலையங்களுக்குச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி நுகர்வோர் அதிகார சபை, சதொச விற்பனை நிறுவனங்களில் மேற்கொண்ட சோதனையின்போது பாவனைக்கு உதவாத பெரிய வெங் [illegible] குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம்

### ஓர் இடத்தில் 5 ஆண்டுகள் மட்டுமே

கொழும்பு,ஜன.2

வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளைச் சேர்ந்த 172 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரேஇடத்தில் பதினைந்து ஆண்டுகள் கடமையாற்றும் போது ஊழல் மோசடிகள் இடம்பெற வாய்ப்பு உள்ளது.

அதன் அடிப்படையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்ற உத்தரவுகள் வருடாந்த இடமாற்ற கோட்பாடுகளுக்கு அமைவாகவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலம் ஒரே சிறைச்சாலையில் கடமையாற்றுவதால் கைதிகளுடன் நட்புறவு ஏற்பட்டு விடுகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு நட்புறவு ஏற்படுவதால் கைதிகளின் குற்றச்செயல்களுக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் ஐந்தாண்டுக்கு மேல் ஒரே சிறைச்சாலையில் கடமையாற்ற முடியாது என்று சிறைச்சாலை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## பிரதம நீதியரசரை விசாரணை நடத்திய தெரிவுக்குழுவை மீளக் கூட்ட முடியாது

### நாடாளுமன்றம் விவாதம் நடத்த வேண்டும் என்கிறார் சுசில்

கொழும்பு,ஜன.2

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் பூர்த்தியாகியுள்ளன. அதனால் அதனை மீளக் கூட்ட முடியாது.

இவ்வாறு பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீளவும் கூடி குற்றப் பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்த முடியாது.

பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகள் நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கடமைகள் பூர்த்தியாகியுள்ளன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றுக்கு உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்றம் விவாதம் நடத்த வேண்டும்- என்றார். (ச)

## விபத்தில் மாகாணசபை உறுப்பினரின் மனைவி உட்பட மூவர் காயம்

கொழும்பு,ஜன.2

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தில்லையடி பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில், வடமேல் மாகாணசபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கிங்ஸ்லி லாலின் மனைவி உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி வருகை தந்த குறித்த வாகனம், வேகக் கட்டுப்பாட்டை இழந்துள்ளமையால் இந்த விபத்து இடம்பெற்றது என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## 2013ஆம்ஆண்டுகானஆதனவரி அறிவித்தல்

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 160(3) ஆம் பிரிவின் பிரகாரம் 1989 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் படி 2012 ஆம் ஆண்டு வரைக்கும் 10% ஆக ஆதனவரி அறவிடப் பட்டுவந்துள்ளது.

2010,2011 ஆம் ஆண்டுகளில் பிரதம விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் ஆதனவரி மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் ஆதனங்களின் வருடாந்தப் பெறுமதிகள் மாற்றமடைந்துள்ளன.எனினும் ஆதன வரியானது10% ஆக தொடர்ந்து நடை முறையில் இருக்கும். பொதுமக்கள் ஆதனப்பதிவேடுகளை அலுவலக நேரத்தில் ஆதனவரிப்பகுதியில் பார்வையிட்டு 2013 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியினை செலுத்த முடியும் என்பதுடன் அதற்கான ஆதனவரி அறிவித்தல் (KForm) காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

நகராட்சிமன்றஅலுவலகம்,
சாவகச்சேரி,

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம் ,சாவகச்சேரி.

(சி/2861)(6.7.4)

---

## புதிய ஆண்டில்
## புதிய சேவை ஒழுங்கு
## புதிய விசா ஆலோசனைகள்
## உங்கள் திசைகாட்டியில்



எல்லா நாள்களும் (சனி,ஞாயிறு,பொது விடுமுறை தினங்கள் உள்பட)
காலை 8.30 முதல் இரவு 7.30 வரை திறந்திருக்கும்

**மலேசியா,சிங்கப்பூர் Student visa**

- ★ மலேசியாவில் மாதம் 30,000/ வரை படித்துக்கொண்டே உழைக்கலாம்.
- ★ உணவு,இருப்பிடம் இலவசம்
- ★ சிங்கப்பூரில் பகுதிநேரத் தொழில் வாய்ப்பு
- ★ IELTS தேவையில்லை

**நியூசிலாந்து, ஆஸ்திரேலியா**

- ★ Student visa, Skill migration வணிக விசா இலவசமாக
- ★ IELTS எம்மிடம் கற்கலாம்.(நிபந்தனைகளுடன்)

**கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்**

- ★ சட்ட ரீதியாகக் குடிபெயர சட்ட ஆலோசனை

**சைப்பிரஸ், போர்த்துக்கல், லிதுவேனியா**

- ★ ஐரோப்பிய நாடுகளுக்கான Student visa, வணிக விசா
- ★ சைப்பிரஸ் 100000/ வரை சம்பாதிக்கலாம்

**எல்லா நாடுகளுக்கும் visit visa - 10 தினங்களில்**

- ★ எல்லா நாடுகளுக்கும் visit visa,Sponsor மறுக்கப்பட்ட விசாக்கள்


**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் PV.82703**
**முன் மாதிரியான சாதனை விசா ஆலோசனை நிறுவனம்,**
**175, பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம். 021 221 9016**

---

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் பசுபதிப்பிள்ளை(R.P)

*[இல.121,D10,உருத்திரபுரம் மேற்கு]*



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட எல்லோராலும் அன்பாக R.P என அழைக்கப்பட்ட இ.பசுபதிப்பிள்ளை 30.12.2012 அன்று இயற்கை யெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-பொன்னாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் பூரணத்தின் அன்புக் கணவரும், தேவரஞ்சிதா, கனகரஞ்சிதா, தெய்வேந்திரன், செல்வரஞ்சிதா,லோகரஞ்சிதா, யோகேந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசமணி காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் பொன்னுத்துரை, சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோன்மணி,இராமச்சந்திரன், குலசிங்கம், தனபாலசிங்கம், தர்மபாலன், இன்பநாதன், பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்,நீக்கிலாஸ்,உதயகுமாரன்,நளினி, உதயகுமார் (ரஞ்சன்), மயூரதன், ஜெயலலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் லோசாணி,டயானி, நிரோசா,உஜிதா,கோசலா,தருணிகா,தருணிகன், கோபிகன், பிருந்தன், பிரணவன், வைஷ்ணவி, பிரதீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும்,கனகசுந்தரம் அவர்களின் தாய்வழி மருமகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், துரைராசா மற்றும் இரத்தின பூபதி, முத்துக்குமார் ஆகியோரின் மைத்துனரும், தம்பிஐயா, வசந்த கோகிலம், காலஞ்சென்ற ஞானசௌவுந்தரி மற்றும் குலநாயகி, மீனாம்பிகை, யோகராணி, திருத்தலாதேவி, சுகந்தினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் உருத்திரபுரம் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

இல.121,D10, உருத்திரபுரம்.
தொ.பே.: 0094 77 549 1557 (27497)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## சேவை நலன் பாராட்டு
### செல்வி கந்தையா பேரின்பநாயகி



(ஆசிரியர் யா/ மூளாய்
சைவப்பிரகாச வித்தியாலயம்)
கடந்த முப்பது ஆண்டு காலமாக
(17.01.1983-19.12.2012)
கற்பித்தல் சேவையாற்றி ஓய்வு
பெற்ற இவரை
பாராட்டி வாழ்த்துகிறேன்.

ச.சிவப்பிரியன்
பெறாமகன்.
மூளாய். (27508)(6.7.11)

---

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
## பாதுகாப்பு பதவி வெற்றிடங்கள்-
## பொது வைத்தியசாலை - வவுனியா

- ★ கனிஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆண்கள்,பெண்
- ★ மேற்பார்வையாளர்கள் ஆண்கள்

1.தகைமைகள்: க.பொ.த. (சா/த)

(a) பாதுகாப்பு சேவை அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங் கப்படும்.

(b) தடகள,கிரிகெட், உதைபந்தாட்டம், கராட்டி,கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம்மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வி தகைமையில் விலகல் அளிக்கப்படும்.

2.நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

(i) உயரம் - 5' 4" ஆண்கள்
- 5' 2" பெண்கள்

(ii) 20 வயதிற்கு மேற்பட்டோர் (சம்பளம் மாத மொன்றுக்கு EPF, ETFமற்றும் வருகை ஊக்குவிப்பு பணம் உட்பட ரூபா 14000)

நேர்முகப் பரீட்சை 05.01.2013, 06.01.2013 -(சனி,ஞாயிற்றுக் கிழமைகள்) ஆகிய நாள்களில் மு.ப 10.30 மணி முதல் 16.00 மணி வரை பின்வரும்காரியாலயத்தில் நடைபெறும்.

T.அகிலன்
25/15, முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, (Goodshed Road)
வவுனியா.

கீழ் குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

(i) கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம்.
(ii) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
(iii)கல்வித்தராதரப்பத்திரங்கள் (சா/த)
(iv) தேசிய அடையாள அட்டை

இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன்போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

பணிப்பாளர்,
337 1/1,கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5153) (6.7.4)

---

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
## கூறுவிலை கோரல்

NPGI- 9989 லேடன் லொறியின் உடற்கோப்பு வேலைகள்

எமது சங்கத்தின் லேடன் லொறியினது கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ள வேலைகளை செய்ய வேண்டியிருப்பதால் லொறியினை பார்வையிட்டு வேலை விவரங்கள் அடங்கிய பத்திரத்தினை காரியாலயத்தில் பெற்று இதற்குரிய கூறுவிலையினை 18.01.2013 இற்கு முன்னர் பொதுமுகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

01. லொறியினது உடற்கோப்பு திருத்துதல் (மரம்)
02. லொறிக்கு ராங் பொருத்துதல்
03. உடற்கோப்பு முழுமையாக மீள் புனரமைப்பு செய்தல்

லொறியினை பார்வையிடும் நேரம் வார நாள்களில் 8.30 5.00 மணி வரை

**பொதுமுகாமையாளர்,**
**நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.**

(c/5196) (6.7.11)

---

**சிறுநீரகம் தேவை**

52 வயதுடைய 0+ குருதியுடைய ஆண் ஒருவருக்கு சிறுநீரகம் தேவைப்படுகிறது. வழங்கி உதவு வோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொ.இல 0778648014

---

## CHEMISTRY CENTRE
## A/L 2015

By: அன்பு

4 இடங்களில் ஆரம்பம்

- ★ 33, அரசாலிவீதி,ஓட்டுமடம் சந்தி அருகில்
- ★ மஞ்சவனப்பதி வடக்கு வீதி,கொக்குவில்
- ★ மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக
- ★ பழம் வீதி, கந்தர்மடம் சந்தி

**A/L 2013**
**விசேட பிரிவு**
ஒரே வேளையில் Inorganic
Organic, Physical

**A/L 2014**
Basic Thermo
Group Class தேவையானவர்கள்.

**தொடர்பு: 077 069 0654**

(27281)(5-6-7)

---

# Kaji Beautician





(Regd.No : VE/VR/REV/371)



வகுப்பு ஆரம்பம்
2013 - 01- 12

All Types of facial
Hair Cutting
Hair style
Hair Colour
Rebound
Manicure & Pedicure
Eye brow Threading
Hand & Leg waxing
Birthday & Wedding Cake
Party makeup
Hindu & Christian Make up
Nail Art
Mehndi Design

எமது நிலையத்தில் வருங்கால அழகுக்கலை நிபுணர்களுக்கான தொழில்சார் வகுப்புக்கள் நடத்தப்படும். எமது நிறுவனத்தின் சான்றிதழுடன் N.V.Q சான்றிதழையும் பெற்றுக்கொள்ளமுடியும். N.V.Q என்பது தேசிய வாழ்தொழில்தகைமை சான்றிதழாகும். இந்த சான்றிதழ் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களிற்கு பெரிதும் உதவுகின்றது. அதற்கான Modulesகளுடன் வகுப்புக்கள் நடைபெறும்.



கோண்டாவில் இருபாலை வீதி (Training College அருகில்)
கோப்பாய்.
T.P : 021 223 0341 / Mo.TP : 077 936 3051

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# கலை மரபைப் பேண இலைமறையாகவுள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்த வேண்டும்

எம்முடைய கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையிலான நிறுவன மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் எம்மிடையே குறைவாகவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இலைமறை காயாக பல கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களை ஊக்கப்படுத்துவதன் ஊடாகவே எமது பிரதேச கலைமரபுகளை வளர்ச்சியடையச் செய்யமுடியும். எமது கலைஞர்களுக்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்ற போதும் தங்களுடைய பல்வேறு முயற்சிகளின் ஊடாக பல்வேறு விதமான செயற்பாடுகளை எமது கலைமரபு சார்ந்து ஆற்றிவருகின்றார்கள் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தைச் சேர்ந்த நாடகத் தயாரிப்பாளர்கள் மற்றும் நெறியாளர்களுக்கு நடத்தப்பட்ட ஒருநாள் நாடக செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

எமது வாழ்வை நெறிப்படுத்துவனவாக கலைகள் விளங்குகின்றன. கலையானது காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கி வெளிப்படுத்தும் வடிவமாக விளங்குகின்றது. காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப கலை வடிவங்களும் மாற்றமுறுகின்றன.



மனிதனால் உருவாக்கப்பட்ட; போர் இடர்கள் போன்றவற்றில் இருந்து மனதளவில் விடுபட நாடகக் கலைவடிவம் உதவுகின்றது. நாடகங் களானவை போரின் தாக்கத்திலான மன உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகவும் சமாதான சூழலை வெளிப்படுத்துவனவாக வும் சமூகச் சீரழிவை வெளிப்படுத்துவனவாகவும் விளங்குகின்றன.

இதனடிப்படையில் நாடகச் செயற்பாட்டில் ஈடுபடுவோரும் மூன்று பிரிவினராக தம்முடைய பங்களிப்பை ஆற்றிவருகின்றார்கள்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக சினிமா தொடர் நாடகங்களின் ஆதிக்கம் காரணமாகவும் யாழ். மாவட்ட கலைஞர்கள் தயாரிக்கின்ற நாடகங்களை பார்க்கும் தன்மையில் ஆர்வம் குறைவடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. சிங்கள மொழிமூலமான நாடகச் செயற்பாடுகள் சினிமா போன்றவற்றோடு ஒப்பிடுகின்ற போது தமிழ் மொழி மூலமான வளர்ச்சி குறைவாகவே காணப்படுகின்றது.

இவ்வாறன நாடக செயலமர்வுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தொடரப்பட்டு நாடகச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்து பண்பாடு, கலாசாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் நாடக செயற்பாட்டுக்கு எமது கலைஞர்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். இதனூடாகவே எமது கலைமரபுகளை வளர்ச்சியுறச் செய்ய முடியும் என அவ்ர் தெரிவித்தார். (3-38)

## சனசமூக நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,ஜன.?

சங்கானை பிரதேச சபைக்குட்பட்ட மூளாய் மனிதவள சனசமூக நிலையத்துக்கு கட்டட வசதிகள் மேற்கொள்வதற்காக பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

பகுதியாக நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்தக் கட்டடப் பணிகளுக்கு பன்முகப் படுத்திய வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி கிடைக்கப் பெற்றதன் மூலம் சனசமூக நிலையம் இதுவரையும் கருத்தரங்குகள், பயிற்சிகளை நடத்துவதில் எதிர்நோக்கிய இடநெருக்கடி தவிர்க்கப்பட்டுள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளார்கள். (3-86)

# பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகும் தமிழ்ப்பெண்கள்; ஒபாமாவின் பாரியாரைத் தலையிடுமாறு கோரிக்கை

## அமெரிக்கத் தமிழர் அமைப்பு விடுத்தது

இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழ்ப் பெண்கள், படையினரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் விடயத்தில் தலையிடுமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பாரியாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக அமெரிக்க இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தாம், மிச்செய்ல் ஒபாமாவுக்கு, ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. இலங்கையின் வடக்குக் கிழக்கில், சுமார் 90 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் போரின் போது தமது கணவர்களை இழந்துள்ளனர். வறுமை, மற்றும் உதவிகள் இன்றி ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் உள்ளனர். இவர்கள் வாழ்வாதாரத் துக்கு வழியின்றி வாழ்ந்து வருகின்றனர்.

எனவே அவர்களின் விடயத்தில் தலையிட்டு அவர்க ளுக்கு நியாயம் தேடிக் கொடுப்பதுடன் அவர்களின் வாழ்க்கை தரத்தையும் மேம்படுத்த உதவ வேண்டும் என்று ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு மிச்செய்ல் ஒபாமாவிடம் கோரியுள்ளது. இலங்கைப் போரின்போது பெண்கள் ஆயுதங்களாக பயன்படுத்தப்பட்டனர் என்று அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன், கடந்த காலத்தில் வெளியிட்ட அறிக்கையையும் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (3)

20 ஆம் ஆண்டு நினைவலைகள்




மண்ணில் 17.05.1944

விண்ணில் 02.01.1993



ஆறுமுகம் தருமராசா
(BA; Dip.in Ed; S.L.E.A.S.)
(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி)

வலிகொண்ட காலத்தில்
கலிகாலக் காலன் உம்மை
பலிகொண்டான் கிளாலியில்!
தருமத்தின் ராசாவே! உங்கள்
உருவத்தை தீ தின்று
இருபதாண்டுகளாம்.
நம்ப மறுக்கிறது மனம்.
கள்ளமில்லாச் சிரிப்பும்
வெள்ளையுள்ளமும்
அள்ளிக்கொடுக்கும் கரங்களும்
இன்றும் நிழலாடுகின்றனவே.
நெஞ்சில் துயருடன் உங்கள்
நினைவேந்தி நிற்போம் என்றும்!




நுணாவில் கிழக்கு,
சங்கம் ஒழுங்கை,
சாவகச்சேரி (AUSTRALIA)

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், சகோதரங்கள்

(475184)

மரண அறிவித்தல்



இளையதம்பி குணம்

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வேப்பங் குளத்தை வசிப்பிடமாகவும், குணம் அரிசி ஆலை, குணம்ஸ் பிரைவேட் லிமிட்டெட் ஆகியவற்றின் உரிமையாளருமான இளையதம்பி குணம் கடந்த 29.12.2012 காலமானார்.

அன்னார் பிலோமினாவின் அன்புக் கணவரும், அன்ரனி கைலன் (லண்டன்), அலோசியஸ் நிமலன், அன்சவோ அகிலன் (வவுனியா), காலஞ்சென்ற அனற் பாமினி மற்றும் அஞ்சலினா பவானி (லண்டன்), அன்ரனிற்றா பாலினி (லண்டன்), அலெக்ஸ் குணாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசா (லண்டன்), சுகிர்ந்தினி (வவுனியா), அன்ரன் தேவராஜ் (லண்டன்), வின்சன்ட் டொனால்ட் (லண்டன்) ஆகியோரின் மாமனும், அன்றியன், அஸ்டியன், அபிசேக், அன்சியன், அக்ஷியா, அய்வின், அற்வின், அக்ஸ்வின், அஸ்விற்றா, அக்ஸ்விற்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை திருப்பலி இன்று (02.01.2013) புதன்கிழமை புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு முற்பகல் 10 மணியளவில் வேப்பங்குளம் 6 ஆம் ஒழுங்கை 73/1 இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா இறம்பைக்குளம் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
இல.73/1,
6 ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம், வவுனியா.

தகவல்:
077 2200 662

(24393) (45.5.7)

மூன்றாம் வருட நினைவஞ்சலி

அமரர் வேலாயுதர் பாராளன்
(முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தர் கல்வித் திணைக்களம்)



தோற்றம் 08.06.1964

மறைவு 05.01.2010

புன்னகை தன்னை தன்னகத்தே கொண்டு
புகழோடு மறைந்த அப்பாவே!
மகத்தான சேவைதனை ஆற்றிய பெருமையிலே
மறைந்து விட்ட எம் அப்பாவே!
வழி பார்த்து நாம் நிற்கின்றோம் அப்பா
நற்பெயரை நாம் பெற வழிகாட்டி
விண்ணுலகு சென்றீரே.
ஓம் சாந்தி!

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(27482) (6.7.4)

SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி

ஆங்கிலத்தை இலக்கணம் கற்றுவிட்டோ அல்லது புத்தகம் படித்துவிட்டோ கதைக்கலாம் என்பது சுத்த முட்டாள்தனமானதாகும்.

ஆங்கிலம் தெரியாதவராக இருப்பினும், ஆங்கிலம் பேசப்படுகின்ற சூழலில், ஏனையவர்களுடன் இணைந்து உரையாடிப் பழகுவதன் மூலமே சரளமாக தமிழைப்போல ஆங்கிலமும் பேசமுடியும்.

உரையாடல் பயிற்சியின் மூலம் 80 பேருடன் சேர்ந்து நீங்களும் தமிழைப் போல சரளமாக ஆங்கிலம் பேசிப் பழக விரும்புகின்றீர்களா?

அரசு ,தனியார்அலுவலர், ஆசிரியர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், O/L எடுத்தோர், இளைஞர், 'யுவதிகள், வெளிநாடுசெல்வோர் 05.01.2013 இல் தொடங்கும் புதிய பிரிவுகளில் இணையுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 10 பிரிவு II 10 12
பிரிவு III 01-03 பிரிவு IV 03 05

3 மாத பயிற்சிக் கட்டணம் 3000.00

SAAMSON ENGLISH ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்ப்பாணம்.
TEL- 077 6214567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட
ஆசிரியையும், பகுதித் தலைவ
ருமான திருமதி நந்தினிதேவி
ஸ்ரீராமச்சந்திரனின்
அன்பு மாமியார்
**சச்சிதானந்தம் பார்வதிப்பிள்ளை**
அவர்களின் மறைவையொட்டி
எமது பாடசாலைச் சமூகம் சார்பில்
துயர்பகிர்வதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யா/ வடமராட்சி மத்திய மகளிர்
கல்லூரிச் சமூகம்.**

(C/6193)(6.7.11)

---

**வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

அறிவித்தல்

வெளிநிலைத் தேர்வுநாடிகளின் பதிவேடுகள்

1. கலை முதற் தேர்வு
2. வணிக முதற் தேர்வு
3. கலைமாணி பகுதி – I
4. வணிகமாணி பகுதி – I
5. இசைமாணி
6. நடனமாணி
7. வியாபார முகாமைத்துவமாணி(இணையவழி)

மேற்படி வெளிவாரிக் கற்கைநெறிகளுக்கு 2010/2011 கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வு நாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய மாணவர் பதிவேட்டினை 02.01.2013 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: கல்வித் தகைமைச்சான்றிதழினதும் (க.பொ.த. உயர்தரம்),பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும், மூலப்பிரதி களை சமர்ப்பிக்காதோர் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்.

(பி/5182)(5-6-7)

---

# தவறி விட்டது

வன்னியசிங்கம் வீதி, மாரியம்புலம், தாவடி வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை கஜன்யா என்பவரது (827512184V) இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதி, வரிப்புத்தகம், Sam Sung கையடக்க தொலைபேசி என்பன தாவடிக்கும் கோண்டாவில் சமுர்த்தி வங்கிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.


**தொ.பே: 077 5346349**

(கோண்டாவில் சமுர்த்தி வங்கியிலும் ஒப்படைக்கலாம்)
சன்மானம் வழங்கப்படும்.

(27561)(6.7.11)

---

# கண்ணீர் அஞ்சலி



மட்டுவில் வடக்கைச் சேர்ந்த
வடமாகாண கரப்பந்தாட்ட வீரரும்,
(செற்அப்) சிறுகதை எழுத்தாளரும்,
நாகேஸ்வரியின் அன்புக்
கணவருமாகிய
**வே.மகாலிங்கம்**
(27.12.2012)
காலமானதையிட்டு
ஆழ்ந்த துயரடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும்,
உறவினர்களுக்கும் எமது
ஆழ்ந்தஅனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கரப்பந்தாட்ட ரசிகர்களும்,
அபிமான வாசகர்களும்.**
மட்டுவில் வடக்கு,சாவகச்சேரி.
0775944324.

(18002)(6.7.11)

---

# HND in Pharmacy

**Be a Pharmacist in 2 Years**
* Work in Government/Private Sector
* Run your own Pharmacy

**Lectures by MBBS Doctors !**
Entry Req: 3 Passes in A/L -Bio/Maths
Admissions are open now !
[ Small Group Classes/Internship will be arranged ]

K.U Education
Pioneers in Medical Studies

**Knowledge Universe**
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
**Tel :0777302882 Web :www.kugroup.info**

---

# உளம் மகிழ வாழ்த்துகின்றோம்

## நடராஜா பஞ்சசீலன்



எமது பாடசாலை ஆசிரியர் நடராஜா பஞ்சசீலன்
அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாகத்
தெரிவு செய்யப்பட்டு 17.12.2012 அன்று யாழ்.
நீதிமன்றத்தில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில்
சத்தியப்பிரமாணம் செய்ததை முன்னிட்டு
வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் நல்லுறவு கழகம்.**
**மு/ தேறாங்கண்டல் அ.த.க.பா.,**
**துணுக்காய்.**

Best Wishes

(27430)(6.11)

---

# கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் இலங்கை வங்கி
முகாமையாளர்
பொன்.பாலகுமார் அவர்களுடைய
அன்புத் தாய்
**பொன்னுத்துரை பாலாம்பிகை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கு.சங்கரபாலன்,
வீ.இராமசாமி.**

கோப்பாய்.

(27435)(6.7.11)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அன்புடைய ஆசானே!
அகிலம் அறிந்த தலைவனே!
உழைப்பால் உயர்ந்த உத்தமனே!
நம் உள்ளம் நிறைந்த தேவா!
உன் புகழ் இன்று போல் என்றும் உலகறிய!
உன்றனது புகழ் பேரிசையாய் இடிமுழங்க!
என்றும் நீர் பல்லாண்டு வாழ்க!

**தனது கடின உழைப்பால் MDRT இலக்கினை
அடைந்த எமது சிரேஷ்ட குழுத் தலைவர்**

# நடராஜா தேவா

(MDRT, Senior Team Financial Consultant,
Member of Millioners Club Sri Lanka Insurance, J.P All Island)

அவர்களை வாழ்த்தி கௌரவிப்பதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.**

**வாழ்த்துவோர்:
தேவாவின் குழு அங்கத்தவர்கள்,**

(27438) (10.7.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களக் கற்கைக்குவிண்ணப் பிக்கலாம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆரம்ப மற்றும் அடிப்படைச் சிங்களக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிக்கு 18 வயதினைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 15-01-2013 ஆகும். இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார்.


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
16 * 04 * 1984

இறப்பு
13 * 01 * 2012

அமரர் **சிவபாதம் சிவறஞ்சன்**
(சிறைச்சாலை உத்தியோகத்தர்)
திதி – 02.01.2013

கண்ணிமைக்கும் கணப்பொழுதில்
கடுகதியாய் வந்தானோ காலன்!
எண்ணி முடியுமுன் வந்ததையா ஓராண்டு!
குன்றா உழைப்பும் குறையா ஊக்கமும்
வற்றா அன்பும், வியக்கும் கடமையும்
நித்தமும் மலருதடா என் மனதில்
மங்காத உன் நினைவுடன் என்றும் நாம்.

கைதடி நாவற்குழி,
கைதடி.

(27939)(5-6-7)

மனைவி,மகள்,
குடும்பத்தினர்.



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



**CIMA-UK Registration fee free- MCS இல் மட்டுமே**

பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் அன்றி **CIMA** கற்க விரும்பும் அனைத்து மாணவர்களுக்கும் **CIMA- Registration payment** ஐ தள்ளுபடி செய்வதற்கான ஒழுங்கு **MCS** இல் கற்க விரும்பும் மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- இதன் மூலம் **£ 70** ஐ அதாவது **Rs 15500** ஐ சேமிக்க முடியும்
- புதிய பிரிவு ஆரம்பம் 5.1.2013
- குறிப்பு1:-ஒரு **Batch** இல் 20 மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள். தனிப்பாட அனுமதி உண்டு.
- குறிப்பு2:- 2013 **May operational level** பரீட்சை எடுக்க விரும்பும் மாணவர்கள் **Foundation Level** இல் குறிப்பிட்ட பாடங்களை 28.02.2013 பூர்த்தி செய்யாவிட்டால் 2013 **May** பரீட்சைக்கு தோற்ற முடியாது. அவ்மாணவர்களுக்கு விசேட பிரிவு ஆரம்பம் 10.1.2013

தொடர்புகளுக்கு **MCS-CIMA Division**

**324,Palaly road,Jaffna, 772395895**



# சரவணா ரெக்ஸ்

**மலிவு விற்பனையின் போது அதிஷ்டசாலிகளாக நேற்று (01.01.2013) முற்பகல் 10.00 மணிக்கு குலுக்கல் முறையில் தெரிவு செய்யப் பட்டோர் விவரம்**




**முதலாம் பரிசு**
N. தேவகாந்தன்
பிரதான வீதி,
சாவகச்சேரி.

**இரண்டாம் பரிசு** கெசிகா ரவீந்திரன்
NSB, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு** வ. தர்சிகா
1199, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.



(C5200) (10)

கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி-சரவணா ரெக்ஸ்



# ஸ்தோத்திர மாலா நூல் வெளியீட்டு விழா

இடம்: ஊரிக்காடு நிருவத்தம்பை ஸ்ரீ தான்தோன்றி விநாயகர் திருக்கோயில்
காலம்: இன்று (02.01.2013 ) புதன்கிழமை.பிற்பகல் 2 மணி.

மேற்படி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணகுருக்கள் தலைமையில்

## நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- வேத, ஸ்தோத்திர, திருமுறை பாராயணம்.
- ஆசியுரை :
  பிரம்ம ஸ்ரீ மா.வக்சாங்கக் குருக்கள்
  சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்
- வரவேற்புரை:
  சிவஸ்ரீ ச.யோகசம்பந்தக் குருக்கள்
- தலைமையுரை:
  சிவஸ்ரீ பாலபத்மநாபக்குருக்கள்
- வாழ்த்துரை:
  சிவஸ்ரீ தி.சோமஸ்கந்த குருக்கள்
- வெளியீட்டுரை:
  சிவஸ்ரீ ச.ம. வேதாரணியக் குருக்கள்

முதற் பிரதி பெறுபவர் : சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்
சிறப்புப் பிரதி பெறுபவர் : சிவஸ்ரீ ந. சிவநேசக் குருக்கள்
ஆசியுரை : சிவஸ்ரீ ச. மகாலிங்கக் குருக்கள்
நன்றியுரை : சிவஸ்ரீ பா. நரேந்தர் ஐயா

சிவாச்சாரியார்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வரவேற்கின்றோம்.

**இரத்தினாசனம் வெளியீட்டகம்**
**RBN Printers**



# மரண அறிவித்தல்

## செல்லம்மா சண்முகநாதன்

(காரைநகர்)



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், திக்கரை களபூமியை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா சண்முகநாதன் (31.12.2012) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பூரணம் தம்பதியினரின், அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அருமை மனைவியும், சத்தியதேவி (பிரான்ஸ்), சறோஜினிதேவி-தவபாலன் (பிரான்ஸ்), திலகாதேவி (லண்டன்), கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், சிவபாலன் (பிரான்ஸ்), திருப்புகழூர் சிங்கம் (J/47 கிராம அலுவலர்), சிவாஜினி (பிரான்ஸ்), ஆனந்தன் (லண்டன்), ஆனந்தராசா (ஆனந் கிறீம் கவுஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜா, தனஞ்சயன், சயந்தன், பவிதா, கஜந்தன், கஜீவன், சாதனா, சஹானா, சஜீவன், நிரூபன், நிலானி, அருந்தா, அமிர்தா, அரிகரன், அரவிந்தன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், சங்கரப்பிள்ளை, நாகம்மா, நேசமலர், நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2013) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திக்கரை, களபூமி,**
**காரைநகர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சென்.மைக்கல் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்

# சென்.மேரிஸ், அளவெட்டி மத்தி அணிகள் இறுதிப் போட்டிக்கு

**இறுதியில் மேரிஸ் அணியை எதிர்த்து விளையாடும் வாய்ப்பை அளவெட்டிமத்திய விளையாட்டுக்கழக அணி பெற்றது.**

யாழ்ப்பாணம்,ஜன.02

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 6 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் அரையிறுதியாட்டத்தில் வென்ற கோப்பாய் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும், அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோப்பாய் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடியது மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழக அணி. ஆயினும் சென். மேரிஸ் அணி மிகச் சிறப்பாக பந்து வீசி ஆட்டத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. சென். மேரிஸ் அணி வீரர்கள் எதிர் அணியின் இலக்குகளை வேகமாக சரித்ததன் மூலம், அவர்களின் ஓட்ட எண்ணிக்கையையும் மட்டுப் படுத்தினர். இதனால் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 30 ஓட்டங்களையே மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் அணியால் பெறமுடிந்தது.

இதில் அனுஷன், தேசிகன் ஆகியோர் தலா 8 ஓட்டங்களைப் பெற்றனர்.

31 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம். அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாகவும் அதே சமயம் பொறுப்பாகவும் துடுப்பெடுத்தாடினர். இதனால் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் அணியின் பந்து வீச்சாளர்களால் இலக்குகளை வீழ்த்தவோ, ஓட்டங்களை மட்டுப்படுத்தவோ இயலாமை போய் விட்டது. இந்த நிலையில் கோப்பாய் சென்.மேரிஸ் இலக்கு இழப்பு எதுவுமின்றி வெற்றி இலக்கை அடைந்து. இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜீவன் 17 ஓட்டங்களையும், சஜீவன் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

37 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி 4:2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியீட்டியது.

இதில் கோகுலதாசன் 21 ஓட்டங்களையும், தயாளன் 5 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். இந்த வெற்றி மூலம் இறுதிப் போட்டியில் கோப்பாய் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து விளையாடும் வாய்ப்பை அளவெட்டிமத்திய விளையாட்டுக்கழக அணி பெற்றது. (ங-23)

# ஜே.பி.எல்.-2 சுற்றுப் போட்டி 13 புதிய அணிகள் பங்கேற்பு

வலி. வடக்கு, ஜன .02

இரண்டாவது வருடமாக யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

முதல் சுற்றில், இந்த தொடரில் கலந்து கொள்ளவுள்ள 13கழகங்களும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, தமக்கிடையே மோதவுள்ளன.

முதல் சுற்றில் இரு குழுக்களிலும் முதல் இரண்டு இடங்களையும் பிடிக்கும் அணிகள் இரண்டாம் சுற்றில் விளையாடுவதற்கு தகுதி பெறவுள்ளன. இந்த 4 அணிகளோடு, முதலாவது ஜே.பி.எல். போட்டிகளில் குழு நிலைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற ஆறு அணிகளுமாக மொத்தம் 10 அணிகள் இரண்டாவது சுற்றில் மோதவுள்ளன.

கடந்த வருடம் முதல் தடவையாக இடம் பெற்ற ஜே.பி.எல். போட்டிகளின் போது யாழ்.மாவட்டத்தில் முன்னிலையில் காணப்பட்ட 8 கழகங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தன.

எனினும் இந்த வருடத்தில் இருந்து 13 புதிய அணிகள்ஜே.பி.எல். போட்டிகளில் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்த முறை யாழ்.மாவட்டத்தில் உள்ள 19 விளையாட்டுக்கழகங்கள் ஜே.பி.எல். சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

முதல் சுற்றில் மோதவுள்ள கழகங்களின் விபரங்கள் வருமாறு:-

குழு 'ஏ'(முதற்சுற்று )

1.வடமராட்சி ஈகிள் விளையாட்டுக் கழகம்

2.அரியாலை விளையாட்டுக்கழகம்

3.கந்தர்மடம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

4.மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம்

5.தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகம்

6.சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

7.வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம்.

குழு 'பி' (முதற்சுற்று )

1.திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம்

2.சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம்

3.தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்

4.வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம்

5.திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக் கழகம்

6.அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம்.

குழு 'ஏ'(இரண்டாம் சுற்று )

1.யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம்

2.யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

3.யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம்

இந்த அணிகளுடன் முதல் சுற்றில் 'ஏ' குழுவில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகளும் இந்தக் குழுவில் உள்வாங்கப் படவுள்ளன.

குழு 'பி'(இரண்டாம் சுற்று )

1.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

2.கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம்

3.யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

இந்த அணிகளுடன் முதல் சுற்றில் 'பி' குழுவில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகளும் இந்தக் குழுவில் உள்வாங்கப் படவுள்ளன.

(ங-86)

# இன்றைய ஆட்டங்கள்

வவுனியா,ஜன.02

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது. மழை காரண மாக இடைநிறுத்தப்பட்டி ருந்த இந்தத் தொடரின் ஆட்டங்கள் மீளவும் ஆரம்பித்துள்ளன.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் யூனிபைட் விளையாட்டுக்கழகம். (ங-23)

# யங்ஸ்ராரை வீழ்த்தி நியூபைட் வென்றது



யாழ்ப்பாணம், ஜன. 2

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்குமான 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நியூபைட் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது.

நியூபைட் விளையாட்டுக் கழக அணிக்கும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் ஆரம்பத்தில் இருந்தேஆதிக்கம் செலுத்தியது நியூபைட் விளையாட்டுக்கழகம்.

நியூபைட் அணியின் அபார ஆட்டத்துக்கு முன்னால் யங்ஸ்ரார் அணியால் ஈடு கொடுக்க முடியவில்லை. இதனால் தொடர்ந்து கோல் மழை பொழிந்த நியூபைட் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ங-23)


# விழிப்புணர்வு கருத்தரங்கு


யாழ்ப்பாணம்,டி.ஜன.02

மாற்று வலுவுள்ளோரையும் தடகள மற்றும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் இணைத்து கொள்வது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று கிளிநொச்சி உதவி அரச அதிபர் திருமதி ப.ஜெயராணி தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு கரைச்சி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி, விளையாட்டுத்துறை அலுவலர்கள், கிளிநொச்சி மாவட்ட பயிற்றுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுவரை காலமும் மாவட்ட, மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் போது, மாற்றுத் திறனுள்ளோருக்கான போட்டிகள் தனியாகவே நடத்தப்பட்டு வந்தன. ஆயினும் இந்த நிலையை மாற்ற இனி வரும்காலங்களில் இத்தகைய விளையாட்டு நிகழ்வுகளில் மாற்று வலுவுள்ளோரையும், ஏனைய வீரர்களோடு ஒன்றிணைத்து நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாகே கிளிளநொச்சியில் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடை பெற்றுள்ளது. (ங-23)





வவுனியாவில் உள்ள மாற்றுத் திறனுள்ள வீரர்களுக்கு, ஹன்டி கப் நிறுவனம் கரம், மேசைப்பந்தாட்டம், சதுரங்கம் போன்ற உள்ளக விளை[illegible] வழங்கிவருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்காகன மேசைப்பந்[illegible] ஒன்றையும் குறித்த நிறுவனம் விரைவில் நடத்தவுள்ளது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02/01/2013

# ஹோக்லிக்கு சிக்கல்

சென்னை ஆட்டத்தில் காயமடைந்த விராத் ஹோக்லி, கொல்கத்தா ஒருநாள் ஆட்டத்தில் விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி மூன்று போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. சென்னையில் நடந்த முதல் ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வென்றது. இந்த ஆட்டத்தின் போது, பந்து வீசிய இந்திய வீரர் ஹோக்லி கால் வழுக்கி கீழே விழுந்தார். முழங்காலில் பலமாக அடிபட, மைதானத்தை விட்டு வெளியேறிய இவர், மறுபடியும் களத் தடுப்புச் செய்ய வரவில்லை.

இரு அணிகள் மோதும் இரண்டாவது ஆட்டம் கொல்கத்தாவில் நாளை இடம்பெறவுள்ளது. இதில் ஹோக்லி விளையாடுவது சந்தேகமாக உள்ளது. இவரது காயத்துக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கான் எடுக்கப்பட்டு, அதன் முடிவு வெளியான பிறகுதான், ஹோக்லி பங்கேற்பது குறித்து தெரியவரும்.



ஹோக்லி

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை [பி.சி.சி.ஐ.,] செயலர் சஞ்சய் ஜக்தலே வெளியிட்ட அறிக்கையில், ஹோக்லியின் நிலை குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். இவரது கால் முக்கிய சதை நார்கள், எவ்வித சேதமும் அடையவில்லை. முழங்காலில் உள்ள திரவத்தில் தான் பிரச்சினை ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பின் அதுவும் சரியாகி விட்டது. கொல்கத்தா ஒருநாள் ஆட்டத்தில் விளையாடுவாரா, இல்லையா என்பது குறித்த முடிவு, விரைவில் எடுக்கப்படும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புத்தாண்டு கொண்டாட்டம்**

இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் பங்கேற்க இரு அணி வீரர்களும், சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் கொல்கத்தா சென்றடைந்தனர். பாகிஸ்தான் அணியின் முகமது சமி, முகமது இர்பான், மலிக் உள்ளிட்டோர் தனியார் ஹோட்டலில் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரு அணியினரும் சேர்ந்து புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபடுவதாக இருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது. [5]


ஜோகோவிச்

# இனி வருபவர்கள் சாதிப்பார்கள்

தனது ஓய்விற்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணியில் இடம்பெறும் வீரர் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்துவார்கள் என்று நம்புவதாக ஆஸ்திரேலிய அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

37 வயதான மைக்கல் ஹசி, தனது இறுதி டெஸ்ட் ஆட்டமாக இலங்கைக்கெதிராக சிட்னியில் ஜனவரி 3 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள டெஸ்ட் ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார். அத்தோடு ஆஸ்திரேலியாவின் இந்தப் பருவகாலத்துடன் அவர் சகல சர்வதேசப் போட்டியிலிருந்தும் ஓய்வுபெறவுள்ளார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மைக்கல் ஹசி, அணியைப் பற்றித் தான் கவலைப்படவில்லை எனவும், மிகச்சிறப்பான வீரர்கள் வாய்ப்புக்காகக் காத்திருப்பதாகவும், மிக அதிகமானோர் அவ்வாறு காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

கிரிக்கெட் வரலாற்றின் படி வீரர்கள் வருவதும், போவதுமாக இருந்த போதிலும் கிரிக்கெட் தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டிருப்பது தெளிவானதாக உள்ளதாகத் தெரிவித்த அவர், தனது விடயத்திலும் அவ்வாறே காணப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் ஓய்வினை அறிவிக்கும் ஆஸ்திரேலியாவின் இரண்டாவது மிகப்பெரிய துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி ஆவார். ஏற்கனவே ஆஸ்திரேலியாவின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் றிக்கி பொன்டிங் இதற்கு முன்னைய தொடரோடு ஓய்வுபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. [5]

# ரொனியின் மரணத்தால் இலங்கை அதிர்ச்சி


ரொனி கிரெய்க்

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் புகழ் பெற்ற நேர்முக வர்ணனையாளருமான ரொனி கிரெய்க்கின் மரணத்துக்கு தனது அனுதாபத்தை தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, அவரது மரணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டிற்கு நீண்ட காலமாக ரொனி கிரெய்க் மிகுந்த ஆதரவாளராக இருந்து வந்துள்ளாரெனவும் இலங்கையின் கிரிக்கெட், வீரர்கள், இலங்கை நாட்டின் அழகு, பன்மைத்துவம் பற்றிய விபரிப்புகளில் அவர் இலங்கையை நேசித்தாரெனவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அவரது சிறப்பான ஆதரவு அவருக்கு இலங்கையின் சுற்றுலாத் துறை தூதராக நியமிக்கப்பட வாய்ப்பாக அமைந்ததெனவும் அந்தக் கௌரவத்தை அவர் மிகவும் நேசித்தானெரவும் இலங்கை கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

அவரது குரல் தற்போது அமைதியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, அவரேது மரணத்துக்கான அனுபதாங்களை தெரிவித்துக்கொள்வதாகவும், ரொனி கிரெய்க்கின் குடும்பத்தினருக்கும் தங்களது அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் கூறியுள்ளது.

அத்துடன், ரொனி கிரெய்க்கின் இழப்பை இலங்கை கிரிக்கெட் சபை உணர்வதாகவும் தெரிவித்துள்ளது. [5]

# சம்பியனானார் ஜோகோவிச்

அபுதாபியில் நடந்த கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

அபுதாபியில், உலக ரென்னிஸ் சம்பியன் கண்காட்சி தொடர் நடந்தது. இதில் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், இங்கிலாந்தின் அன்டி முர்ரே உள்ளிட்ட 6 முன்னணி வீரர்கள் பங்கேற்றனர்.

இதன் இறுதியில் சேர்பியாவின் ஜொகோவிச், ஸ்பெயினின் நிகோலஸ் அல்மாக்ரோ மோதினர். 'டை–பிரேக்கர்' வரை நீடித்த முதல் செற்றை அல்மாக்ரோ 7–6 என்று கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜொகோவிச், 2 ஆவது செற்றை 6–3 என்று தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் அசத்திய சேர்பிய வீரர் 6–4 என்று வென்றார். இறுதியில் ஜொகோவிச் 6–7, 6–3, 6–4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக [2011, 12] சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கடந்த ஆண்டு நடந்த இந்தத் தொடரின் இறுதியில் ஜொகோவிச், ஸ்பெயினின் டேவிட் பெரரை வீழ்த்தினார். [5]


மைக்கல் ஹசி

# வருத்தத்தில் சங்கா

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 'பொக்சிங் டே' டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியமை குறித்து வருத்தமடைவதாக இலங்கை அணியின் குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி 'பொக்சிங் டே' டெஸ்ட் ஆட்டத்தில் மெல்பேர்ண் மைதானத்தில் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பங்குபற்றியதில்லை என்ற நிலையில் மெல்பேர்ண் ஆட்டம் முக்கியமானதாக அமைந்திருந்தது.

எனினும் அந்த ஆட்டத்தில் இலங்கை அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 201 ஓட்டங்களால் படுதோல்வியடைந்திருந்தது.

அது குறித்து கருத்துத் தெரிவித்த குமார் சங்ககார, மெல்பேர்ண் ஆட்டம் மிகப்பெரிய சந்தர்ப்பமாக அமைந்ததாகவும், ஓர் அணியாக அனைவரும் அந்த ஆட்டத்தில் திறமை வெளிப்பாடுகள் தொடர்பாக மிகவும் வருத்தமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மெல்பேர்ணில் வெளிப்படுத்திய திறமையை விடச் சிறப்பான திறமையை வெளிப்படுத்தும் திறமை இலங்கை அணிக்கு உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

அந்த ஆட்டத்தில் போட்டித்தன்மையை வழங்குமளவுக்கு இலங்கை அணியின் துடுப்பாட்டம் இருந்திருக்கவில்லை எனத் தெரிவித்த குமார் சங்ககார, அதற்கான பொறுப்பை அணியாக ஏற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இவ்வாறான விடயங்கள் கிரிக்கெட்டில் இடம்பெறுவதுண்டு எனவும் தெரிவித்தார்.

மெல்பேர்ண் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் அரைச்சதம் பெற்ற குமார் சங்ககார டெஸ்ட் போட்டியில் தனது 10,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்ததோடு, இரண்டாவது இன்னிங்ஸில் விரலில் காயமடைந்து சத்திர சிகிச்சைக்குள்ளாகியுள்ளதால் இந்தத் தொடர் முழுவதும் இனிமேல் பங்குபெற மாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. [5]


சங்ககார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பனை இழந்து விட்டோம் - சங்கா

இலங்கையின் கிரிக்கெட்டை ரொனி கிரெய்க் வேறு யாரும் செய்யாதளவுக்கு முன்னிலைப்படுத்தினார் என்று இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்க கார தெரிவித்துள்ளார். ரொனி கிரெய்க் இற்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே சங்ககார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளரு மான ரொனி கிரெய்க், தனது 66 ஆவது வயதில் நுரையீரல் புற்றுநோயால் மரண மடைந்தார். இலங்கையோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த ரொனி கிரெய்கின் மரணம் இலங்கையர்களை அதிகம் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

ரொனி கிரெய்கின் மரணம் கிரிக்கெட் உலகிற்கு மிகப்பெரிய இழப்பு எனத் தெரிவித்த குமார் சங்ககார, இது மிகவும் கவலைக்குரியது எனவும், தான் அதிர்ச்சி யடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ரொனி கிரெய்க் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி அறிந்ததும் தான் மிகுந்த அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்த குமார் சங்ககார, அவரின் மரணம் மிகப்பெரிய அதிர்ச்சியை வழங்கியதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் கிரிக்கெட்டை மிகவும் அன்புடன் அரவணைத்துக் கொண்டவராக ரொனி கிரெய்க் அறியப்படுவார் எனத் தெரிவித்த குமார் சங்ககார, இலங்கையை முன்னிலைப்படுத்துவதற்கும், இலங்கையை உலகம் முழுவதும் சிறந்த நிலையில் பரப்புரை செய்தவர் என்ற ரீதியில் ரொனி கிரெய்க் முக்கிய மானவர் எனத் தெரிவித்தார்.

[5]


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு மனமார்ந்த நன்றிகள்

யாழ். மாவட்டத்திலிருந்தும், வவுனியா தெற்கு வலயத்திலிருந்தும், கிளிநெச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு, வவுனியா வடக்குக் கல்வி வலயங்களில் இரு வருட ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றச்சென்று, சேவை நிறைவுசெய்து, யாழ். மாவட்டத்துக்கும், வவுனியா தெற்கு வலயத்துக்கும், மீளவும் திரும்பி கடமையாற்றுவதற்கு ஆவன செய்துதவிய இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஜோசப் ஸ்ராலின் அவர்களுக்கும் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள்


தரம் 01 - தரம் 05 வரையான மாணவர்களுக்கு
GRAMMAR and Spoken English வகுப்புகள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு- 0771479485

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி.யாழ்.
ஆண்டு 6 - O/L
புதிய பிரிவு ஆரம்பம்:3.1.2013
பி.ப 3.45 மணி
(கடமை, கட்டுப்பாடுடன் நடத்தும் யாழ். நகரில் NO-1 நிறுவனம்

Group Class- Physics
Thanchi Lane, Arasady Road, Jaffna.
A/L -2015 Physics
தமிழ் மொழிமூலம் சனி, ஞாயிறு 6.30-7.30a.m
English Medium Tue, Thu 4.30 -5.30 p.m
BY: K.Selvan B.Sc (Hons)

DCM
A/L - 2015 கலை வர்த்தகம்
ஆரம்பம் - 05.01.2013
சனி - காலை - 9.00
யாழ்.நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்

தொழிற்கல்வி
குறுகிய காலத்தில் 100% தொழில் உத்தரவாதத்துடன் உயர்வருமானம் தரும் சான்றிதம் பயிர்சி பாடநெறிகள்
Computer Repairing
Electrical Wiring
Mobile Phone Repairing
1.கனணி திருத்துதல்
2.வீட்டு மின் இணைப்பு
3.கையடக்க தொலைபேசி திருத்துதல்
IISEEES NALLUR CAMPUS
762,பருத்தித்துறை வீதி. நல்லூர்
பதிவுகளுக்கு 0777 444 225

PHYSICS பௌதிகவியல்
2013 & 2014 A/L Classes நடைபெறுகின்றன
முத்தட்டுமடலேன்.
கோண்டாவில் மேற்கு
(0213734114)
2015 A/L Admission (03-01-2013) 5.00 PM
By.Kajan

தேவை
பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
பக்க வடிவமைப்பாளர்
Page Maker பகுதிநேரம், முழுநேரம்
தட்டெழுத்தாளர்
Type Setter பகுதிநேரம், முழுநேரம்
Pagemaker, Photoshop என்பன தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 05.01.2013
பிரதம ஆசிரியர், உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.






IIS முகாமைத்துவக்கற்கை நெறிகள்

பொது வியாபார முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவ துறைகளில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

| கற்கை நெறிகள் | காலம் |
|---|---|
| Certificate in Business Management | 4 Months |
| Certificate in Marketing | 4 Months |
| Certificate in Human Resource Management | 4 Months |

புதிய பிரிவுகள் ஆரம்பம்
07.01.2013, 12.01.2013
காலை 10.00மணி

பிரிவு 1: 7.00 pm - 9.00 pm (திங்கள், புதன் . வெள்ளி)
பிரிவு 2: 9.00 am - 11.00 am (சனி.ஞாயிறு)
பிரிவு 3: 3.00 pm - 5.00 pm (சனி.ஞாயிறு)

இலங்கை அரசின் மூன்றாம் நிலைக்கல்வி,தொழிற்கல்வி ஆணைக்குழுவின்(TVEC) அங்கீகாரம் பெற்ற நிறுவனம்





மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 CLOCK TOWER ROAD,JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

யூனிவேர்சல் கந்தர்மடம்
A/L 2015 கலை, வர்த்தகம்
ஆரம்பம் தை 5
சனி காலை 8.30
தரமான கல்விக்காக நீங்கள் எம்முடன்

A/L 2015 NEC
கலை, வர்த்தக
கணித உயிரியல் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

DCM யாழ். நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
A/L - 2015 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 05.01.2013
சனி காலை -9.00
A/L 2015
பொருளியல் S.வரதராஜன்
கணக்கீடு P.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி

NEC மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2015
Tamil & English Medium
கணித உயிரியல் பிரிவு
ஆரம்பம் : 02-01-2013 புதன் 3.00மணி
CHEMISTRY வாசு வாகீசன்
PHYSICS கருணாநிதி எடிசன்
Com.MATHS விமலநாதன்
BIOLOGY சுதா

36 ஆவது ஆண்டில் காலடி வைக்கும்
யாழ்ப்பாணம் சிற்றி மெடிக்கல்ஸ்
நிறுவனத்தின் சேவை மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
அம்பிகா டிஸ்பென்சரி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


கடினமான செயலின் சரியான பெயர் சாதனை; சாதனையின் தவறான விளக்கம் கடினம்.
- செஸ்டர்டன் -

# புதன் பொய்கை A

உதயன் ஜனவரி 02 2013 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

முத்துகிருஷ்ணா சர்வானந்தன்

# இலவசக் கல்வி ஒரு மாயையா?



"எல்லாப் பெற்றோருமே தமது பிள்ளைகளை தரம் ஒன்றிலிருந்தே தனியார் கல்விக்கூடங்களுக்கு பணம் செலுத்தி அனுப்புகின்றனர். நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் கட்டணம் அறவிடாவிட்டாலும் உருப்படியாக பயனுள்ள கற்பித்தலை நடத்துவது இல்லை என்ற கருத்துப் பரவலாகக் காணப்படுகிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒன்றியங்களின் சம்மேளனம் (FUTA) மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர்களின் சம்மேளனம் (IUSF) என்பன இலங்கையில் "இலவசக் கல்வியை பாதுகாப்போம்" என்ற நீண்ட கால பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன.

மானிடர் வாழும் இந்த உலகில் எதுவுமே இலவசமாகக் கிடைப்பது இல்லை என்பது தான் அடிப்படை உண்மை ஆகும். இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் பொதுப் பொருள்கள் மற்றும் பொதுச் சேவைகள் பெறுவதற்காக அரசுக்கு பலதரப்பட்ட வரிகளைச் செலுத்தி வருகின்றனர். அரசு தனது மொத்த வருவாயில் 70-75 வீதத்தை மறைமுக வரிகள் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றது. ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் பலதரப்பட்ட வரிகளை அரசுக்கு செலுத்திய வண்ணமே இருக்கின்றனர். தமது பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரி செலுத்தியே வருகின்றனர்.

அதேவேளை இலங்கை பூராகவும் உள்ள பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறும் நடைமுறையானது பெருமளவு ஊழல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்காக பெற்றோர் இலஞ்சம் வழங்குவது, இலவசக் கல்வி முறைமையினைக் கேலிக்குரியதாக்குகின்றது. ஏறத்தாழ எல்லாப் பெற்றோருமே தமது பிள்ளைகளை தரம் ஒன்றிலிருந்தே தனியார் கல்விக்கூடங்களுக்கு பணம் செலுத்தி அனுப்புகின்றனர். நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் கட்டணம் அறவிடாவிட்டாலும் உருப்படியாக பயனுள்ள கற்பித்தலை நடத்துவது இல்லை என்ற கருத்துப் பரவலாகக் காணப்படுகிறது.

இறுதியாக மேற்கொள்ளப்பட்ட குடித்தன வருமானம் மற்றும் செலவினம் கணக்கெடுப்பு (House Hold Income and Expenditure Survey- HIES) 2009-2010 முடிவுகளின்படி, கல்விக்கான சராசரி மாதாந்த குடித்தன செலவினமானது மொத்த உணவு தவிர்ந்த செலவினங்களில் 5.6% ஆகும். கல்விக்கான சராசரி மாதாந்த குடித்தன செலவினமானது, உதாரணத்துக்கு ஆடை அணிகலன் மற்றும் பாதணி (5.0%) தொலைத்தொடர்பு (4.2%) செலவினங்களைவிட உயர்வாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் இலங்கையில் கல்வி மற்றும் சுகாதாரம் என்பன "இலவசம்" எனும் கூற்றை அல்லது உரிமை கோரலை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் இலங்கையில் கல்வி முறைமையானது இலவசம் என்று கூறுவது தவறான சொற்பிரயோகமாகும். இலங்கையில் நடைமுறையிலன்றி பெயரளவில் மட்டுமே கல்வியும் சுகாதாரமும் இலவசமாகவுள்ளன. தற்போது நாம் இலவசக் கல்வி எனும் உரிமை கோரலின் சாரத்தினை இலவசக் கல்வி முறைமையின் பெறுபேறுகளை அதன் விளைவுகளை சற்றே நோக்குவோம்.

பொது நிதியில் இயங்கும் பல்கலைக்கழகங்கள் மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள் என்பன வேலைக்கு அமர்த்த இயலாத பட்டதாரிகளையே பெரும்பாலும் உருவாக்குகின்றன. இலங்கையின் பதினைந்து பல்கலைக்கழகங்களினாலும் வழங்கப்படுகின்ற பொறியியல் மற்றும் மருத்துவ பட்டங்கள் தவிர்ந்த பெரும்பாலான பட்டங்கள் அங்கீகரிக்கப் பெறுமதியற்றவை. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் குறிப்பாக மொத்த மாணவர் எண்ணிக்கையில், மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்டோரை உள்ளடக்கும் கலை, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் குறைபாடுகள் அதிகம் காணப்படுகின்றன. இலங்கையில் பல பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது பிள்ளைகளை உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகின்றனர். இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கல்வித் தராதரம் படுபாதாளத்தில் இருக்கின்றதென்பதற்கு முக்கிய சான்றாக இதனைப் பார்க்கலாம்.

HIES 2009-10 கணக்கெடுப்பின்படி இலங்கை சனத்தொகையில் 14.7 சதவீதமானோர் கல்விப் பொதுத் தராதர (க.பொ.த) சாதாரண பரீட்சையில் சித்தி பெற்றவர்களாகவும், 11.2 சதவீதமானோர் க.பொ.த.உயர்தரம் சித்தி பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். இதில் ஒரு சதவீதத்துக்கு சற்று அதிகமானோரே பட்டப்படிப்பு அல்லது பட்டப்பின் படிப்புகளில் சித்திபெய்தி உள்ளனர். ஆகவே நாட்டின் சனத்தொகையில் 26 சதவீதமானோரே க.பொ.த சாதாரண தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையினைக் கொண்டுள்ளனர். இலங்கையில் போற்றப்படும் இலவசக் கல்வி முறைமையானது மொத்த சனத்தொகையில் 74 சதவீதமானோரை தோல்வியுறச் செய்துள்ளது. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் (அனைத்துக் கட்சியினரும்) தமது பிள்ளைகளைக் கட்டணம் அறிவிடப்படும் தனியார் 'சர்வதேச பாடசாலை'களில் இணைத்துள்ளனர் என்பதே யதார்த்தமானது. இவை நாட்டிலுள்ள பாடசாலைக் கல்வித் தராதரம் படுபாதாளத்தில் இருக்கின்றதென்பதற்கான சான்றுகளாகும்.

கல்வி அமைச்சின் ஒரு மூலத்தகவலின்படி மேற்கூறப்பட்ட க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி எய்தியோரின் புள்ளி விபரமானது "மகிந்த சிந்தனை"யில் குறிப்பிடப்பட்டுள்ள உறுதி மொழியினை நிறைவேற்றுமுகமாக காலாகாலமாக 40 [illegible] பெறுவதற்கான வெட்டுப் புள்ளியினை கடந்த ஐந்து ஆண்டுகளாக 30 ஆகக் குறைத்துப் பெறப்பட்டதாகும். இவ்வாறு எண்களை உகந்தவாறு மாற்றுவதானது கொள்கை இலக்குகளை அடைவதற்கான ஆட்சியின் தரக்குறியீடாக அல்லது சிறப்பியல்பாக இருக்கும் அதே வேளை, இலங்கையை ஆசியாவில் ஓர் "அறிவு மையம்" ஆக ஆக்குவதற்கான ஆட்சியாளர்களின் கொள்கைக் கருவியாகவும் இருக்கலாம். சனத்தொகையில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற ஒரு சதவீதமானோரில் கணிசமான தொகையினர் தராதரம் குன்றிய பட்டப்படிப்பு காரணமாக வேலையற்றவர்களாக அல்லது குறைநிலை-வேலை புரிபவர்களாக உள்ளனர். இது இலவசக் கல்வியின் தந்தையான திரு. C.W.W கன்னங்கரா அவர்கள் 1945 ஆம் ஆண்டில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தும் போது மனக்கண்ணில் எதிர்வு கண்ட பேறாக இருக்க முடியாது.

எமது இலவசக் கல்வியின் மேற்கூறப்பட்ட இரக்கப்பட வேண்டிய பெறுபேறுகளுக்கு குறைந்தளவான நிதி வழங்கலே காரணம் என Futa மற்றும் Iusf வாதிடக்கூடும். எவ்வாறெனினும் எமது நாட்டை ஒத்த அல்லது, இதனை விடக் குறைந்த பொது நிதியுடன் வேறுபல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இலங்கை பெற்றதைவிட, சிறந்த பெறுபேறுகளை எட்டியிருக்கின்றன என்பதே உண்மை. பாடசாலை மற்றும் உயர் கல்வி மட்டங்களில் தரமுள்ள கல்வியை வழங்குவதற்கு அல்லது எய்துவதற்கு பணம் இன்றியமையாததாகும். ஆனால் போதாத பகுதிப் (மூலப்) பொருளாகும். மேலதிக பொது நிதியை உயர் கல்விக்காக ஒதுக்கிடுவதன் மூலம் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் எண்ணிக்கையை அதிகரிக்க முடியுமேயன்றி அவர்களின் தராதரத்தை நிச்சயமாக உயர்த்த முடியாது.

அறுபத்தேழு வருட கால (1945-2012) இலவசக் கல்வியின் பலாபலன்களை [illegible] வேண்டிய தக்க தருணம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இலங்கையின் மொத்தக் கல்வித்துறையும் தொட்டில் முதல் சுடுகாடு வரையான கற்றல், கற்பித்தலில் மிக நீண்ட காலமாகவே நெருக்கடியில் இருந்து வந்துள்ளது. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் குறைந்த வேதனம் மற்றும் குறைந்து கொண்டுவரும் மொத்த உள்ளூர் உற்பத்தியில் கல்விக்காக ஈடுபடுத்தப்படும் விகிதாசாரம் என்பன குறும் பிரச்சினைகள் ஆகும். கல்வித் துறையை இடுக்கண்ணுக்கு உள்ளாக்குகின்ற பெரும் பிரச்சினைகளாவன.

(A) காலம் கடந்த மற்றும் பொருத்தமற்ற பாடத்திட்டங்கள்.

(B) கற்கும் learning கலாசாரத்துக்கு மாறாக வலிமை பெற்றிருக்கும் கற்பிக்கும் Teaching கலாசாரம் (ஆங்கிலத்தில் சொல்வதாயின் Spoon feeding).

(C) வினையாற்றுதலுக்கு ஒப்ப ஆசிரியர்களின் வேதனம் அமையாமையினால் நிலவுகின்ற தாழ்மட்ட ஊக்கம்.

(D) கல்விக்கழகத்தினருக்கு வெளிநாட்டு பட்டப்பின் படிப்புகளுக்கான புலமைப் பரிசில் வழங்குதலில் காட்டப்படும் சொந்த பந்த மற்றும் நலம்பேணும் பாரபட்சம்.

(E) மேல் மற்றும் உயர் கல்விக் கூடங்களில் புரையோடியுள்ள மாணவர்களினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் பகிடிவதை ஆகியனவாகும். மேற்குறிப்பிடப்பட்ட மூலப் பிரச்சினைகளை எந்த வித அரசியல் தலையீடுமின்றி சீர்படுத்த வேண்டிய சட்டரீதியான உரிமை மற்றும் கடப்பாடு பல்கலைக்கழகங்களின் மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் (UGC) தனிப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கும் உள்ளன. இந்த மூலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு Futa என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக்கள நிஜத்தில் சனத்தொகையில் ஒரு சதவீதமானேரே பட்டத்தை சம்பாதித்துக் கொண்டுள்ளனர். அவர்களில் பலரும் வேலைக்கு அமர்த்த இயலாத தராதரத்தையுடையவர்களாகவே காணப்படுகின்றனர். நாட்டின் மொத்த உள்ளூர் உற்பத்தியில் ஆறு சதவீதத்தை கல்வித் துறைக்கு ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையின் தருக்கத்துக்குரியதும் ஒழுக்கஞ்சார்ந்தது, பகுத்தறிவுப் பொருளியல் சார்ந்ததுமான இன்றியமையாத நியாயம் தான் என்ன? அரசாங்கம் மொத்த உள்ளூர் உற்பத்தியில் பத்து சதவீதத்தை கல்வித்துறைக்கு ஒதுக்கினும் கூட பல்கலைக்கழகங்களில் புரையோடிப் போயுள்ள மேற்கூறப்பட்ட மூலப் பிரச்சினைகளைச் சரிப்படுத்தும் வரை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தராதரம் உயரப் போவதில் பிரச்சினைகள் தொடரவே செய்யும். இலங்கையின் "இலவசக் கல்வி" எனும் புனித கருவூலம் பாதுகாக்கப்படுவதற்கு கல்வியுலகம் நிறையவே சிந்தித்துச் செயற்பட முன்வர வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினமும் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தால்
# வாழ்நாளை அதிகரிக்கலாம்





தினமும் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தால் வாழ்நாளை 3ஆண்டுகள் நீடிக்கச் செய்ய முடியும் என்கிறது ஆராய்ச்சி மையம்.

நிமிடங்கள் அதிகரிப்புக்கு ஏற்ப, வாழ்நாளும் அதிகரிக்கும் என்கின்றனர் நிபுணர்கள்.

உடற்பயிற்சிக்கும், ஆயுள் நீள்வதற்கும் உள்ள தொடர்பு பற்றி தைவானின் லான்செட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

தைவானை சேர்ந்த 4 இலட்சம் பேரின் வாழ்க்கை முறை ஆராயப்பட்டது. தினமும் அதிக நடைப் பயிற்சி, கால் மணி நேர எளிய உடற்பயிற்சி செய்வோரின் வாழ்நாள் 14 வீதம் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அதற்கு மேல் உடற் பயிற்சி நேரம் அதிகரிக்கும் ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் வாழ்நாள் 4 வீதம் கூடும் என்கின்றனர்.

அதற்கமைய வாரத்துக்கு குறைந்தபட்சம் ஒன்றரை மணி நேரம் உடற்பயிற்சி செய்வதன் மூலம், செல்கள் புத்துயிர் பெற்று நோய் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கின்றது என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# காளானிலும் கலை வண்ணம்






# உரித்து ஒட்டக்கூடிய சூரிய கலங்கள்

மின்சக்தி தேவைப்படும் சாதனங்களால் ஒட்டிக்கொள்வதன்மூலம் அவற்றுக்கு அவசியமான மின்னை உற்பத்திசெய்து வழங்கக்கூடிய சூரியக் கலங்களை ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மிகவும் மெல்லியதாக வடிவமைக்கப்பட்டுள்ள சூரியக்கலங்கள் வளையும் தன்மையைக் கொண்டுள்ளது. உடைவதைத் தவிர்ப்பதற்காக கடினத்தன்மை வாய்ந்த கண்ணாடிப் பதார்த்தம் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தவறான உணவுப் பழக்கம் உடலில் விளைவை ஏற்படுத்தும்





சொந்த பணத்தில் சூனியம் வைத்துக் கொள்வது போல எம்மிடம் இருக்கின்ற சில தவறான உணவு பழக்கங்களால் நாம் நம்மை அறியாமலேயே அசௌகரியங்களுக்கு ஆளாகின்றோம். அதுதொடர்பில் நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக இருக்கின்றது.

நாம் உணவு உண்ணும் வேளையில் விடுகின்ற சிறு சிறு தவறுகள் எமது உடலில் பல விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இன்று அலுமினிய பாத்திரங்களில் சமைப்போரின் தொகை அதிகரித்து விட்டது. எமது உணவுக் கலாசாரத்தின் படி அலுமினியப் பாத்திரத்தில் சமைப்பது உடலுக்கு ஏற்றதொன்றல்ல.

எனவே அலு மினி யப் பாத்திரங்களில் சமைப்பதை நாம் தவிர்த்துக் கொண்டு, தொன்று தொட்டு நாம் பயன்படுத்தி வந்த மட்பாண்டப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் உடலியல் பாதிப்புக்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அது மட்டுமன்றி பலர் சாப்பிட்ட பின்னும் அல்லது சாப்பிடும் போதும் மென்பானங்களை குடிப்பது தவிர்க்க முடியாததொரு பழக்க மாக புழக்கத்தில் இருந்து வருகின்றது. அதுவும் உடலுக்கு பெரும் தீங்கினையே ஏற்படுத்துக்கின்றது. இதனால் நாம் உண்ணும் உணவுகளில் உள்ள விற்றமின்கள் உடலுக்குள் அகத்துறிஞ்சப்படாமல் வீணாகி விடுகின்றது. ஆகவே எவ்வளவு சத்துள்ள உணவை நாம் சாப்பட்டாலும் அதன் முழுமையான போஷாக்கு எமது உடலுக்கு கிடைக் காமல் போகின்றது.

மென்பானங்களில் இருக்கும் அசிட் தன்மை தொண்டை வழியாகவே வெளியேறும். அதனால் தொண்டை முதல் இரைப்பை வரைக்குமான பகுதி களில் அரிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கின்றது. இது பின்னர் தொண் டைப் பகுதிகளில் காயங்களை ஏற்படுத்தி தொண்டைப் புற்று நோயினைக் கூட ஏற்ப டுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றது.

எனவே இதனை தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின் சாப்பிட்டவுடன் தண்ணீரை அருந்த வேண்டும். தண்ணீரை அருந்துவதனால் எமது உடலுக்கு எந்தவித பக்க விளைவுகளும் ஏற் படப்போவதில்லை. அத்தோடு தண்ணீரை உபயோகிக்கின்ற போது நாம் உண்ணும் உணவில் இருக்கும் அத்தனை சத்துக்களும் கனியுப்புக்களும் முழுமையாக உடலுக்குள் அகத்துறிஞ் சப்படுகின்றன. அதனால் உணவின் பூரணத்தை எமது உடல் பெற்றுக் கொள்கிறது.

தற்போது குளிர்சாதனப் பெட்டிகளை பயன்படுத்து வோரின் தொகையும் அதிகரித்துவிட்டது. இவர்கள் தங்களின் வேலைகளை இலகுவாக்கிக் கொள்ளவும் நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளவும் மரக்கறி மற்றும் பழ வகைகளை அதிகமாக வாங்கி குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைத்துக் கொள்கின்றனர். இதுவும் கூடாத ஓர் உணவுப் பழக்க வழக்கமே. பொதுவாக அறுவடை செய்த மரக்கறிகள் 3 நாள்களே முழுமையான விற்றமின்களுடன் இருக்கும். 3 நாள்களின் பின்னர் அவை கொஞ்சம் கொஞ்சமாக விற்றமின்களையும் கனிப்பொருள்களையும் இழக்கத் தொடங்கி விடும். எனவே 3 நாள்களுக்கு அதிகமாக மரக்கறி வகைகளை நாம் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்திருந்து சமைப்பதனால் எந்தவித பிரயோசனமும் இல்லை.

எனவே குறிப்பட்ட தினத்துக்குத் தேவையான மரக்கறி வகைகளையும் பழ வகைகளையும் குறித்த தினங்களிலேயே வாங்கி சமைப்பதே மிகவும் பொருத்தமான ஒன்றாகும். அவ்வாறு முடியாதவர்கள் வாங்கி வைத்த மரக்கறிகளை பெரும்பாலும் 3 நாள்களுக்குள் சமைத்து முடிப்பதே மிகச் சிறந்த வழிமுறையாகும்.

இவ்வாறு உணவு உட்கொள்ளும்போது நாம் விடுகின்ற சிறு சிறு தவறுகளால் எமது உடலில் ஏற்படும் சிறிய விளைவுகள் எதிர்காலத்தில் நோய்களைத் தோற்றுவிப்பதற்கு அடிப்படையாக அமைந்து விடுகின்றது. இவ்வாறான பழக்க வழக்கங்களைத் தவிர்த்து கொள்வது எமது ஆராக்கியமான வாழ்க்கைக்கான அடிப்படையாக அமையும்.

நாம் தொன்று தொட்டு கடைப்பிடித்துக் கொண்டு வந்த உணவுப் பழக்கவழக்கங்களை தொடர்ந்தும் பேணி வந்தாலே போதும் எமது உடலை நாம் கட்டுக்கோப்பாக பேணக்கூடியதாக இருக்கும். எனவே முறையான உணவுப் பழக்க வழக் கங்களை கடைப்பிடித்து நாம் ஆரோக்கியமாக வாழ்வதுடன், எமது எதிர்கால சந்ததிக்கும் அதனைப் பயிற்றுவிப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பறக்குது பார்...! உந்துருளி பறக்குது பார்....!



துரைசிங்கம்,
உத்தரவு பெற்ற மொழிபெயர்ப்பாளர்.

ஒரு சொற்ப காலத்துக்கு முன்னர் எனது பழைய இரு சக்கர மோட்டார் வாகனத்தில் திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக சுமாரான வேகத்தில் சென்று கொண்டிருந்தேன். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கல்வியங்காட்டுக்கு அடுத்த ஊரான கட்டைப்பிராயை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்குச் சற்று முன்னால் ஒரு சட்டை அணிந்த இளவயதுப் பெண்மணி தமிழ்நாட்டு உற்பத்தியான Scooty Pep மோட்டார் ஈருளியில் கணிசமான வேகத்தில் கிட்டத்தட்ட 50 கிலோ மீற்றர் வேகத்தில் பறந்து கொண்டிருந்தார். பறந்து கொண்டிருந்த அந்த வாகனத்துக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் அந்த வாகனத்தில் தொங்கிக் கொண்டிருந்த கூடையிலிருந்தோ அல்லது பையிலிருந்தோ ஒரு மரவள்ளிக்கிழங்கு எகிறி விழுந்து பாதையில் உருண்டோடிப் பாதையோரத்தில் ஒதுங்கியது. எனது வாகனத்தை நிறுத்தி எடுத்தால் தவற விட்டவளைப் பிடிக்க முடியாது போய் விடலாமென்பதால் எனது வாகனத்தின் வேகத்தைக் கூட்டி அவளை நிறுத்தி அவளின் வாகனத்திலிருந்து விழுந்த பொருளைப் பற்றிக் கூறிவிடலாமென்ற நினைப்பில் வேகமாக பின்தொடர்ந்தேன். நானும் எனது வாகனத்தைப் போன்று பழையவன். என்னால் அவளின், அவளது வாகனத்தின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.. Scooty Pep பறந்து கொண்டேயிருந்தது. முன்னால் வரும் வாகனத்தைப் பற்றியோ அல்லது பயணிகளை ஏற்றுவதற்காக கல்வியங்காட்டுச் சந்தியில் கரையில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்தைப் பற்றியோ அக்கறைப்படாமல் தனது வேகத்தையும் குறைக்காமல் அந்தப் பெண் தனது பாட்டுக்குப் பறந்து கொண்டேயிருந்தாள். இவ்வாறாக அவளது வேகப் பயணம் தொடர்ந்து கொண்டிருந்த வேளை அவளுக்கு நேர் எதிராக இ.போ.ச. பேருந்து ஒன்று யாழ். நோக்கிச் சுமாரான வேகத்தில் வந்து கொண்டிருந்தது. இவளோ தனது வேகத்தைக் குறைத்தபாடில்லை. முன்னால் வந்த இ.போ.ச. வண்டியைப் பற்றிக் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. பயணிகளை ஏற்றுவதற்காகக் கல்வியங்காட்டுச் சந்தியில் தரித்து நின்ற பேருந்தையும் முந்தித் தனது வேகத்தையும் குறைக்காமல் பறந்து கொண்டேயிருந்தாள். தனது வாகனத்தை தரித்து நின்ற பேருந்துக்குப் பின்னால் நிறுத்தி எதிரில் வந்து கொண்டிருந்த இ.போ.சவுக்கு முறைப்படி வழிவிட்டு அதன் பின்னரே அவள் தனது பயணத்தைத் தொடர்ந்திருக்க வேண்டும். அதையும் செய்யாமல் உயிராபத்தான வகையில் இரு பேருந்துகளுக்கும் இடையில் நுழைந்து, நெளிந்து வளைந்து தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டேயிருந்தாள்.

இவற்றை எல்லாம் நான் எனது வாகனத்தை அந்த இ.போ.சவுக்கு வழி விடும் வகையில் ஆள்களை ஏற்றுவதற்காகத் தரித்து நின்ற பேருந்துக்குப் பின்னால் நின்றபடியே அந்தப் பெண் ஈருருளி வாகனம் வாங்க முதல் கொடுத்தவர்களையும் அவளுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்கியவர்களையும் வைதபடி அந்தப் பெண்ணின் தற்கொலைக்கு ஒப்பான முயற்சியையும் கவனித்தபடி எனது பயணத்தைத் தொடர முடியாத ஏக்கத்தில் விறைத்துப் போய் நின்றேன். இ.போ.ச. சாரதி அவதானமில்லாமலும் சாதுர்யமாக வீதியோரமாக வெட்டி எடுக்காமலும் சற்று வேகமாகவும் வந்திருந்தால் அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் ஒரு விபத்து மரணம் கட்டாயமாக நிகழ்ந்திருக்கும். அந்தப் பெண்ணின் நினைவாஞ்சலியை நீங்களும் நானும் பார்த்துப் படித்துக் கவலைப்பட்டதோடு எல்லாம் மறக்கப்பட்டிருக்கும்.

இந்த மாதிரியான நிலைகளுக்கு சமாந்தரப் பயணம் மட்டும் காரணமில்லை. வீதி ஒழுங்கு முறைபற்றிய தெளிவின்மையும் தான்தோன்றித்தனமும் தான் காரணம். முன்னால் ஒரு சைக்கிள் சென்றாலே எதிரில் வரும் வாகனத்துக்கு வழி விட்டு பயணத்தைத் தொடர வேண்டுமென்பதுதான் விதி முறை. நெளிந்து நுழைந்து உயிரைப் பணயம் வைப்பதில் என்ன இலாபம். இதனை என்றுதான் எமது இளைய தலைமுறை உணர்ந்து உயிரிழப்புக்களைக் குறைக்கப் போகின்றதோ? உயிரிழப்புக்கள் அன்றைய செல்வீச்சுக்கள் மூலமான உயிரிழப்புக்களை மிஞ்சிவிட்டதென்பதை யாரால் மறுக்க முடியும்.

எமது பாடசாலைக் காலங்களில் போக்குவரத்துப் பொலிஸார் பாடசாலைக்குச் சமுகமளித்து போக்குவரத்து விதிமுறைகளைப் பற்றிப் போதித்ததுண்டு. இன்றைய மாணவ சமூகம் இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுமா என்பது ஒரு கேள்விக்குறி? வீதி ஒழுங்குமுறைகளை மீறிச் செயற்படுபவர்கள் பிரதானமாக இளைய தலைமுறையினரான மாணவர்கள் தானே. சமாந்தரமாக மோட்டார் சைக்கிள்களில் கூட அவர்கள் பயணிக்கிறார்களே. சமாந்தரமாக மட்டுமா காதுக்குள் கையடக்கத் தொலைபேசிகளும் திணிக்கப்பட்டிருக்கும். தூரத்திலிருந்து பார்த்தால் யாரோ பைத்தியம் எவரையோ வைது கொண்டு செல்வது போல் தோன்றும்.

இவை யாவும் இன்றைய காலத்துக்கும் எமது நாட்டுக்கும் தேவையா? வீதி ஒழுங்கு பேணல் பொலிஸ் வாகன அனுமதிப் பத்திரத்தைப் பரிசீலிப்பதுடன் நின்று விடக்கூடாது. வீதி ஒழுங்குகளை மீறுபவர்களைச் செம்மையாகத் தண்டிக்கவும் வேண்டும்.★

# யாழில் சுற்றுலாத்துறை..

புதுவருடம் பிறந்திருக்கின்றது. ஆனாலும் தமிழ் மக்களின் மனங்களில் இன்னமும் விடிவு வரவில்லை. மறுபுறத்தில் இருக்கிறதும் அழிந்து போய் விடுமோ என்று எண்ணுமளவுக்கு காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தங்களின் இருப்புக்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், தாங்கள் பிழைத்துக் கொள்வதற்காகவும் தங்களின் இனத்தையே அழிக்கும் கைங்கரியங்களில் பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் சிலர் அரசியல்வாதிகள், சிலர் வியாபாரிகள், பலர் இரண்டும் கலந்தவர்கள்.

யாழ்ப்பாணத்துக்கு என்று தனித்துவமான கலாசாரப் பண்புகள் இருக்கின்றன. எந்தக் காலத்திலும் அழியாத மரபுகளை அழித்து அதன் மேல் தங்களின் வியாபார இலாபங்களைப் பலர் பொறுக்கி எடுத்துக் கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறை வளர்ச்சியடையத் தான் வேண்டும். ஆனால், அதன் பெயரால் கலாசாரச் சீரழிவுக்கு இடம் கொடுக்கக் கூடாது.




யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் ஹோட்டல்கள் பல, எமது தாயகத்தின் கலாசாரத்தை சீரழிக்கும் விதமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள உயரமான ஹோட்டல் ஒன்று தனது விடுதியில் புதுவருட வரவேற்பு கொண்டாட்டத்தை நடத்தியது. முற்றிலும் எமது பாரம்பரியத்துக்கு ஒவ்வாத மேலைத்தேய நடனங்களை - போகப் பொருளாகப் பெண்களை வைத்து குறித்த நடனத்தை ஏற்பாடு செய்தது.

குறித்த நிறுவனத்தின் நிறுவுநர் தலைமையில் குறித்த ஆட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தமிழரான நிறுவுநர், புலம் பெயர் நாட்டிலிருந்து வந்து யாழில் சுற்றுலாத்துறையை வளர்ப்பதாகக் கூறி, எமது கலாசாரத்தை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார் என்று பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தட்டிக் கேட்க வேண்டியவர்களையும் விருந்தினர்களாக அழைத்து வேடிக்கை பார்க்க வைத்திருகிறார்கள். கலாசாரத்துக்காக குரல் கொடுக்கும் பலரும் இவற்றை திரும்பிப் பார்க்கவில்லை.

மக்களாக கண்டு விழித்துக் கொள்ளாவிட்டால் நாளை எங்களுக்கென்று இருக்கும் அடையாளமும் இல்லாமல் போய்விடும்.

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக நியதி என்பதற்கிணங்க பழைய வருடத்தை வெற்றிகரமாகத் தாண்டி புதிய வருடத்தில் புத்துணர்ச்சியுடன் காலடி எடுத்து வைக்கும் உதயனே உன் புகழ் மேன்மேலும் வளர வாழ்த்துகிறோம்.

உலகமெங்கும் நடக்கும் நிகழ்வுகளை உன் கழுகுப் பார்வைகளில் விழுத்தி கயவர்களின் கனவுகளைக் கலங்க வைத்தவனே உனக்கு நிகர் இங்கு யாரும் இல்லை.

உலகமெங்கும் உள்ள தமிழர்களின் ஆதங்கங்களை, உணர்வுகளை தினந்தோறும் சுமந்து துயர் துடைக்கத் தோழனாய் நின்று சரித்திரம் படைக்க தலைவனாய் திகழ்பவனே, உன் வளர்ச்சி கண்டு நீ மட்டுமல்ல நம் தமிழினமே தலை நிமிர்ந்து நிற்கும்.

உன் புகழ் பாட ஒரு பல்லாயிரம் கூட்டம் உன் பின்னே அணி திரண்டு வரும்.

நீ தமிழ் மக்களின் தலை வனாக வாழ்திடு.

லயன்,
மானிப்பாய்.

பல்வேறு இன்பங்களைக் கொடுத்துத் துன்பங்களை ஏற்று அசைக்க முடியாத நம்பிக்கையுடன் வலம் வரும் உதயனே. இந்தப் புதிய ஆண்டில் நீ மேலும் மேலும் பல சாதனைகளைச் செய்து தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். உன் பணி மேன்மேலும் தொடர வேண்டும்.

சிறுவர், இளையோரின் சுவைகளை இனிதே அறிந்து தொடரும் உன் பணி என்றும் சிறக்கும் என்பதில் ஐயம் இல்லை.

எந்தளவுக்கு உன்வேகம் உள்ளதோ அந்தளவுக்கு நீ பல்வேறு தவறுகளைச் செய்து விடுகின்றாய்.

நீ விடும் தவறுகளைப் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டிய போதும் ஏன் அதற்கு நடவடிக்கை எடுக்கிறாய் இல்லை.

நீ விடும் பிழைகளை வைத்து உன்னை விமர்சிக்கிறார்கள். ஏற்கவே முடியவில்லை. உதயனே திருத்திக் கொள் உன்னை. திருப்திப்படுத்து எங்களை. தயவுடன் கேட்கிறோம் நாம்.

கே.கோபாலசிங்கம்,
புன்னாலைக்கட்டுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலித்தனம் மட்டும் வெற்றிக்குப் போதுமா?

■ சுருதிகா செல்வதாஸ்,
திருநெல்வேலி.



“அறிவும், மற்றவர்களுடன் உற வாடும் பாங்கும் மட்டும் இருந்து விட்டால் போதுமா? வெற்றிப் பாதையைத் திட்டமிட்டபடி அடைய விடாமுயற்சி வேண்டுமல்லவா?

நமது வாழ்வின் வெற்றிக்குப் புத்திசாலித்தனம் மட்டும் போதுமா? வேறு என்ன பண்புகள் வேண்டும்?

நம்மைச் சுற்றியிருக்கும் சூழலை மாற்றுவதை விட, சூழலுக்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொண்டு வெற்றி பெறுவதுதான் சிறந்தது.

நாம் சூழலை எப்படிப் புரிந்து கொள்வது? அதற்கேற்ப நம்மை எப்படி மாற்றிக் கொள்வது? எப்படிச் செயற்படுவது? எப்படி வெற்றி பெறுவது? நாம் நம் ஒவ்வொருவரையுமே ஒரு தேருக்கு ஒப்பிடலாம். அந்தத் தேரை மூன்று குதிரைகள் ஒன்றுசவடி நகர்த்துகின்றன.

ஒன்று அறிவு, புத்திசாலித்தனம், அறிவுக்சவர்மை.

நாம் எந்தத் துறையில் வெற்றி பெற வேண்டும் என்றாலும், அதற்குரிய அறிவு வேண்டும். இதுதான் நமது தேருக்குத் தேவையான முதலாவது குதிரை.

ஆனால், அறிவுடையவர்கள் எல்லோரும் வெற்றி பெற்று விடுகிறார்களா? எத்தனையோ புத்திசாலிகளின் வாழ்க்கை படுதோல்வியில் முடித்தி ருக்கிறது.

நெடுங்காலமாக அறிவை மட்டும் தான் ஒருவரது வெற்றிக்கு அடிப்படை என்று கருதி வந்தார்கள். நம் ஒவ்வொருவரின் அறிவுக் சவர்மையை அளப்பதற்கும் முயன்றார்கள். அறிவுக் சவர்மைக் கோவை என்று குறியீட்டையே இதற்காக உருவாக்கினார்கள்.

உலகில் உள்ள எல்லா மனிதர்களின் வெற்றி வாய்ப்புகளையும் இந்த புத்திசாலித்தனத்தை வைத்து அளந்துவிடலாம் என்று பார்த்தார்கள். ஆனால் நடக்கவில்லை.

கடந்த முப்பது வருடங்களில் நம்முடைய அறிவுக் சவர்மையைவிட, நம்முடைய உணர்வுப் பக்குவம், நாம் வெற்றி பெறப் பெரிதும் பயன்படுகிறது என்பதை உளவியல் வல்லுநர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

நம்முடைய குறை நிறைகளோடு நாம் நம்மையே ஏற்றுக் கொள்கிறோமா? நம்மீது நம்பிக்கை இருக்கிறதா? கோபம், பயம் போன்ற உணர்வுகளை நம்மால் வெற்றி கொள்ள முடிகிறதா?

மற்றவர்களிடம் நாம் எப்படிப் பேசுகிறோம்? பழகுகிறோம்? போட்டி என்று வரும்போது அதை எப்படி நளினமாகக் கையாள்கிறோம்?

இவை எல்லாம் நமது வெற்றி வாய்ப்பை நிச்சயம் மாற்றுமல்லவா?

அன்றாட வாழ்க்கையில் இப்படிப் பட்டவர்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகிறார்கள்! நல்ல பிள்ளை பிழைத்துக் கொள்வார் என்றெல்லாம் உணர்வுப் பக்குவம் நிறைந்தவர்களை நாம் பாராட்டுகிறோம். வரவேற்கிறோம்.

இந்த உணர்வுப் பக்குவம்தான் நமது வெற்றித்தேரின் இரண்டாவது குதிரை. இதைப் பற்றியும் நிறைய ஆய்வுகள் நடக்கின்றன. அறிவுக் கோவையைப் போல் உணர்வுக் கோவையை மதிப்பிடும் உத்திகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அறிவும், மற்றவர்களுடன் உறவாடும் பாங்கும் மட்டும் இருந்து விட்டால் போதுமா? வெற்றிப் பாதையைத் திட்டமிட்டபடி அடைய விடாமுயற்சி வேண்டுமல்லவா? எடுத்த காரியத்தை முடிவுவரை தொடரும் திறன் தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் திறன், இவை எல்லாம் வேண்டும்!

இந்த விடாமுயற்சிதான் நமது வெற்றித்தேரின் மூன்றாவது குதிரை.

விடாமுயற்சிக் கோவை என்று இதை அழைக்கிறார்கள். நமது வெற்றித்தேர் நன்றாக ஓட வேண்டுமானால் அறிவுக்சவர்மை, உணர்வுப் பக்குவம், விடாமுயற்சி ஆகிய மூன்று குதிரைகளையும் நாம் நன்றாக வளர்த்துப் பயன்படுத்த வேண்டும்.

இந்த மூன்று குதிரைகளையும் பற்றி நாம் இன்னும் கொஞ்சம் விரிவாகத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

# சுமையில்லா வாழ்வுக்கு வழி என்ன ?

■ இணையவன்



நமது வாழ்வில் உணர்ச்சிகள் எந்த அளவுக்குத் தேவை? அவை எப்போது ஆபத்தானவையாக மாறுகின்றன?

எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப்படுகிறாயே என்று நாம் பலரைப் பார்த்துச் சொல்கிறோம். பலரும் நம்மைப் பார்த்துச் சொல்கிறார்கள்! அப்படியானால் உணர்ச்சிகள் கூடாதா?

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே. அது உணர்ச்சிக்கும் பொருந்தும். உணர்ச்சியில்லாமல் வாழ்வில்லை. ஆசை, காதல், அன்பு, இரக்கம், கோபம், பயம்... இப்படி எல்லா வகை உணர்ச்சிகளும் கலந்ததுதான் வாழ்க்கை. ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு உணர்ச்சிக்கு நாம் ஆட்படுகிறேன். அது இயற்கைதான். ஆனால், என்னை அறியாமல் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன் என்று நாம் வருந்தும்படி ஆகிவிடக்கூடாது.

உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டில் நாம் இருக்கக்கூடாது. அவை நமது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்.

விலங்கினங்கள் உணர்ச்சியால் உந்தப்பட்டுத்தான் வாழ்கின்றன. கோபமும் (முடிந்ததால் மோது) பயமும்தான் (முடியாவிட்டால் ஓடு) விலங்குகளின் அடிப்படை உணர்ச்சிகள். விலங்குகளின் மூளையில் அமிகதலா என்ற ஒரு பகுதிதான் இந்த உணர்ச்சிகளின் பிறப்பிடம். அதன் மூளையிலும் இதே பகுதி இருக்கிறது. அதைப் போலே செயற்படுகிறது.

ஆனால், நமது மூளையில் நிதானமாக, அறிவு பூர்வமாக ஆராய்ந்து முடிவெடுக்கும் பகுதிகள் நன்றாகவே வளர்ந்திருக்கின்றன. நமக்கு நினைவாற்றலும் மிகுதி. ஆனால், ஒன்று இந்த அறிவு பூர்வமாகச் சிந்தித்து வழிகாட்டும் பகுதி கொஞ்சம் மெதுவாகத்தான் செயல்படும்.

முதலில் கோபம்; அதற்குப் பின்னர்தான் யோசனை. முதலில் பயம். அதற்குப் பின்னர்தான் நிதானம். முதலில் அடிதடி. அதற்குப் பின்னர்தான் வாழ்நாளெல்லாம் வருத்தம். நாம் உணர்ச்சிவசப்படும் போது, அதற்கு ஏற்ற நிகழ்ச்சியைப் பார்க்கும் போது, கேட்கும் போது, கொஞ்சம் நிதானம் காட்டப் பழக வேண்டும். சில நிமிடங்கள் இடைவெளி கிடைத்தால் கூட போதும். நமது மூளை ஒழுங்காக வேலை செய்யத் தொடங்கிவிடும்.

ஆனால், அந்த ஒரு சில நிமிட நிதானத்தை நாம்தான் பழகிக்கொள்ள வேண்டும். இதைத்தான் உணர்வுப் பக்குவம் என்கிறார்கள். வயது ஆக, ஆகத்தான் இப்படிப்பட்ட பக்குவம் எல்லாம் வரும் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இன்று உளவியல் மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. சிறு குழந்தைப் பருவத்தில் இருந்தே உணர்வுப் பக்குவத்தைப் பழகிக்கொள்ள இன்று வழி இருக்கிறது.

இதைப்பற்றி இன்று ஏராளமான செய்திகள். ஆராய்ச்சிகள். வானொலி. தொலைக்காட்சி உரைகள். எனவே இதை நாம் இங்கே மேலும் விவரிக்கத் தேவையில்லை. ஆனால் ஒரே ஒரு அடிப்படைப் பாடத்தை மட்டும் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்வோம்.

எந்த உணர்வானாலும் சரி, அதிக ஆழமாக, அதிக காலம் அதில் அகப்பட்டுக் கொண்டு அடிமையானால் அதனால் ஆழமான மனக்காயங்களும் தீய விளைவுகளும் உருவாகும். எவர் மீதும் அதிகமாகக் கோபப்படாதீர்கள். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மன்னித்து மறந்துவிடுங்கள். எவருக்கும், எதற்கும் அளவுக்கு மீறிப் பயப்படவேண்டாம். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகப் பயத்திலிருந்து விலகித் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

எதன் மீதும், எவர் மீதும் அளவுக்கு அதிகமான பகையையோ, பொறாமையையோ வளர்த்துக் கொள்ள வேண்டாம். ஏன் அளவுக்கு அதிகமான வெறித்தனமான அன்புகூட ஆபத்தானதுதான். மற்றவர்களை மட்டுமன்று, நம்மையே நாம் ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும்.

நமது கடந்த காலத் தவறுகளையும் ஏமாளித்தனங்களையும் நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கக்கூடாது. ஏராளமான மன நோயாளிகள் இன்னும் கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. மொத்தத்தில் நமது மனம் மிகையான உணர்ச்சிகளில் அழுத்திக் கடினப்பட்டுப் போகாமல் காப்பாற்றிக்கொள்வோம். நமது மனம் கல்லாக உணர்ச்சிகளால் இறுகிப் போக வேண்டாம். மெல்ல மெல்ல கனமில்லாமல், மென்மையாகக் கனியட்டும். சுமையில்லாத வாழ்வுக்கு சுலபமான வழி இது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org